14 முதல்
மாடர்ன் தியேட்டர்ஸ்
சர்வாதிகாரி
சென்னை
பிரபாத்
ஸாகர்
ஸரஸ்வதி
மற்றும்
தமிழ்நாடெங்கும்
டைரக்ஷன்-
T.R.சுந்தரம்
வசனம்-
ஆசைத்தம்பி



பத்மா: மாமி, நான் வீட்டுக்குப் போக வேண்டும். அவர் வருகிற நேரமாயுடுத்து. நான் வீட்டிலிருக்கும் பொழுதே எள்ளும் கொள்ளும் வெடிக்கும். கதவு பூட்டியிருந்தால் பின் கேட்கவா வேண்டும். வந்ததும் ஈஸிச்சேரில் 'அப்பாடா' என்று உட்கார்ந்துவிடுவார். அவ்வளவு களைப்பு.

ஸீதா: இப்படித்தாண்டி உங்க மாமாவும் செய்துகொண்டிருந்தார்.

பத்மா: மாமாவுமா உங்களிடம் கோபித்துக்கொள்வார்?

ஸீதா: இப்போ இல்லையடி. அதெல்லாம் ரொம்ப நாள் முந்தி. இப்பொழுது என்னவென்றால் ஆபீஸிலிருந்து வந்ததும் ஒரு கப் நல்ல 'டி' சாப்பிட்டுவிட்டு என்னையும் அழைத்துக் கொண்டு காற்று வாங்க கிளம்பிவிடுவார்,

பத்மா: அவருக்கு ஆபீஸில் சுலபமான வேலைபோலிருக்கு,

ஸீதா: அப்படியில்லையடி. அவரே சொல்கிறாரே, அவருக்கு ஒரு கப் நல்ல 'டி' சாப்பிட்டுவிட்டால் களைப்பு நீங்கி சுறுசுறுப்பு வந்துவிடுகிறதாம். நீயும்தான் உன் அகத்துக்காரருக்கு நல்லதா 'டி' கொடுத்துப்பாரேன்.

டி

'டி' என்றால் என்ன? அதுதான் சிக்கனமானதும், களைப்படைந்த உடம்புக்கு ஊக்கத்தையும், தளர்ந்த மனதிற்கு உற்காகத்தையும் மீட்டுக் கொடுக்க ஒப்பற்றதும், சுலபமாக தயாரிக்கக்கூடியதும், எங்கும் கிடைப்பதுமான தேசியபானம். ஒரு கோப்பை 'டி' சாப்பிட்டுப்பாருங்கள் அப்பொழுதே அதன் குண விசேஷங்களை உணர்வீர்கள்.

GTB 37

'ஸென்ட்ரல் டி போர்டா'ரால் வெளியிடப்பட்டது



பெர்குஸன் 24 H.P. (வேபரைஸ்டு ஆயில்) டிராக்டர்

நவீன விவசாயிக்கு எளிதாயும் திடமாகவும் சிக்கல் இல்லாமல் யாரும் ஓட்டக்கூடியதுமான டிராக்டர்கள் தேவை. அத்துடன் இலவச ஸர்விஸும் அத்தியாவசியம், எனவே தான் பெர்குஸன் டிராக்டர்களும் அதன் கருவிகளும் அவர்களுக்கு இன்றியமையாததாய் ஆகிவிட்டது. உங்கள் ஊர் அருகாமையிலுள்ள டீலர்களிடம் உபகருவிகளைப்பற்றிய விபரங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

சென்னை டீலரின்
டெபோவில் டெலிவரி
பெற்றுக்கொண்டால்
RS. 6900/-

டீலர்கள்:

M/s. கமானி என்ஜினீயரிங் கார்ப்பொரேஷன் லிமிடெட்
"ஸாகர் மான்ஷன்"
2, ஜோன்ஸ் தெரு,
பிராட்வே, மதராஸ்-2

FERGUSON SYSTEM

K. B. LTD'/F3

LIPTON'S TEA GIRL
FINEST INDIAN DUST TEA
லிப்டன்ஸ்
டீ கேர்ல் டஸ்ட்
சிறந்த ஸ்ட்ராங்
டீ தருகிறது
LIPTON'S TEA GIRL
FINEST INDIAN DUST TEA
LTGX237M

பரிசு ரூ 6000

முதற்பரிசு ரூ 3000
2வதுபரிசு ரூ 2000
3வதுபரிசு ரூ 1000

விசேஷப் பரிசு. சரியான விடை அனுப்பும் ஒவ்வொருவருக்கும் ஒரு அழகிய வெள்ளி டம்ளர்.

இப்போட்டியின் சீலிட்ட விடை சென்னை ப்ரீமியர் பாங்க் ஆப் இந்தியாவில் டிபாசிட் செய்யப்பட்டுள்ளது.

★ பிரவேசக்கட்டணம் கூப்பன் ஒவ்வொன்றுக்கும் அணு நான்கு மட்டுமே ★

சலுகை: பத்து கூப்பன் அனுப்புபவர் மேற்கொண்டு ஒரு கூப்பன் இலவசமாக அனுப்பலாம்.

முடிவு தேதி 9—6—51

		விடைகள் 1	2
1	விட்டைச் சுற்றித் தோட்டமும் அதில் நிறைய மரங்களுமிருந்தால் இதாக இருக்குமே.	அழகு	நிழல்
2	காதல் என்பது வாழ்க்கையில் ஒரு இதான அம்சம் எனலாம்.	அதிசயம்	அவசியம்
3	என்னதான் ஒருவர் உபசரித்தாலும் இது இல்லாத பொருளைச் சாப்பிட முடியுமா?	தேவை	சுவை
4	இது உள்ள டாக்டருக்குத் தொழிலும் நன்றாக நடக்கும்.	கருணை	திறமை
5	தமது இதை வெளியே சொல்லிக்கொள்ள விரும்பமாட்டார்கள் சிலர்,	கல்வி	தோல்வி
6	இவனுக்குச் சில நியதிகள் இருக்கத்தான் செய்யும்	பணியாள்	பிணியாள்
7	பல...... களைப் பார்த்திருப்பவர்களுக்கு அறிவு விசாலப்பட்டிருக்கலாம்.	நாடு	ஏடு
8	ஒரு தொழிலில் முன்னுக்கு வர இது அவசியம் வேண்டும்	ஊக்கம்	வேகம்
9	தோல்வி நிச்சயம் என்று கண்டால் இது அடைந்துவிடக்கூடும் போர்வீரன்.	மரணம்	சரணம்
10	எதிலும் துணிந்து இறங்குபவர்களுக்கு இதுவும் அதிகம் உண்டாகலாம்.	அபாயம்	ஆதாயம்
11	மனதில் கவலை நிறைந்தவர்கள் இத்தகைய இடத்தை நாடிச் செல்லக்கூடும்.	தனிமை	இனிமை
12	குழந்தை இதிலே தனியாக இருக்கிறதென்றால் அபாயம் நேரலாம்.	கட்டில்	தொட்டில்
13	இதாக ஒன்றைச் செய்து முடித்தால் தனி மகிழ்ச்சியடைவோம் நாம்.	சுயம்	சுபம்

மேலே உள்ள கட்டத்தில் பதிமூன்று குறிப்புகளும் அவை ஒவ்வொன்றுக்கும் இரண்டுஇரண்டு விடைகளும் தரப்பட்டுள்ளன. அதில் குறிப்புக்கு மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும். விடைகளைச் சாதா காகிதத்திலும் எழுதலாம். அச்சுக் கூபபன்களும் தேவையானவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும். விடைகளை வார்த்தைகளாகவும் எழுதலாம். 1—2 என்ற எண்களை உபயோகித்தும் எழுதலாம், பர்முடேஷன் முறையும் அனுமதிக்கப்படும்.

கட்டணத்தை மணியாடர் மூலமேதான் அனுப்பவேண்டும். ம. ஆ. ரசீதும் கண்டிப்பாய் கூப்பனுடன் சேர்த்தனுப்பவேண்டும். ம. ஆ. பாரத்தின் அடிக் கூப்பனிலும் அனுப்புபவரின் முழு விலாசம் கட்டாயம் எழுதவேண்டும். இப் போட்டியின் சரியான விடை ஆனி இதழ் காவேரியில் வெளிவரும். நேயர்களுக்குத் தபால் மூலமும் அனுப்பப்படும். மானேஜரின் தீர்ப்பும் எமது நிபந்தனைகளுமே முடிவானதும் சட்டபடிக் கட்டுப்படுத்துவதுமாகும். நிபந்தனைகள் வேண்டுவோர் எழுதவும்.

கூப்பனும் கட்டணமும் அனுப்பவேண்டிய விலாசம் :- மானேஜர், வரலக்ஷ்மி கம்பெனி
"ஸ்ரீவாஸ்" பல்மநேர் P. O. (சித்தூர் ஜில்லா)

பாயிண்ட்ஸ் முறை நமக்கில்லை! ஒரு தப்பு இரண்டு தப்பாக கணக்காக்கப்படமாட்டாது!

போட்டி 14-ன் சரியான விடை:— (1) புண்ணியம் (2) பானம் (3) புட்பம் (4) சந்தி (5) பொறுப்பு (6) பட்டணம் (7) நடிப்பு (8) மலர்ச்சி (9) பரீட்சை (10) ஒப்பந்தம் (11) அவசியம் 2 1 1 2 2 2 1 1 1 1 2

வரலக்ஷ்மிப் போட்டி – 13 முடிவு

வரலக்ஷ்மிப் போட்டி நெ. 13.

சரியான விடை

1. அடக்கம் 1
2. பணிவு 1
3. வியாதி 2
4. கன் 2
5. திறமை 2
6. பொய் 1
7. பிடிப்பு 2
8. பொறுமை 1
9. வியாபாரம் 2
10. பாசம் 2
11. கல்லாதவன் 1
12. வண்டி 2
13. மனம் 1

We hereby certify that the above is the Solution in original deposited with us, by VARALAKSHMI COMPANY on 14-3-51 in a sealed cover which was opend in our presence to day and that a copy of the above solution has been lodged with the bank.

For PREMIER BANK OF INDIA LTD.

V. Ramanathan 16-4-51

Agent, (MADRAS.)

ஏ வி. வைத்தியநாதன் சென்னை போட்டி 11-ல் ஒரே கூப்பன் அனுப்பி முதற் பரிசு பெற்றவர்,

ஆர். வி நடராஜன் சென்னை. போட்டி 12-ல் முதற் பரிசு பெற்றவர்.

எம். கங்காதரன் மைசூர். போட்டி 13-ல் முதற் பரிசு பெற்றபாக்கியசாலி.

போட்டி–13 பரிசு விவரம்

முதற் பரிசு (சரியான விடைக்கு)

தலைக்கு ரூ. 214—5—0 விதமும்

2வது பரிசு (ஒரு தப்புள்ள விடைக்கு)

தலைக்கு ரூ. 18—10—0 விதமும்

3வது பரிசு (இரண்டு தப்புள்ள விடைக்கு)

தலைக்கு ரூ. 2—14—0 விதமும்

வழங்கப்பட்டன.

பரிசுத் துகைகள் 21—4—51 அன்று அனுப்பப்பட்டன.

பரிசு பெற்றவர்களின் சுருக்கமான ஜாபிதா.

ஜி. கோபாலசுவாமி சிவராமன் தெரு, திருவல்லிக்கேணி சென்னை. எஸ். சந்திரசேகரன் போர்ச்சுகீஸ் சர்ச் தெரு, ஜார்ஜ்டவுன் சென்னை. வி. கே. ஸந்தான கிருஷ்ணன் ரயில்வே குவார்ட்டர் ஆர்க்கோணம். ஏ. வாலாம்பாள், தேத்தாக்குடி வேதாரண்யம் மார்க்கம். எஸ். வஞ்சுளவல்லி அம்மாள் கும்பகோணம், டி. எஸ். ஜயமணி அம்மாள், தெற்கு பொறையார்த் தெரு, மதுரை. மல்லிமாதவய்யர் கீழாவனித் தெரு, மதுரை. ஏ. பாக்கியம், திருப்பச்செட்டி ராமநாதபுரம். வி. எஸ். குருநாதன் செட்டியார், சத்தியமங்கலம். பி. வி. மணி அய்யர், சத்தியமங்கலம். டி. பிரசன்ன சிதம்பரம் முதுகப்பட்டி ஜமீன், சேலம் ஜில்லா. எம். ராதாபாய் செவ்வாப்பேட்டை, சேலம். ஏ. ஜகன்னாதன், கூலிப்பேட்டை வெலிங்க்டன், நீலகிரி. எம். கங்காதரன், ராஜேந்திர நிவாஸ். கே. ஜீ. ஹல்லி, மைசூர்,

[இன்னும் பலர்]

மெரிட் பரிசு பெற்ற கலக்டர்கள் போட்டி—13

முதற் பரிசு, அழகிய வெள்ளி பூஜா தூக்கு பெற்ற கலக்டர்.

ஸ்ரீ எஸ். வி. ராகவாச்சாரி Col. 63
128, பெரிய சௌராஷ்ட்ரத் தெரு.
திருச்சிராப்பள்ளி.

இரண்டாவது பரிசு—ஒரு ஜதை அழகிய வெள்ளி கமல ஜோதி (தீபம்) பரிசுபெற்ற கலக்டர்,

ஸ்ரீ பி. வி. ஈஸ்வர ஐயர் Col. 68
கணேசா ரெஸ்டாரண்ட்,
சத்தியமங்கலம், கோவை ஜில்லா.

போட்டி நேயர்களுக்கு ஓர் நற்செய்தி!

உங்கள் நெடுநாள் குறை இதோ தீர்ந்து விட்டது!

"மணி டிப்ஸ்"

வரலக்ஷ்மிப் போட்டி 15-க்கு

விரிவான விடை விமர்சனம் கொண்ட மாத இதழ் விலை தனிப் பிரதி ஒரு அணுதான்!

(தபால் மூலம் தனிப் பிரதி வேண்டுவோர் 0—1—6 ஸ்டாம்பு அனுப்பவும்.)

ஏஜண்டுகளுக்கு நல்ல கமிஷன். உங்கள் பிரதிகளுக்கு உடனே முந்துங்கள்.

விவரங்களுக்கு:—

மணி டிப்ஸ் ஆபீஸ்
10/A Cattle Shandy Street,
New Pet, Palmaner P. O.
(Chittoor Dt.)

கூப்பன்களும் கட்டணமும் சேகரம் செய்தனுப்ப கீழ் கண்ட இடங்களில் கலக்டர்கள் உடனே தேவை:—

காஞ்சீபுரம், மதுராந்தகம், வேலூர், திண்டிவனம், அரியலூர், லால்குடி, ஜயம்கொண்டம், முசிறி, குளித்தலை, ஈரோடு, திருப்பூர், பெருந்துறை, உடுமலைப்பேட்டை, பவானி, கோபி செட்டிப்பாளையம், மற்றும் கலக்டர்கள் இல்லாத இடங்களிலும் தேவை. கலக்டர்களுக்கு வெள்ளிப் பரிசு பிரதி மாதமும் உண்டு. — மானேஜர்.

இனாம்



எமது நெ. 501 கறுப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவித மயிரும் மைக் கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும். சுருண்டதாகவும், வளரச் செய்கிறது. புட்டி ஒன்று விலை ரூ. 2-4-0; 3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5-15-0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸீ ரிஸ்டு வாட்சும், மோதிரமும் (நியூகோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம் 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்டு வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்

JAI HIND WATCH Co.
P. B. 97, (Dept. 99/91)
AMRITSAR

ரூ. 1500/- இனாம்

நீங்கள்
விரும்புவதை அடையுங்கள்

இனி நீங்கள் கவலைப்படவேண்டாம். இந்த மோதிரத்தை அணிந்து கொண்டவுடன் உங்கள் முயற்சிகள் எல்லாவற்றிலும் வெற்றி பெறுவீர்கள். எவ்வளவு கடின சித்தமுடைய ஆணையோ பெண்ணையோ இதன் மூலம் வசமாக்கலாம். மந்திர சக்தியால் அவர்கள் உங்களுக்குக் கட்டுப்பட்டு, உங்கள் மேல் அன்பு கொண்டு, அடிமைபோல் உங்கள் காலடியில் கிடப்பார்கள். உங்களைப் பிரிய நேர்ந்தாலோ துடித்துப் போவார்கள். வியாபாரம், குதிரைப் பந்தயம், விற்பனை, வியாஜ்யம், பரீட்சை இவைகளில் இது உங்களுக்கு வெற்றி யளிக்கும் மலடிகளுக்கு புத்திரப்பேறு ஏற்படும். இறந்தவர்களுடன் பேசலாம். உங்கள் மூதாதைகள் வைத்திருக்கக்கூடிய புதையல்கள் உங்கள் கனவில் உங்களுக்குத் தெரியவரும், கெட்ட கிரகங்களின் கெடுதலை இதுபோக்கி, கொடிய வியாதிகளைக் குணமாக்குகிறது. சூரியன் மேற்கில் உதயமானாலும் ஆகலாம், ஆனால் இந்த மோதிரம் மட்டும் பயனற்றுப் போகாது. நூற்றுக்கு நூறு இது வெற்றி அளிக்கும். விலை ரூ. 0–8–0 விசேஷ சக்தி வாய்ந்தது ரூ. 1–8–0. இதைப் பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1500 இனாம். திருப்தியில்லையேல் கிரயம் வாபஸ். உங்கள் தேவைக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு ஆங்கிலத்தில் எழுதுங்கள்.

BENGAL MAGIC HOUSE
(D. 190)
Sitle Temple, AMRITSAR.

இவர்கள் அனைவர்க்கும் ஆரோக்கியத்தைக் காக்க உதவுகிறது; தகப்பனார் உழைப்பினால் தளர்ச்சி அடைந்தபோதும் தாயார் வியாதி குணமடைந்து வரும்போதும் பிள்ளை வளர்ச்சிக்கு வேண்டிய உற்சாகத்தை கொடுத்து உதவுகிறது.

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட்
மெட்ராஸ் 17.

Sub Distributors for Tanjore Dt.

Selva Electric Stores

Pothamarai South

KUMBAKONAM

இலவசம்



எமது நெ. 501 கறுப்புக் கூந்தல் தைலத்தை (ரிஜிஸ்டர்ட்) உபயோகிப்பதின் மூலம் எல்லாவித மயிரும் கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாவும் வளரச்செய்கிறது. புட்டி ஒன்று விலை ரூ. 1—12—0; 3 புட்டிகள் (பூராமுறை) ரூ. 4–0–0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட்வாட்சும், மோதிரமும் (நியூகோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்தரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 7 பான்ஸி ரிஸ்டுகளும். 7 நியூ கோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்

Sanyasi Ayurvedic Pharmacy (c. k.)
Post Box No. 95,
AMRITSAR.

இனாம்

மிகுந்த மாஜிக் சக்தியினால் சூர்ய கிரஹணத்தன்று தயாரிக்கப்படும் இந்த மாஜிக் மோதிரம் உறுதியான பயனைப் பெறச்செய்கின்றது. தனது சக்தியினால் மன அமைதி, செல்வம், எந்தக் காரியங்களிலும் வெற்றி அடையச் செய்கின்றது.

எங்கள் ஆசிரமத்தின் வருஷாந்தரக் கொண்டாட்டத்தை முன்னிட்டு மிக்க சக்திவாய்ந்த இந்த "தந்திர மோதிரம்" ஆயிரம் (1000) வழங்கத் தீர்மானித்துள்ளோம். சமயத்தை இழந்துவிடாமல் இன்றே மாதிரியை இனாமாகப் பெற எழுதுங்கள்.

தங்கம் இனாம்

எங்கள் மினர்வா தங்கத்தைப்பிரபலப் படுத்துவதற்காக வைரப்பட்டையடித்த இரு ஜதை வளையல்களும், ஒரு புது டிஸைன் நெக்லஸ்ஸும், ஒரு ஜோடி காதணிகளும், 2 பம்பாய் பாஷன் மோதிரங்களும் அடங்கிய ஒரு சாம்பிள் பெட்டியுடன் அதிகப்படியான 2 தோலா மினர்வா தங்கத்தை முழுவதும் இலவசமாகத் தருவது என நாங்கள் முடிவு செய்திருக்கிறோம்.

இலவச தங்கமும் சாம்பிள் பெட்டியும் பெற இன்றே எழுதுங்கள்.

முந்துங்கள் இல்லையேல் இந்த அருமையான சந்தர்ப்பத்தை இழந்துவிடுவீர்கள்.

ஆங்கிலத்தில் எழுதவும்.

MAHAMUNI JYOTISH ASHRAM (c. k.)
ANADNAGAR, AMRITSAR.

IMPERIAL CORPORATION (c. k.)
Halka No. 22, AMRITSAR.

Agent: T. T. KRISHNAMACHARI & Co. 12 A, Lingha Chetty Street, G. T. MADRAS.

காவேரி

[stamp]

பொருளடக்கம்

கர மலர் 10 | வைகாசி இதழ் 10

இந்த இதழில் ... 11

எது இன்பம்? — (புதிய தொடர் கதை) ... 13
வே. ரங்கராஜன்

அபவாதம் ... 24
கேதாரி

மாவலிப் பொறிகள் ... 28
ராமய்யா

பண்டாரம் மகன் ... 31
சபரி

ஆயிரம் வருஷத்து நெய் ... 36
எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

மன்னிப்பு உண்டா? ... 41
கோமதி சுப்ரமணியம்

அன்புக் கட்டளை ... 46
"விந்தியா"

பட்டு உற்பத்தி ... 53
அ. வேணுகோபாலன்

சிதைந்த உள்ளம் ... 61
ஜி. எஸ். மணி

மணல்மேடு ... 69
மாரார்

லண்டன் கடிதம் ... 75
லீலா கோபாலன்

ஸ்ரீ ஸ்துதி ... 79
ஏ. கே. ராகவாச்சாரியார்

குறிப்பு:
'காவேரி'யில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள், அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

199325
சென்னை-600 008

மேன்மையின்
பெருமை அநேக வருஷ
உழைப்பிற்குப் பின்னும் விளங்கும்



ஸைக்கிள்கள்
ஸைக்கிள் சாமான்கள்
பெராம்புலேட்டர்கள்
குழந்தை வண்டிகள்
இவைகளில்
உயரிய ரகத்திற்கு

நம்பி வாங்க

இங்கிலீஷ் சைக்கிள் & மோட்டார்
இம்போர்டிங் கம்பெனி லிமிடெட்

2/9 பிராட்வே :: :: மதராஸ்1.

தந்தி :—"ஸைக்கிள்ஸ்" போன்: 3168

காவேரி

கர ௵ மலர் 10	"சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார்	வைகாசி இதழ் 10

இந்த இதழில்

நமஸ்காரம். ஜெய் ஸோம்நாத் முடிவுற்றதிலிருந்து அடுத்த தொடர்கதை என்ன என்று அறிய வாசகர்கள் மிகவும் ஆவலுற்றுள்ளார்கள், கதையின் பெயரைப் பிரகடனம் செய்து அவர்கள் ஆவலைத் தூண்டி, பிறகுதான் தொடரைப் பிரசுரிப்பது பத்திரிகைகளின் வழக்கம். இதற்கு மாருக இத்தடவை இந்த இதழிலேயே புதிய தொடர் கதையை ஆரம்பித்துவிட்டோம். வே. ரெங்கராஜன் எழுதிய "எது இன்பம்?" என்னும் தொடர் சாலச் சிறந்தது. வாசகர்களிடையே அதற்கு அமோக வரவேற்புக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

மாவலிப்பொறிகள் என்ற கட்டுரையில் ராமையா சில சமூகப் பழக்க வழக்கங்களுக்கு நாம் எப்படி அடிமையாக இருந்தும் பேச்சில் மட்டும் சுயேச்சை கொண்டாடி நம்மையே ஏமாற்றிக்கொள்ளுகிறோம் என்பதைத் தம் வழக்கமான ஹாஸ்ய நடையில் எடுத்துக் காட்டி, பட்டுப் பூச்சியைப்போல் தான் இயற்றிய கூட்டிலேயே அடைபடாமல், எட்டுக்கால் பூச்சிபோல் அதினின்று விலகி நின்று வாழவேண்டும் என்னும் பெரிய தத்துவத்தை எடுத்துக்காட்டுகிருர். ஏழை படும் பாடுதான் பண்டாரம் மகன் என்ற சபரி சிருஷ்டித்த கதை.

ஸ்ரீமான் எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் ஆயிரம் வருஷத்து நெய்யைப்பற்றி ஓர் அரிய கட்டுரை எழுதியுள்ளார். மன்னிப்பு உண்டா என்ற கோமதி சுப்பிரமணியத்தின் சிருஷ்டியும், விந்தியா எழுதிய அன்புக் கட்டளையும் ரஸமான கதைகள். பட்டு உற்பத்தியைப்பற்றி அ. வேணுகோபாலன ஓர் ருசியுள்ள கட்டுரை எழுதியுள்ளார். பல விஷயங்கள் நாம் அதினின்று தெரிந்து கொள்ளவேண்டும். ஜி. எஸ். மணி சிதைந்த உள்ளம் என்ற கதையில் பேதைப் பெண்களின் ஹ்ருதயத்தைத் திறந்துகாட்டுகிருர். அதன் நாடித் துடிப்புகள் நம் இதயத்திலும் எதிரொலிக்கின்றன.

'மாரார்' மணல் மேட்டில், இப்பொழுது அடிபடும் 'மார்க்' பரீக்ஷை முறையை அலசிக் காட்டுகிருர். லண்டன் கடிதம், ஸ்ரீ ஸ்துதி இவற்றை இந்த இதழில் காணலாம். 'கேதாரி' என்ற எழுத்தாளரைப்பற்றித் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தத் தேவையில்லை. அபவாதத்திற்கு யாரும் இணங்கியேயாகவேண்டும் என்பதை ஓர் கதை மூலம் எடுத்துக் காட்டுகிருர். இந்திரன், அஹலிகை, சீதை, ராமன்—யாரும் இதற்குத் தலை வணங்கியேயாகவேண்டும். படித்துப் பாருங்கள்.

நமது அட்டைப்படத்தை அலங்கரிப்பது யார் என்பதை எடுத்துக்கூறத் தேவையில்லை. தாகூர் எழுப்பிய சாந்திநிகேதன் என்ற ஸர்வ கலாசாலை மத்திய அரசாங்க உதவியின்பேரில் இனி மத்திய கலாசாலையாக மாறும். கவி தாகூர் காட்டிய வழியைப் பின்பற்றித்தான் அது நடத்தப்படும். பண்டித நேரு அவர்கள் அக்கலாசாலைக்கு ஆசாரியராக (Chancellor) இருப்பார். மத்திய அரசாங்கத்தார் விச்வ பாரதியைச் செவ்வனே நடத்த உதவியளிக்க முன் வந்திருப்பது மிகவும் போற்றத்தக்கதேயாகும். கவி சக்ரவர்த்தி தாகூரின் ஆன்மா இதைக்கேட்டு இன்பமுறும் என்பதில் ஐயமில்லை.

குணத்தில்
சிறந்தது

மைதீன் புகையிலை

தாம்பூலப் பிரியர்கள்
மிகவும் விரும்புவது

டிரேட் மார்க்

E.S.MYDEEN & CO.
இ.எஸ்.மைதீன்
TRADE MARK
KUMBAKONAM

ரிஜிஸ்டர் நெ 7479

E.S.மைதீன் & கோ

கும்பகோணம்

கலியாண விசேஷ காலத்தை முன்னிட்டு

எல்லாவிதமான

பட்டு & நூல் ஜவுளிகளும்

கிடைக்கும் இடம்

மயிலாப்பூர்
ராதா ஸில்க்
எம்போரியம்
14, சன்னிதித்தெரு
மதராஸ்-4
டெலிபோன் நெ. 84188

ருக்மணி ஸில்க்
எம்போரியம்
49, பெரியதெரு
கும்பகோணம்
டெலிபோன் நெ. 58

எது இன்பம்?

வெ. ரங்கராஜன்

அத் : **1. காய் உதிர்ந்தது**

ஸர். சிவஞானம் மரணப் படுக்கையில் கிடந்தவாறே கண்களை உருள உருள விழித்தார். மேலே நோக்கி ஏதோ பேச முயன்றார். வார்த்தைகள் முழு ஒலி வடிவம் பெறாமல் சிதைந்து தொண்டையுள்ளேயே சிக்கி மறைந்தன.

"ஐயோ பாவம்! சாகவே மனமில்லை; யமனிடத்தில்கூட வாதாடுகிறார்!" என்று முணுமுணுத்தனர் சூழ்ந்திருந்த முதியவர்.

"அம்மா! லீலா! அப்பா என்ன சொல்கிறார் கேள்! குனிந்து காதை வாயருகில் வைத்துக் கேள்!" என்று பங்கஜம்மாள் பதை பதைத்தாள்.

அவள் நினைத்தது வேறு.

"......'பலூன் பாங்கியி'ல் ஒரு லக்ஷம் ஸேவிங்க்ஸ் வைத்திருக்கிறேன்; செக் புத்தகம் என் லா புத்தக அலமாரியுள் இருக்கிறது" என்பதுபோன்ற மிக முக்கியமான செய்தியொன்றை அவர் சொல்லமாட்டாரா? என்று அவள் எதிர்பார்த்தாள்.

பாவம்! — சிவஞானம் ஆவி பிரியும் போது பேசிய பேச்சுக்கூட பங்கஜம்மாளின் மனத்துக்கு உகந்ததாக இல்லை!

சில வினாடிகளில் இந்த ஏமாற்றம் அவள் மனதிலிருந்து மறைந்தது. சவத்தின்மீது விழுந்து அழ ஆரம்பித்தாள்.

தன் தந்தையின் ஆவி பிரியும் வரையில் மரணப் படுக்கையின் அருகிலேயே உட்கார்ந்தான், கணபதி. தந்தை சாவுடன் போராடிய சோகக் காட்சியைக் காண அவன் உள்ளம் நொந்தது. ஆண்மையை மறந்து அழுதேவிட்டான்.

முதல் நாள் இரவு நடந்த சோக சம்பவம் கணபதியின் நினைவிற்கு வந்தது.

சாவை எதிர்நோக்கியிருந்த சிவஞானம் மனதிலே என்ன எண்ணம் எழுந்ததோ! தன் ஒரே மகளான லீலாவை அருகில் அழைத்து, கணபதியின் கையில் ஒப்படைத்தார். வைத்த கண் வாங்காமல் இருவரையும் கொஞ்ச நேரம் பார்த்துக்கொண்டே இருந்தார். பிறகு பங்கஜம்மாளைப் பார்த்து, "தண்ணீர் கொண்டு வா!' எனச் சைகை செய்தார். அவள் எழுந்து உள்ளே சென்றதும் தன் தலையணையடியிலிருந்து ஒரு கவரை எடுத்து லீலாவின் கையில் கொடுத்து, தம் வாயைப் பொத்தி, சைகை செய்தார்.

லீலா கவரை மறைத்துக்கொண்டாள். பின்னர் சிவஞானத்தின் கண்கள், கூடத்

திலிருந்த படங்களைப் பார்த்துக்கொண்டே சென்று ஒரு காலண்டரில் நிலைத்து நின்றன. ஆயுள் இன்ஷியூரன்ஸ் திட்டத்தின் அவசியத்தை விளக்கும் விளம்பரக் காலண்டர் அது. அதிலும் கலை நுணுக்கம் இருந்தது.

கவினுற வளர்ந்திருந்த பூமரச் சிறு கிளைகளினூடே பறவைக் கூடு ஒன்று. அதனுள்ளே அரைகுறையாக இறகு முளைத்த இரு குஞ்சுகள். அவை தம் அலகை அகல விரித்து இரையை எதிர்நோக்கியிருக்கின்றன. தன் அலகிலே இரையுடன் பறந்து வந்து, அவைகளின் அருகே உட்காரும் தாய்க்குருவி. பின்புறத்திலிருந்து அகன்ற வாயுடன் அதை விழுங்க வரும் மலைப்பாம்பு!

இப் படத்தைப் பார்த்தவாறே இருந்த சிவஞானத்தின் கண்களினின்று இரு முத்துக்கள் வழிந்தோடின.

பங்கஜம்மாள் வெந்நீரை ஆற்றிக்கொண்டே அங்கு வந்தாள். படத்திலே கண்ணை நிலைக்கவிட்டிருந்த அவர் பங்கஜம்மாளைத் திரும்பிப் பார்த்து, "தண்ணீர் வேண்டாம்!" என்கிற பாவனையாகத் தலையை அசைத்துவிட்டார். டம்ளரைத் தட்டென்று அருகில் இருந்த ஸ்டூல் மீது வைத்துவிட்டு முகத்தைச் சுளித்து முணு முணுத்துக் கொண்டாள், அவள்.

லீலாவும் கணபதியும் தம் கண்களில் வழிந்தோடிய நீரைத் துடைத்துக்கொண்டனர். இதைப் பங்கஜம்மாள் பிரமித்துப் பார்த்தாள்.

* * *

மறுநாள் காலையிலிருந்துதான் அவர் கண் பஞ்சடைய ஆரம்பித்தது. சைகை காட்டும் சக்தியைக்கூட இழந்து கிடந்தார். மூச்சு மேலே மூந்த வாரியாக வந்துகொண்டிருந்தது. இனி மேல் பிழைத்தெழுவார் என்ற நம்பிக்கை குலைந்தது. நெருங்கிய உறவினருக்குத் தந்தி கொடுத்தான் கணபதி. அன்றைய இரவு ரெயிலில் நெருங்கிய உறவினர் அனைவரும் வந்து சேர்ந்தனர். இரவு பன்னிரண்டு மணி வரையில், 'இதோ, அதோ,' என்று இழுத்துக்கொண்



யிருந்து, ஒரு மணி சுபாருக்கு நின்றுவிட்டது, சுவாசம்.

அத்: 2. பெண் மனம்

பங்கஜம்மாள்தான் தன் கணவரின் அகால மரணத்திற்குக் காரணம். ஆனால், இதில் விந்தை என்னவென்றால், அவள் இதை ஒப்புக் கொள்ளமாட்டாள்

மனைவி என்ற விசேஷ சலுகையுடன், சிவ ஞானத்தின் சொந்த வாழ்வின் ஒவ்வொரு துறை யிலும் தலையிடுவதில் அவளுக்கு ஒரு சபலம்.

மணமான புதிதில் தன்மீது அன்பு செலுத்த வில்லை என்று அடிக்கடி சண்டை பிடிப்பாள். அவர்மீது இல்லாத பொல்லாத சந்தேகங்களைக் கற்பனை செய்துகொண்டு மன வேதனைப்படுவாள்.

மணமான பிறகும், நீண்ட நாள் வரை வக்கீல் பாஷ்யத்திடம் சிவஞானம் ஜூனியராக இருந் தார். என்றாவது ஒரு நாள், சிக்கலான வழக் கிற்குச் சட்டக் குறிப்பு எடுக்க ஆரம்பித்து விட் டால் எடுத்து முடிக்க இரவு பன்னிரண்டு மணி கூட ஆகிவிடும். தம்மை மறந்து அதிலேயே ஈடுபட்டு இருந்துவிடுவார். 'தனிக் குடித்தனம் செய்கிறோமே துணைக்கு யாருமில்லாத தனி வீட் டில் இளம் மனைவி எப்படி இருப்பாள்? அவளும் உண்ணாமல் பசியுடன் காத்திருப்பாளே! என்ற எண்ணமெல்லாம் இருக்காது. கர்மமே கண்ணாக இருந்து, அது முடிந்ததும், "ஐய்யோ! நேரம் ரொம்ப ஆய்விட்டதே; வீட்டுக்குப்போனால் பங்கஜம் 'முகாரி' பாட ஆரம்பித்துவிடுவாளே நான் என்ன சொன்னாலும் அவள் பல்லவிதானே அவளுக்குப் பெரிதாக இருக்கும்!" என்று சொல் லிக்கொண்டு ஓட்டமும் நடையுமாக வீட்டுக்கு வருவார். இவ்வளவு பதட்டத்துடன் வந்தா லும் பங்கஜம்மாள் வாய் திறந்து ஒரு வார்த்தை கூடப் பேசமாட்டாள். பதுமையைப்போல் இலையில் உணவைப் பரிமாறிய பிறகு கூடத்துக் குப் போய்விடுவாள். மறு சாதம் போடவேண் டிய சமயத்திற்கு வந்து போடுவாள். மேலும் இல்லாத காய்கறிகளைக் கேட்காமலே வைத்து விட்டு, எல்லாவற்றையும் எடுத்து மூடி வைத்து, சோற்றுத் தவலையில் தண்ணீரை விட்டு விடு வாள். பாலும் வெற்றிலைத் தட்டும் படுக்கை யறைக்குப் போய்விடும். சாப்பிடாமல் கூடத்து வெறுந்தரையில் படுத்துவிடுவாள்.

அன்று இரவு சிவஞானத்திற்குப் பெருஞ் சோதனை நாளாக வந்துமுடியும். அகாரணமாய் ஆணவம்கொண்டு அப்படிச் செய்யும் அவள் படட்டுமே! என்ற எண்ணம் ஒரு பக்கம். 'ஐயோ, பாவம்! நம்மை அடுத்து நம்நிழலில் வசிக்க வந்த பெண்ணல்லவா?' என்ற மனச்சாட்சியின் சுட்டு. பங்கஜம்மாளைச் சமாதானம் செய்து நீர்விட்ட சாதத்தைப் பிழிந்து போட்டுச் சாப்பிடச் செய்வார், அவள் கையால் மறுபடியும் தாம்பூலம் வாங்கிப் போட்டுக் கொண்டு, அவள் மனதைக் குளிரச் செய்து, இரு வரும் உறங்க அன்று இரவு இரண்டு மணிக்கு மேலாகிவிடும்!

பங்கஜம்மாளின் இந்த மனோ வியாதியைக் கண பதி பிறந்து சற்று நிவர்த்தி செய்தான். அத் துடன், தன் கணவர் தன்னை மணம் செய்து கொள்வதற்கு முன்னமே, வண்ணப் பாட்டாடை யுடுத்து, மேனி மினுக்குடன், 'எப்போ வரு வாரோ!' என்று கண்ணாடி அலமாரியுள் ஏங்கித் தவங் கிடக்கும் சட்டப் புத்தகங்களை மணம் செய்துகொண்டு விட்டார்!' என்பதை உணர்ந் தாள். இத்துடன் குழந்தை பிறந்த பிறகு கண வரின்மீது ஒருவிதப் பற்றும் பரிசுத்த அன்பும் தளிர்விட்டன. கோபித்துச் சண்டை பிடிக்க அவளுக்குப் பொழுதும் இருப்பதில்லை.

உரிமை வாதும் சந்தேகப் பித்தமும் அவ்வாறு ஒருவிதமாக நீங்கின. ஆனால் சபலங்கள் மாறிப் புது உருவத்தில் கிளைத்தன. குழந்தையைப் பெற்றெடுத்தவுடனே முன்பிருந்த நாணம் எங்கோ மறைந்துவிட்டது.

அவளது சமூகப் பிரவேசம் பாட்டுக் கச்சேரி களுக்குச் செல்வதிலிருந்து தொடங்கியது. அது முதல் சிவஞானம் அவர்களுக்கு மனவேதனை ஆரம்பமாயிற்று என்று சுலபமாகச் சொல்லிவிட லாம். பங்கஜம்மாளின் நடையுடை பாவனை களில் பெருமிதம் உற்பவித்தது. புதுப் புதுப் பட் டுப் புடவைகள் ஒன்றன் பின் ஒன்றாய்ப் பெட்டி யுள் குடிபுகுந்தன. அதுவரை அழகானவை என்று எண்ணியிருந்த ஆபரணங்கள் அழகற்ற வையாக மாறிவிட்டன. எவ்வளவு நவீன தினு சில் நகைகள் செய்யப்பட்ட போதிலும் அவைகள் அதிக பக்ஷம் மூன்று மாதங்கள் தான் ஜீவித்திருந்தன. அதற்குமேல் அவைகள் அன்றைய நவீன தினுசாகப் புனர் ஜன்ம மெடுத்தன! இப்படிச் செய்வதில் கண வரின் உதவியைப் பங்கஜம் நாடுவதில்லை. இந்தக் கலையில் முன்பே அனுபவம் அடைந்திருந்த எத் தனையோ சிநேகிதிகள் அவளுக்கு உதவினார்கள். ஆனால் யானை தேய்ந்து கட்டெறும்பான கதை யாய், தன் நகைகளின் மதிப்பீடு எவ்வளவு குறைந்துபோயிற்று என்பது அவளுக்குத் தெரி யாமல் இல்லை. இருந்தாலும் 'நரிக்குறத்தி' மாதிரி எத்தனைநாள் பழைய தினுசு நகைகளையே போட்டுக்கொண்டிருப்பது?

பங்கஜம்மாள் இப்படியெல்லாம் செய்தபோதி லும் அவளைக் குறை சொல்லவோ மனம் வெம்பிக் கடுமையான வார்த்தைகள் சொல்லவோ இல்லை. எக்கேடாவது கெட்டுப் போகட்டும், தம் அலு வல்களில் குறுக்கிடாமல் இருந்தால் போதும் என்று இருந்துவிட்டார். ஆனால் இதற்கெல்லாம் பணம் கொடுத்தாக வேண்டுமே! வந்ததை விடா மல், வழக்கத்திற்கு அதிகமாக, நான்கைந்து கேஸ்

கட்டுக்களை வாங்கிக்கொண்டார். இரவு பகலாக மூளையைக் குழப்பிப் பாடுபட்டார்.

அத்: 3. எதிர்காலம்

இப்படிக் கொஞ்ச நாட்கள் கழிந்தன. குழந்தை கணபதி வளர்ந்து பள்ளிக்கூடம் சென்று படித்துவரத் தொடங்கினன். விசாரமின்றி இருந்த பங்கஜம்மாளின் மனதிலே திடீரென்று ஒருநாள் எதிர்கால வாழ்வின்மீது அபார அக்கரை உண்டாய்விட்டது. அது சிவஞானம் பத்தாயிரம் ரூபாய்க்கு ஆயுள் இன்ஷியூரன்ஸ் செய்துகொள்வதில் முடிந்தது,

இது நடந்த நான்கு வருஷங்களுக்குப் பிறகு லீலா பிறந்தாள். இதைத் தொடர்ந்து பங்கஜம்மாளின் மனோநிலை சற்று மாறுதல் அடைந்தது. பெண் பெற்றவர் பாடும் பல்லவிகள் எல்லாம் அவள் நினைவிற்கு வந்தன. 'இனிமேல் ஊதாரித்தனமாக குடித்தனம் செய்யக்கூடாது. மீத்து வைக்கவேண்டும், என் பெண் ஒரு சொட்டுக் கண்ணீரும் விடக்கூடாது!' என்று எண்ணிக் கொண்டாள். இவ்வெண்ணம் செயலாகப் பரிணமித்தது. குடும்பத்தில் சிக்கனப் புரட்சி உண்டாகியது.

லீலா பிறந்த மறு மாதம் சிவஞானம் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் ஆனர். புதிதாக வந்த பதவிக் குதிரை மீது ஆரோகணித்துப் பலர் முன் பெருமித நடைநடக்கச் சபலந்தட்டியது. அவராகவே பங்கஜம்மாளைச் சங்கீதக் கச்சேரிகளுக்கு அழைத்துச் சென்ருர். உதவி—நடன அரங்கேற்ற வைபவங்களுக்கும், உதவி-நாடகக் காட்சிகளுக்கும் தாராளமாகப் பணம் கொடுத்து உயர்ந்த இடங்களுக்கு டிக்கட்டுகள் வாங்கினுர்.

சிக்கனம் செய்ய நினைத்த பங்கஜம்மாளுக்கு இது பிடிக்கவில்லை. பத்து ரூபாய் நோட்டுகளையும் ஐந்து ரூபாய் நோட்டுகளையும் அவர் வேணுமென்றே எரியும் அடுப்பினுள் போட்டுவிட்டு வேடிக்கை பார்ப்பதைப்போல் இருந்தது அவர் செய்கை. அவளால் இயற்கையான படபடப்பை அடக்கிக்கொண்டிருக்க முடியவில்லை. இப்படி ஊதாரித்தனமாகச் செலவு செய்வதனல், பின்னல் வரவிருக்கும் பலா பலன்களை, ரேடியோப் பிரசங்க ரீதியில் பொரிந்து முடித்தாள். வரும் மாதம் முதல் தேதியிலிருந்து குடும்ப வரவு செலவுக் கணக்கை அவளே நடத்தப் போவதாகச் சொன்னுள். அவர் செய்து வந்த பல அனுவசியமான செலவுகளை இனியும் செய்து வருவது தனக்குச் சரியெனத் தோன்றவில்லை என்ருள். இப்படிச் செய்யாவிட்டால் என்ருவது ஒரு நாள் தானும் தன் குழந்தைகளுமாக நாற்சந்தியில் நின்று தவிக்கவேண்டுமென்ருள்.

'கேவலம் பணம். இன்று வரும், நாளை நம்மை விட்டுச் செல்லும்! எப்போதும், 'செல்வம்! செல்வம்!' என்று சொல்லிக்கொண்டேயிருந்து செத்தே விடுவது! இதுதான மனிதனுக்குச் சதம்? இதைவிட உயர்ந்தது இல்லையா? இதற்காகவா மனிதப் பண்பையும் பிறவற்றையும் புறக்கணித்து விடுவது?'—இப்படி எண்ணினுர் சிவஞானம். பங்கஜம்மாளின் போக்கு அவருக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. மண்வீடு கட்டிப் பொம்மைக் கல்யாணம் செய்ய நினைக்கும் குழந்தையைப்போல், எதிர்காலத்தைப் பணத்தால் கட்டிப் பிடித்துவிட முயலும் அந்தப் பேதைப் பெண்ணின்மீது அவருக்குப் பரிதாபந்தான் உண்டாயிற்று!

மறு மாதம் முதல் தேதி சம்பளம் வாங்கி வந்து, "எங்கே பேசுகிற மாதிரி காரியத்தில் செய் பார்க்கலாம்!" என்று அப்படியே பங்கஜம்மாளின் கையில் கொடுத்தார்.

அத்: 4. வரவும் செலவும்

வீட்டுக் கணக்கு எழுதுவதற்கென்று ஒரு நோட்டு வாங்கினுள், பங்கஜம்மாள். மாத வரவு, தினச் செலவு, நிலுவை என மூன்று பகுதிகள் பிரித்துக்கொண்டு கணக்கு எழுதிவர ஆரம்பித்தாள்.

மூன்ரும் தேதி காலையில் பேப்பர் போடும் பையன் சந்தாத் தொகை கேட்க வந்தான். பணம் கொடுத்துவிட்டுக் கணக்குப் புத்தகத்தில் எழுதினுள். 'தினப் பத்திரிகைக்காகக் கொடுத்தது ரூ. 3-14-0,' ஒரு அனுவசியச் செலவாக அவளுக்குப்பட்டது. தினம் பத்திரிகை வருகிறது என்ற பெயரே தவிர சிவஞானம் அதிலேயே மூழ்கி விடுவதில்லை. தினசரி மாறிக்கொண்டு போகும் அரசியல் விவகாரங்களிலே அவர் மனம் ஓடுவதில்லை. ஐந்து அல்லது பத்து நிமிஷங்களுக்குள் ஒரு அவசரக் கண்ணோட்டிவிட்டுப் பழம் பத்திரிகை கட்டுள் திணித்துவிடுவார். இதைப் பங்கஜம்மாள் எத்தனையோ முறை கவனித்திருக்கிருள்,

இப்படி ஐந்துநிமிஷ நேரம் புரட்டிவிட்டுப் போட்டுவிடச் சொந்தமாகப் பத்திரிகை வாங்க வேண்டுமா என்ன? கோர்ட்டில் தினப்பத்திரிகை சர்க்கார் செலவில் செவருகிறது. மத்தியான இடைக்கால ஓய்வில் அப்பத்திரிகையைப் புரட்டக்கூடாதா? அப்படிச் செய்தால் மாதம் நான்கு ரூபாய் மீதமாகுமே! இப்படியெல்லாம் மீத்து வைக்காமல் வேறு எப்படியாகும்? ஆகட்டும்; இந்த மாதத்தோடு இதை நிறுத்திவிடவேண்டும்!' என்று சங்கற்பம் செய்துகொண்டாள்.

இதைத் தொடர்ந்துவார, பக்ஷ, மாத மூன்று மாதப் பத்திரிகைகளும் அவசியமற்றவையாகப் பட்டன அவளுக்கு. "லாயர்ஸ் ரெவ்யூ", "ஏழையும் சட்டமும்" (The underdog and the law) "தராசு!" (Balance) என்ற மூவகைச் சட்டப் பத்திரிகைகள் வாரந்தோறும் வந்தன. இவைகளால் மாதம் பதின்மூன்று ரூபாய் செலவா

யிற்று. ஆயிரக்கணக்கில் செலவிட்டு வாங்கிய சட்டப் புத்தகங்கள் கண்ணாடி பீரோக்களில் தவம்செய்ய இப்பத்திரிகைகள் சமித்துக்களா என்ன?

சிவஞானம் வக்கீல் தொழில் நடத்திய நாட்களில் இப்பத்திரிகைகளை ஓரிருமுறை புரட்டுவதுண்டு. ஆனால் அரசாங்க உத்தியோகம் வந்த பிறகு அவர் இப் பத்திரிகைகளைப் புரட்டி, பங்கஜம்மாள் கண்டதில்லை. கோர்ட்டிலிருந்து வீடு வந்ததும் களைப்புத் தீர, சாய்வு நாற்காலியில் படுத்துவிடுவார், விடுமுறை நாட்களாக இருந்தால் நன்றாக உறங்குவதற்கும் 'கிளப்'பில் சீட்டுக் கச்சேரி நடத்தவுமேதான் அவர் மனம் ஓடியது. எடுப்பார்—அணைப்பார் இல்லாமல் இப்பத்திரிகைகள் கண்ணாடி அலமாரி ஒன்றில் காலியாக இருந்த இடத்தைத்தான் நிரப்பின.

ஆகவே இவைகளுக்குப் பணம் கட்டுவது அவசியமே இல்லை என்று அவளுக்குப்பட்டது. 'மாதம் பதின்மூன்று ரூபாய்களைக் கொடுத்து 'காகிதக் குப்பையைப்' போராகக் குவித்துவைப்பதில் என்ன பலன்?' என்பது அவள் எண்ணம்.

சில மாதப் பத்திரிகைகளும் வந்துகொண்டிருந்தன. கல்கத்தாவிலிருந்து, "மாடர்ன் ரெவ்யூ" அல்மோராவிலிருந்து "பிரபுத்த பாரதா", "திரிவேணி"; சென்னை ராமகிருஷ்ண மடாலயத்தின், "ராமகிருஷ்ண விஜயம்" ஆகியவை தவறாது வந்துகொண்டிருந்தன. இவைகளையும் படிப்பாரில்லை; ஆகவே இவை அனைத்தும் பங்கஜம்மாளுக்கு அவசியமானவையாகப் படவில்லை.

மணமான புதிதில், புதிய புதிய புத்தகங்களை அவ்வப்போது தபால்காரன் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போவது அவளுக்குப் பெருமையாக இருந்தது. தன் கணவர் சாதாரணமானவர் அல்ல. அவர் பெயர் கல்கத்தாவரையில்கூட எட்டியிருக்கிறது என்ற ஆச்சர்ய எண்ணம்!

திருமயிலாடியில் அவள் வளர்ந்துவந்த காலத்தில். தூரத்தில் வரும் கிராமத் தபால்காரனைக் கண்டுவிட்டால் அவளுக்கு ஒரு சந்தோஷம், வீட்டு வாயிலில் நின்று அவன் தன் வீட்டு வழியாகப் போகுமட்டும் காத்துக்கிடப்பாள். அவன் அவ்வழி வராமல் வேறு திக்கில் சென்றால்கூட, "எங்கப்பாவுக்குத் தபால் இருக்கா?" என்று கேட்பாள். அவன், "நாளைக்கு வரும்!" என்று சிரித்துக்கொண்டே போய்விடுவான். ஆடிக்கொருமுறை எங்கேனுமிருந்து அவள் தந்தைக்கும் கடிதம் வரும். அன்று அவள் மனம் குதூகலிக்கும். கிராமப் பள்ளிக்கூடத்தில் ஐந்தாவது வரை படித்த தமிழ்ப்படிப்பு வெளிப்பட அக் கடிதத்தை இரண்டு மூன்றுதரம் அப்பாவுக்குப் படித்துக் காட்டுவாள்!

மணமாகி, பட்டணம் வந்து தனிக் குடித்தனம் நடத்த ஆரம்பித்த பிறகு தெளிவடைந்த மற்ற மனப் பிராந்திகளுடன் இந்தத் தபால் பித்தும் தெளிவடைந்தது. பணம் செலவிட்டால், கல்கத்தாவிலிருந்து மட்டுமல்ல, தூர தூர வெளிநாடுகளிலிருந்தும் பத்திரிகைகள், சாமான் இவை தருவிக்கலாம் என அறிந்துகொண்டாள்.

அத்துடன் தன் கணவரைப்பற்றி எண்ணியிருந்த மருளான எண்ணங்கள் விலகின. இரு குழந்தைகளுக்குத் தாயாகி, வாழ்வில் அனுபவம் அடைந்த பிறகு, கணவர் மன நிலையை அளவிட்டு அறிந்துகொண்ட பிறகு, இப் பத்திரிகைகள் வீண் செலவாக அவளுக்குப் பட்டது. பொழுது போக்கவேண்டுமென்றால் கீதா பாராயணம் செய்யலாமே! பாகவதம், பாரதம், வேத பாஷ்ய பஞ்சரி, இவை படிக்கலாமே!—இவ்வளவு செலவில் வேண்டாத இவைகள் எதற்கு?

அத்: 5. சித்திரகுப்தன் கணக்கு

குடும்பச் செலவைத் தன் கையால் நடத்தின அந்த மாதம் 50 ரூபாய் மிச்சம் பிடித்திருந்தாள், பங்கஜம்மாள். போன மாதம் செலவுக்குப் போதாமல் கஷ்டப்பட்டிருக்க இந்த மாதம் 50 ரூபாய் கை மீதியாகவிருந்தது அவளுக்கே ஆச்சர்யமாகவிருந்தது. செலவுகளை எழுதி வைத்திருந்த கணக்குப் புத்தகத்தைப் பார்வையிட்டபொழுது இன்னும் எத்தனையோ அவசியமில்லாத செலவுகள் அவள் கண்களில் பட்டன. அவைகளையும் குறைத்துக்கொண்டே வந்தால் மாதம் நூறு ரூபாய்க்கு மேல் மிச்சம் பிடிக்கலாம். மாதம் இவ்வளவு மீதி என்றால் வருஷம் இவ்வளவு சேரும்! ஒரு பதினைந்து வருஷங்களுள் இவ்வளவு ஆகிவிடும்! கணக்குப் பார்த்துச் சந்தோஷமடைந்தாள், பங்கஜம்மாள்.

மறுமாதம் முதல் தேதி வந்ததும் மீத்து வைத்திருந்த ஐம்பது ரூபாயுடன் இன்னும் ஐம்பது சேர்த்து நூறு ரூபாயாகப் பாங்கியில் போடச் சொல்ல வேண்டுமென்று எண்ணியிருந்தாள்.

அந்த மாதச் சம்பளம் பூராவையும் மனைவியிடம் கொடுத்து விட்டதால் நிர்விசாரமாய் இருந்தார், சிவஞானம். இயல்பாகவே அவருக்குப் பணத்தைப் பெரிதாக மதிக்காத குணம். பணத்தைப் பெட்டியுள் வைத்துப் பூட்டி அவ்வப்போது குடும்பச் செலவுகளுக்கு எடுத்துக் கொடுப்பது தொல்லையாய் இருந்தது. ஆகவே சென்ற மாதத்தைப் போலவே, முதல் தேதியன்று கோர்ட் கலைந்ததும் நேரே வீட்டுக்கு வந்தார். வந்ததும் வராததுமாக பையுள் கனத்த சம்பளப் பணத்தைப் பங்கஜம்மாளிடம் சேர்ப்பித்துவிட்டு உடைகளைக் களைந்தார்.

புது நாணயங்களையும் கரன்ஸி நோட்டுக்களையும் தன் கைப்பட எண்ணும்போது பங்கஜம்மாளின் உள்ளத்தில் ஒருவித நெகிழ்ச்சி உண்டாகும். எண்ணி எண்ணிப் பார்த்து மகிழும் லோபியின் காதல் உண்டாகும்! அவளுக்குப் பணத்தின்மேல்

அப்போது ஆரம்பமான ஆசை நீங்கவே இல்லை, அப் பொல்லாத ஆசையின் விளைவாகவே அவள் பிற்கால வாழ்வு சீர்குலைந்து போயிற்று!

* * *

அன்று அந்திச் செவ்வானத்தின் தகதக வண்ணம் மரங்களின் உச்சியிலே கோலம் விளைத்துக்கொண்டிருந்தது. சற்று முன்தான் பாலூட்டித் தொட்டிலிலிட்ட குழந்தை லீலா தூங்கிக்கொண்டிருந்தாள். பங்கஜம்மாள் கொடுத்த பலகாரத்தைச்சுவைத்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார், சிவஞானம். இன்னும் இரண்டு கரண்டி நெய் அதிகம் விட்டிருந்தால் பலகாரம் நன்ருக இருந்திருக்கும். கொஞ்ச நாட்களாகவே பதார்த்தங்களில் ருசி குறையத் தொடங்கி யிருந்தது. பங்கஜம்மாளின் சிக்கன ஆர்வம் சமையலறை யுள்ளும் புரட்சி செய்துகொண்டிருந்தது!

“அப்பா! அப்பா!” என்று கூப்பிட்டவாறு கணபதி ஓடி வந்தான்.

“ஏண்டா கண்ணு! என்ன?”—அவனை அன்புடன் மடியில் உட்காரவிட்டார், சிவஞானம். கணபதிக்கு அப்போது ஏழு வயது.

“அப்பா! எனக்கு இப்பவே ரெண்டணு வேணும்பா! பக்கத்து வீட்டுக் கேசவன் வாங்கினமாதிரி புது பம்பரம் வாங்கப் போறேன்!......ஏம்பா! நீ அம்மாகிட்டே பணமே கொடுக்கிறதில்லையாமே! பம்பரம் வாங்க காசு கேட்டா, ‘காசே இல்லே!’ ங்கருளே! கேசவன் அம்மாகிட்டே ரொம்ப காசிருக்காப்பா? அவன் கேட்டதெல்லாம் வாங்கித்தராளே! நம்ப அம்மாகிட்டே எதைக் கேட்டாலும், ‘காசில்லே! காசில்லே!’ ங்ருளே!”

சிவஞானம் பங்கஜம்மாளைப் பார்த்தார்.

“ஆமாம்!—இவனுக்கு வேறு வேலை என்ன? எத்தனை பம்பரம் வாங்கிக் கொடுப்பது? போடா, போ! பந்து வைத்துக்கொண்டு விளையாடு போ!”

“விளையாட்டுப் பிள்ளை! உன் சிக்கன சூக்ஷமமெல்லாம் அவனுக்கென்னடி தெரியும்? அவனுக்கு இஷ்டப்பட்ட பம்பரத்தை வாங்கிக் கொள்ளட்டும்! அவனிடம் இரண்டணுவைக் கொடு!”

“ஆகட்டும்!—நீங்கள் சும்மா இருங்கள்!...... கணபதி!” பங்கஜம்மாள் உருட்டி விழித்துப் பார்த்தாள். குழந்தை முகத்தைத் தொங்கவிட்டுக்கொண்டு வெளியே போய்விட்டான்.

* * *

காப்பியைக் குடித்துவிட்டு சுகாஸனத்தில் சாய்ந்தார், சிவஞானம். போதிய பால் விடாததால் கசந்த காப்பியைப்போல் அவர் மனதிலும் சற்று வெறுப்பு உண்டாகியது. பங்கஜம்மாளின் பொருளாதார நிர்வாகம் அவருக்குப்பிடிக்கவில்லை. ‘எது சிக்கனம்? எது லோபித்தனம்?’ என்பதைப் பங்கஜம்மாள் இன்னும் புரிந்துகொள்ள முடியவில்லை என்று அவருக்குப் பட்டது.

அத்: 6. மனம் முறிந்தது

“நாளைக்கு ஆபீசுக்குப் போகும்போது ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போங்கள்!” என்று தொடர்ந்தாள், பங்கஜம்மாள்.

“ஏன்? நீ எங்கே போகிருயாம்?”

“நான் எங்கும் போகவில்லை. வீட்டில்தான் இருப்பேன். சமையல் உள்ளில் ஏதாவது காரியமாக இருக்கும்பொழுது நீங்கள் போய்விடலாமல்லவா? அதற்காகச் சொன்னேன்!”

“ஏன்? என்ன விசேஷம்?”

“நூறு ரூபாய் கொடுக்கிறேன். அதைப் பாங்கியில் கட்டிவிட்டுப் போங்கள்!”—இதைச் சொல்லும்பொழுது அவள் முகத்தில் ஒரு வெற்றிப் புன்னகை தவழ்ந்தது.

“அட! நூறு ரூபாயா? பாங்கியில் கட்டவா? ஏது பணம்?” தாம் செலவுக்குக் கொடுத்து வந்த காலத்தில் வரவுக்கும் செலவுக்கும் சரியாக இருந்ததே! இப்போது, ஒரே மாதத்தில், இவ்வளவு மீதி ஏது?” என்பது அவர் எண்ணம்.

“போன மாதம் ஐம்பது ரூபாய் மீத்துவைத்தேன். இந்த மாதம் ஐம்பது மீறும். நாளைக்கு வெள்ளிக்கிழமை; வளரும் நாள். பாங்கியில் போட்டு வையுங்கள். இதிலிருந்துதான் கொஞ்சம் கொஞ்சமாக உயரவேண்டும்!”

“சமத்து! பலே சமத்து! இனிமேல் எனக்கு என்ன குறைவு! பேஷாகப் போடுகிறேன்! எந்த பாங்கியில் போடச் சொல்கிருய்? வட்டி அதிகம் கொடுக்கும் பாங்கியில்தானே?”

“ஆமாம்! இருந்தாலும் நல்ல பாங்கியாகப் பார்த்துப் போட்டுவையுங்கள்!”

“சரி! யார் பேருக்குப் போடச் சொல்கிருய்? உன் பேருக்குத்தானே!”

“இதென்ன கேள்வி! கிண்டல் செய்கிறீர்களா, என்ன? உங்கள் பேருக்கே போட்டுவையுங்கள். சம்பாதிக்கும் உங்களுக்கு இல்லாத உரிமை எனக்கு என்ன இருக்கிறது?”

“நான் சம்பாதித்து என்ன பிரயோஜனம்? செலவு செய்வதும் மீதம் பிடிப்பதும் உன் கையிலேதானே இருக்கிறது!”

“நான் மனம் வைத்தால் மட்டும் போதுமா? நீங்களும் மனம் வைத்து உதவவேண்டும். நீங்கள்

மனம் வைத்தால் இன்னும் எவ்வளவு மீதம்பிடிக்கலாம் தெரியுமா?''

"என்னை என்ன செய்யச்சொல்கிருய்? சம்பாதிப்பது போதாது என்று லஞ்சம் வாங்கச் சொல்கிருயா?"

"அனுவசியச் செலவுகளைக் குறைத்துக்கொண்டாலே போதுமே!"

"எதை அனுவசியச் செலவு என்கிருய்?"

"நம் வீட்டுக்கு வரும் இத்தனை பத்திரிகைகளையும் நீங்கள் படிக்கிறீர்களா என்ன?"

"எப்படிப் படிக்கமுடியும்? அதற்கான ஓய்வு தான் எனக்கு எங்கே இருக்கிறது?"

"அப்படி இருக்கையில் அவைகளை வாங்குவானேன்?"

"ரொம்ப சரி! வரம் கொடுத்தவன் தலையிலேயே கை வைப்பதைப்போல், என் செலவுகளிலேகூடக் கை வைக்கப் பார்க்கிருயா?"

"வீண் செலவுதானே கூடாது என்கிறேன். பத்திரிகைகளை எல்லாம் நிறுத்திவிட்டால் மாதம் ஐம்பது ரூபாய் மீதமாகும்; வருஷம் எவ்வளவு ஆகும் பாருங்கள்!"

'மனதுக்குப் பிடித்த பத்திரிகைகளை எல்லாம் வாங்கக்கூடாது என்ருல், அதைப்போன்று இன்னும் எத்தனையோ அவசியமற்ற காரியங்களையும் செய்யாதிருக்கவேண்டும்!- உடலை மறைக்கப் பருத்தியால் நெய்த வெள்ளைச் சேலைகள் போதும். பட்டுச் சேலைகள் அவசியமில்லை; வர்ண விசித்திரங்களும், கண்ணைக் கவரும் பூ வேலைகளும் மிகை; கரைக்கட்டுகளில் பளபளக்கும் ஜரிகை அவசியமே இல்லை! பெண்களும் ஆண்களைப் போலவே இருக்கலாம்; அணிகலன்கள் அவசியமா? இப்படி நாம் செய்துகொள்ளும் ஒவ்வொன்றையும், "இது அவசியமா?" "இதனல் நன்மை உண்டா?" என்று நிர்ணயம் செய்ய முற்படும்போது, பல அவசியமற்றவாகவே படும்! ஒவ்வொருவர் மனப்போக்குக்கும் பண்புக்கும் ஏற்றமாதிரி, அவசியமும் அவசியமற்றவையும் மாறிக்கொண்டே போகும்!'—பங்கஜம்மாள் பேச்சில் ஒரு உண்மை இருப்பது அவருக்குத் தெரிந்தது. இருந்தாலும் பத்திரிகைகளை நிறுத்துவது என்பது அவருக்கு என்னவோ பிடிக்கவில்லை. எல்லாவற்றையும் கேவலம் ரூ. அ. பை. அளவில் எண்ணிவிடுவதா என்ன?

"அப்படி மிச்சம் பிடித்து நீ ஒன்றும் மாடமாளிகை கட்டவேண்டுமென்று நான் சொல்லவில்லை, பத்திரிகைகளை நிறுத்த முடியாது. ஆகவேண்டிய செலவுகள் எதிலும் நீ சிக்கனம் பிடிக்கக்கூடாது. சமையலறையுள் சிக்கனம் பிடித்து டாக்டருக்குப் போகும்படி விடக்கூடாது. அதே மாதிரி குழந்தைகளுக்கு வேண்டிய செலவுகளில் கஞ்சத்தனம் செய்யாதே! வேர் அறுபட்ட பசலைக்கொடியைப்போல் அவர்கள் மனம் வெம்பிப் போவார்கள்!"

பத்திரிகைகளை நிறுத்திவிட சிவஞானம் சம்மதிப்பார், சம்மதிக்கவேண்டும், என்றே அவள் நினைத்தாள். ஆசாபங்கமுற்ற அவளுக்குக் கோபம் மேலிட்டது.

சட்டென எழுந்து உள்ளே சென்ருள், சற்று முன் வைத்துப் பூட்டிய சம்பளப் பணத்தை எடுத்து வந்து சிவஞானத்தின்முன் வீசியெறிந்து, "இந்தாருங்கள்! உங்கள் சம்பளம்! நீங்களே வைத்துக்கொண்டு தாராளமாகச் செலவுசெய்யுங்கள்! குடும்பம் உயர்ந்தால் என்ன? தாழ்ந்தால் எனக்கென்ன? உங்களுக்கு இல்லாத பொறுப்பு எனக்கென்ன? வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் உங்கள் குழந்தைகள் என்றுதானே உலகம் சொல்லப் போகிறது. நீங்கள் உங்கள் கடமைகளைச் செய்யத் தவறினல் அதன் பலன்களை அவைகள் அனுபவித்துவிட்டுப் போகட்டும்!" என்று பொரிந்துவிட்டு, தன் சாம்ராஜ்யமான, சமையலறையுள் சென்றுவிட்டாள்.

பங்கஜம்மாள் இவ்வளவு சக்தியுள்ளவள் என்று சிவஞானம் அதுவரையில் நினைக்கவே இல்லை. 'பணத்தாசை அவளை அப்படி மாற்றிவிட்டதா என்ன? அவர் மனம் குழம்பியது. எழுந்து வெளியே உலாவிவரச் சென்ருர்.

அன்று வாழ்விலே உற்பவித்த மன மாற்றம் சிவஞானம் மரணமாகும் வரை நீடித்திருந்தது. ஓடிந்த உள்ளம் இரண்டும் ஒன்ருகும்படி எந்த அசாதாரண சம்பவமும் அதன் பிறகு நிகழவில்லை. கணபதி, லீலா இருவரைத் தவிர பிறகு குழந்தையே பிறக்கவில்லை.

கணவர் தன் இஷ்டத்திற்கு ஒத்து வராததால் ஏட்டிக்குப் போட்டியாகச் செலவுசெய்தாள், பங்கஜம்மாள். குறுக்கே நின்ருல் அனுவசியச் சண்டைகள்தான் வளரும் என்று நினைத்து, தாராளமாகச் செலவு செய்துகொண்டு வந்தார் சிவஞானம். இதனல் வரவுக்கும் செலவுக்கும் ஈடாவதில்லை! கணபதியும் லீலாவும் படிக்க ஆரம்பித்ததிலிருந்து அவர்கள் விஷயத்தில் தாராளமாகச் செலவு செய்தார். குழந்தைகளின் வருங்காலத்தைப்பற்றி அவர் கவலைப்படவில்லை, அவர்களுக்கு வேண்டிய கல்வியைக் கொடுத்துவிட்டால் போதுமானது என்று நினைத்தார்.

தம் நீண்ட ஆயுளில் அவருக்கு நம்பிக்கை இருந்தது. எதிர்பாராத விதமாய் மரணம் குறுக்கிட்டுவிட்டது! அவரால் நிம்மதியுடன் சாக முடியவில்லை.

அத்: 7. வாழ்க்கைக் குறிப்பு

சிவஞானம் அவர்களின் ஆவி பிரிந்து நீண்ட நேரம் ஆய்விட்டது. சுற்றத்தார் ஒப்புக்கு ஆர்ப்பரித்த பேரோசைக்குப் பின்பு மயான

மோனம் நிலவியது. எங்கோ ஒரு முச்சந்தியிலே ஒற்றை நாய் ஒன்று விட்டு விட்டுக் குலைத்த நாராச ஓசையும் தீர்க்கமாகக் கேட்டது.

லீலா மட்டுந்தான் தூங்கவில்லை. தன் தந்தையின் தலைமாட்டிலே எரிந்த குத்துவிளக்கைத் தூண்டிவிட்டு அவ்வப்போது எண்ணெய் வார்த்துக்கொண்டு மலைத்து உட்கார்ந்திருந்தாள்.

தந்தையின் ஆபீஸ் அறையுள் அண்ணு கணபதி ஏதோ எழுதிக்கொண்டிருப்பது அவளுக்குத் தெரியும். தூர பந்துக்களுக்குக் கடிதம் எழுதி முடித்தான். பின்பு பிரபல தினப்பத்திரிகைகளுக்கெனத் தந்தையின் வாழ்க்கைக் குறிப்புகள் எழுதி டைப் செய்து முடித்தான். பிறகு அவைகளை லீலாவிடம் கொடுத்து, "தூக்கம் தலை சுற்றுவதால், என் கண்கள்முன் மின்மினி பறப்பதைப்போல் இருக்கிறது. பிழைகள் புலப்படா. கவனமாகப் பார், லீலா!" என்றுன்.

அவைகளை ஒருமுறை படித்த லீலா, 'அண்ணு கூரிய புத்தி உள்ளவன். ஆனல் அவனுக்கு ஏற்ற வேலைதான் கிடைக்கவில்லை. அவன் மொழித் திறமைக்கு அவன் ஏதேனும் ஒரு சிறந்த ஆங்கிலப் பத்திரிக்காசிரியனுக இருக்கவேண்டும். அதைவிட்டு அரசாங்க அச்சுக் காரியாலயத்தில் தலைமைக் குமாஸ்தா வேலை பார்ப்பது அவனுக்கு எப்படிப் பிடிக்கிறதோ!' என எண்ணினுள் லீலா.

கணபதி சென்னை "ஹிந்து"வுக்கு எழுதிய குறிப்பின் வாசகம் இதுதான் :

ஜில்லா ஜட்ஜ் ஸர். சிவஞானம் அவர்கள் 1898-ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 4-ஆந்தேதி இத்துன்ப உலகில் காலெடுத்து வைத்தார். திருச்சியை அடுத்த பூதலூர் அவர் பிறப்பிடம். அவர் தந்தை சிவசுப்ரமணியம் அந்த ஊர் கணக்கப் பிள்ளையாக இருந்தார்.

சிவஞானம் இளமையிலேயே கல்வியில் ஊக்கம் காட்டி, பதினுறு வயதிற்குள் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினுர். அதன் பிறகு திருச்சி காலேஜில் சேர்ந்து படித்துப் பட்டம் பெற்றுர். அவருடைய நுண்ணிய அறிவைக் கவனித்த பாதிரியார் சட்டம் படிக்குமாறு அவரை ஊக்கினுர். சென்னைச் சட்டக்கல்லூரியில் சேர்ந்து சட்டம் படித்து, சென்னை ராஜதானியில் முதல் மாணவராகத் தேறினுர். அதன் பிறகு வக்கீல் பாஷ்யம் அவர்களிடம் ஜூனியராக இருந்து பல சிக்கலான கேஸ்களில் அவருக்கு உதவியிருக்கிறுர். இவருக்கு ஜில்லா ஜட்ஜ் பதவி கிடைத்தவுடன், "அரசாங்கத்தார் மிகப்பொருத்த மானவரைத் தேர்ந்தெடுத்ததற்காக நான் பாராட்டுகிறேன். சிவஞானம் நுண்ணிய அறிவுடையவர். எந்தவிதமான சிக்கலான வழக்கையும் சட்ட பூர்வமாக அவிழ்த்துவிடுவதில் சமர்த்தர். எனக்கு ஜூனியராக இருந்த காலத்தில் அவர் உதவியால் நான் பல சிக்கலான கேஸ்களை ஜயித்திருக்கிறேன். எனக்குக் கிடைத்துள்ள பெரும் புகழில் ஒரு பகுதி அவரையே சாரும்!" என்று பாஷ்யம் எழுதினுர்.

நியாய உலகில் சிவஞானம் அவர்கள் செய்த சேவையைப் பாராட்டி அரசாங்கத்தார் அவருக்கு ஸர் பட்டம் கொடுத்தனர். எளிய வாழ்வும் உயரிய நோக்கங்களுமுடையவர், சிவஞானம். "ஏழையும் சட்டமும்" என்ற வாரப் பத்திரிகையில் "சட்டம்" என்ற புனை பெயருடன் அவர் எழுதிய கட்டுரைகள் அவர் அனுபவத்தில் கண்ட உண்மைகளாகும். அதைக் கோவையாக்கிப் புத்தகமாக வெளியிடவேண்டும். புத்தகம் விரைவில் வெளியாகி நியாய உலகில் ஸர். சிவஞானம் அவர்களின் பெயரைச் சிரஞ்சீவியாக நிலைக்கவைக்கும் என நம்புகிறேம்!

இவருக்குத் தம் இரு கண்களே போல் ஒரு மகனும் மகளுமே இருக்கின்றனர். குமாரர், கணபதி எம். ஏ., அரசாங்க அச்சுக் காரியாலயத்தில் தலைமைக் குமாஸ்தாவாக இருக்கிறுர்.

அவர்கள் இருவருக்கும் அவர் மனைவிக்கும் மற்ற உறவினருக்கும் நமது அனுதாபம் உரியதாகும்.'

அத் : 8. மாமிச பிண்டம்

பத்திரிகைகளுக்கு எழுதியவைகளைக் கவர்களிலிட்டு விலாசம் எழுதிவைத்தான், கணபதி. அதன்பிறகு வீதி வாசல்படி யருகில் புகைந்துகொண்டிருந்த நெருப்பின்மீது இரு கட்டைகளை எடுத்துப் போட்டுவிட்டு உள்ளே வந்தான்.

"லீலா! நீ சற்றே படுத்துக்கொள். நான் இங்கே இருக்கிறேன்!" என்றுன், பரிவுடன்.

"இல்லை அண்ணு! எனக்குத் தூக்கம் வரவில்லை. நாளைக்குக் கூடவா அப்பாவைப் பார்க்கப் போகிறேன்? நானும் உன் கூடவே இருக்கிறேன்!" என்றுள், லீலா.

"என்ன, லீலா! இங்கே கிடப்பது 'அப்பா' என்று நினைக்கிறுய்? படித்த நீ கூட அப்படி நினைக்கலாமா? அப்பா எப்போதே விடுபட்டுப் போய்விட்டாரே! இங்கே கிடப்பது வெறும் மாமிச பிண்டமல்லவா? நாளைக்குச் சாம்பலாகப் போவது. எரிக்கச் சற்றுத் தாமதமானுல் அழுகித் துர்நாற்றம் வீசப்போவது. அதைக் காவல் புரிவதால் பலன் ஒன்றும் இல்லை. நாளைக்கு ஊரிலிருந்து வந்திருப்பவர்களுச் சமையல் முதலிய ஏற்பாட்டை நீதான் மேற்பார்வை பார்க்கவேண்டும். ஆகையால் சற்றே படுத்து உறங்கு. நான் இப்போது விழித்திருந்தாலும் நாளை தகனம் ஆன பிறகு சற்றுத் தூங்குவேன். வெளி வேஷத்திற்காகத் துக்கம் கொண்டாடியபடி நான் உட்கார்ந்திருக்கப் போவதில்லை. சென்றது இனி மீளாது.

(தொடரும்)

அபவாதம்

கேதாரி

ராம பட்டாபிஷேகம் நடந்து வெகுகாலம் ஆகிவிட்டது. தன் மூன்று தம்பியருடன் பரதநாட்டை ராமபிரான் ஆண்டு வந்தார்.

நாட்டில் எங்கும் செழிப்பும் நியாயமும் திகழ்ந்தன. மக்களுடைய சொற்களுக்கு மன்னர்கள் செவிசாய்த்து அவைகளின்படி நடந்தனர். அல்லலுற்று அவதிப்படுவோர் அந்தக் காலத்தில் இல்லை.

அந்த நாட்களில் ஒரு மாலை இந்திரனுடைய விமானம் இமயமலையின் சாரலில் தாழப் பறந்துகொண்டிருந்தது. இந்திரன் அயோத்தியிலிருந்து அப்பொழுது திரும்பிச் சென்றுகொண்டிருந்தான். ராமபிரான் மகுடம் பூண்டு அரசு செலுத்த ஆரம்பித்தபின் அடிக்கடி அவன் அயோத்திக்கு வந்து அவரிடம் தேவருலக விஷயங்களைக் கூறிவிட்டுச் சிற்சில விஷயங்களில் அவர் அபிப்ராயம் தெரிந்து செல்வது வழக்கம்.

தாழப் பறந்துகொண்டிருந்த விமானம் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்ததும் கீழே இறங்கியது. அதினின்றும் இந்திரன் இறங்கி நடந்து சென்றான்.

சற்றுத்தூரம் சென்றதும் அழகானதோட்டத்திற்கு மத்தியில் ஒரு பர்ணசாலை அவன் கண்களில் தென்பட்டது. அடிக்கடி அங்கு வந்துபோகிறவனைப் போன்று வெளி வேலிப் படலைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தான். அது யாருடைய ஆச்ரமம் என்று அவனுக்குத் தெரியும். இரு பக்கங்களிலும் அடர்ந்து வளர்ந்திருந்த புஷ்பக் கொடிகளின் அழகுத் தோற்றங்களைக் கண்டுகொண்டே சென்றான் தேவர்கோன். புஷ்பங்களினின்று எழுந்த கம்மென்ற வாசனை நல்லோர்களுடைய புகழைப்போல் அந்த வட்டாரம் முழுவதும் பரவி இருந்தது. தூரத்தில் பனிப் போர்வைகளால் மூடப்பட்ட மலைச் சிகரங்களினின்று எழுந்த குளிர்ந்த காற்று புஷ்பங்களின் நறுமணத்தை மோந்து கொண்டு வீசித் தவழ்ந்தது. சற்றுத் தூரத்தில், கன்றோடு இணைந்த பசுக்களும் துள்ளி விளையாடும் மான் குட்டிகளும் நின்றுகொண்டிருந்தன. மாலை நேரமாதலால், மரங்களில், பட்சிகளெல்லாம் கூடு திரும்பிவந்து தம் பேடைகளுடன் கும்மாளக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தன.

சூரியன் மேல்புறத்து மலைவாயில் விழுந்து கொண்டிருந்தான். அவன் தங்கக் கதிர்கள் ஒளியை இழந்து மறைந்து மறைய ஆரம்பித்தன.

இயற்கையின் இந்தக் காட்சிகளைக் கண்டான் இந்திரன். இவைகளையெல்லாம் அனுபவிக்கும் மனிதர்கள் பாக்கியசாலிகள் தாம் என்று தனக்குள் கூறிக்கொண்டான். ஆனால் மனிதன் என்று பூவுலகத்தில் பிறந்துவிட்டால் அவன் தனக்காகவும், முக்கியமாக மற்றவர்களுக்காகவும், எத்தனை கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது தியாகங்களைச் செய்யவேண்டியிருக்கிறது, என்று எண்ணியது அவன் உள்ளம். ஏதோ மன விசாரம் அவனுக்குள் இருந்து வாட்டிக் கொண்டிருந்தது என்பதை அவன் முகமே எடுத்துக் காட்டியது.

இவன் ஆச்ரம வாயிலுக்கு வருவதும் உள்ளிருந்து ரிஷிபத்தினி ஒருத்தி வெளி வருவதும் சரியாக இருந்தது. அவளைக் கண்டதும் இந்திரன், "அகல்யா தேவிக்கு வணக்கம்" என்றான்.

"யார் தேவராஜாவா? வரவேண்டும்" என்று அவளும் பதில் வணக்கம் செய்தாள். பிறகு அவன் அமருவதற்காக ஆசனம் கொணர்ந்தாள்.

இவள் பழைய அகல்யா அல்ல. காலம் இவளிடம் தன் கோர சக்தியைக் காண்பித்திருந்தது. அன்றலர்ந்த புஷ்பத்தைப் போன்றிருந்த அவள் முகத்தில் அநேக கீறல்களை இட்டிருந்தது அது. வேலைப் போன்றிருந்த அவள் விழிகள் வயதின் முதிர்ச்சிக்குப் பலியாகி மழுங்கி இருந்தன. கண்களைச் சுற்றி மெல்லிய கருவட்டங்களும் தோன்றியிருந்தன. இதழ்களில் சுருக்கமும் கூந்தலில் அநேக வெண் ரோமங்களும் கொண்டு ஒரு மாஜி அழகியாக அவள் இருந்தாள்.

இந்திரனோ அன்று பார்த்த மேனிக்கு அழிவில்லாமல் இருந்தான். அமுதத்தை உண்டவனுக்கு மூப்பேது? அதே தோற்றம், அதே சிரிப்பு, அதே கண்கள். ஆனால் இவை எவையும் அந்த மூதாட்டியின் உள்ளத்தில் பழைய நினைவுகளைக் கிளறவில்லையா என்பதுதான் தெரியவில்லை.

கௌதமர் இந்திரனை முன்பு மன்னித்த பிறகு அந்தச் சம்பவங்களை மறந்துவிட்டார். ராம பட்டாபிஷேகம் நடந்ததிலிருந்து இருவருக்கும் மறுபடி நட்பு ஏற்பட்டது. இமய மலையின் சாரல் வழியாகச் செல்லும்பொழுதெல்லாம் கீழே இறங்கி, கௌதமரைக் காணாமல் அவன் செல்வதில்லை. அப்பொழுது அவன் அகல்யையோடும் பேச நேரும். ஆனால் அந்தப் பேச்சில் பக்தியும், மரியாதையும் நிரம்பி இருக்கும், சகோதரியிடம் பழகும் சகோதரனைப்போல் அவன் நடந்துகொண்டான்.

ஆசனத்தில் அமர்ந்த இந்திரன், "கௌதமமுனிவர் ஆச்ரமத்தில் இல்லையா?" என்று வினவினான்.

"பக்கத்துக் கிராமத்திற்குப் போயிருக்கிறார், நாளைக்குக் காலையில் திரும்பி வந்துவிடுவார்" என்று பதிலளித்தாள் அகலிகை.

இதற்கு முன்பு இந்திரன் அங்கு வந்தபொழுதெல்லாம் முனிவர் இருந்ததால் அவனுக்கு அகல்யையோடு பழகுவதற்கு யாதொரு சங்கடமும் இருந்ததில்லை. அன்று அவர் இல்லாமற் போகவே அவனுடைய சங்கோஜம், "கிளம்பு சீக்கிரம்" என்று அவனைத் தூண்டியது.

"அப்படியானால் அவரைப் பார்ப்பதற்கு இல்லை போலும்." என்றான் அவன்.

"இரவு இங்கேயே தங்கி இருந்து காலையில் அவரைப் பார்த்துவிட்டுப் போகலாம்" என்றாள் அகலிகை சகஜமாக.

கௌதமர் இல்லாதபொழுது இங்கே தங்குவதாமே என்று எண்ணியபடியே இந்திரன், "முக்கியமான காரியம் ஒன்றும் இல்லை, இவ்வழியாகச் சென்றதால் அவரைக் கண்டு செல்லலாம் என்று வந்தேன். நான் இரவு தங்குவதற்கு இல்லை. இன்னொரு சமயம் இந்தப் பக்கம் வரும்பொழுது அவரைக் காண்கிறேன்" என்றான்,

"இன்னொரு சமயம் எப்பொழுதோ, இதோ நன்றாக இருட்டிவிட்டது. இன்னும் ஓட ஓட இருபது நாழிகைகள் கழிந்தால் அவர் வந்துவிடுவார், "சிரித்துக்கொண்டே," அப்படி ஒன்றும் இந்திரலோகம் பறிபோகவில்லையே, எல்லோரையும்தான் ராமபாணம் தொலைத்துவிட்டதே" என்றாள்.

இந்திரனுக்கு என்ன கூறுவது என்று புரியவில்லை. ஊர் வாயைக் கண்டுதான் அவன் அஞ்சினான். மறுபடியும் ஏதாவது ஆபத்து வந்துவிடப் போகிறதே என்று கலங்கியது அவன் நெஞ்சம். இரவு முழுவதும் இருவரும் ஆச்ரமத்தில் தனித்து இருப்பதா? காலையில் முனிவர் இச் செய்தியைக் கேட்டால் என்ன எண்ணிக்கொள்வார்? ஒரு வேளை மீண்டும் சந்தேகமுற்றால்? நமக்கு மட்டும் இல்லை, அது அகல்யாவிற்கும் அல்லவா பழியைத் தரும்.........

"என்ன யோசனை செய்கிறீர்கள்?" என்ற அகல்யாவின் கேள்வி அவன் சிந்தனையைத் தேக்கிற்று.

"ஒன்றுமில்லை, இரவு தங்கத்தான் வேண்டுமா? என்று யோசிக்கிறேன்"

"தங்களுடைய மனத்தில் ஏதோ வேதனை இருக்கிறது, அதனை நான் அறிந்துகொள்ளலாமா?"

இந்திரன் சொல்லத் தயங்கினான். அகல்யையோ, "ஏன் தயங்குகிறீர்கள்?" என்று முடுக்கினாள்.

"தாயே, உலக அபவாதம் என்று ஒன்று இருக்கிறதல்லவா? அதுதான் என்னை இங்கிருந்து விரட்டுகிறது. தனித்திருக்கும் ஸ்திரீயின் வீட்டில் தங்குவதற்கு அருகதை இல்லாமல் அல்லவா என்னைச் செய்துகொண்டிருக்கிறேன். அதனால்தான் போக விரும்புகிறேன்" என்றான் அவன்.

அவள் சற்றுநேரம் மௌனமாக இருந்தாள். பிறகு லேசாகச் சிரித்துக்கொண்டே "தாங்கள் கூறுவது சரிதான். ஆனால் இந்த விஷயத்தில் தாங்கள் அபவாதத்திற்காகப் பயப்படவேண்டாம். என் கணவர் என்னைப்பற்றி எள்ளளவும் சந்தேகிக்கமாட்டார். ஊர் வாயைக்கண்டு நான் அஞ்சவில்லை. தாங்கள் இவ்வளவுதூரம் கூறிய பிறகும் தங்களை இங்கிருந்து நான் அனுப்ப விரும்பவில்லை. கட்டாயம் தாங்கள் இரவை இங்கே கழித்துவிட்டுத்தான் செல்லவேண்டும்" என்று சொன்னாள் அகலிகை. அவள் பேச்சின் பின் பகுதியில் கண்டிப்பு இருந்தது.

அவள் சொல்லைத் தட்டவிரும்பாத இந்திரன், "சரி, அப்படியே இருந்துவிட்டுச் செல்கிறேன்" என்றான். அகல்யை சிரித்துக்கொண்டே தன் நன்றியைத் தெரிவித்தாள்.

"ரொம்ப சந்தோஷம். சற்று இருங்கள், உள்ளே சென்று இரவு போஜனத்திற்கு வேண்டிய பழம், பால் முதலியவைகளைக் கொண்டு வருகிறேன். நல்ல நிலவு காய்கிறபடியால் ஆச்ரமத்து வாசல் வெளியிலேயே அமர்ந்து சாப்பிடலாம்" என்று கூறிக்கொண்டே உள்ளே விரைந்தாள்.

நல்ல பழங்களாகப் பார்த்துப் பொறுக்கி மரத் தட்டில் அடுக்கிவைத்தாளே ஒழிய அவள் உள்ளம் வேறு வழியில் சஞ்சரித்துக்கொண்டிருந்தது. இந்திரன் இப்பொழுது எவ்வளவு நல்லவனாகிவிட்டான். இளமைத் துடிப்பில் நான் செய்த தவறுதலால்தான் அவனுக்கும் பழி வந்தது. அவனோடு முதலிலிருந்தே நான் சரியாகப் பழகாமல் இருந்தால் என்மீது அவனுக்கு அன்பு ஏற்பட்டிருக்குமா? இப்பொழுது இங்கிருக்கவே அஞ்சுகிறானே, உலகத்தின் அபவாதத்தைக் கண்டு தேவராஜாகூட அஞ்சவேண்டுமா?

அவன்மீதுள்ள எண்ணற்ற கண்களைக்காணும் பொழுது ஒவ்வொன்றும் என் பழியைச் சொல்லிச் சிமிட்டுவன போல் அல்லவா எனக்குத் தோன்றுகிறது. முனிவர் வந்ததும் அவரிடம்

வேண்டி அந்தச் சாபத்திற்கும் விமோசனம்செய்து அந்தக் கண்களை மறையச் செய்யவேண்டும். கெட்டவன் எப்பொழுதும் கெட்டவனாக இருக்க மாட்டான். அவன் மிக நல்லவனாகிவிட்டான் என்றால் கௌதமர் ஏன் அவனை மன்னிக்கமாட்டார்?'

வெளியில் இந்திரன் வானத்தை நோக்கியபடி வீற்றிருந்தான். நிலவில் அங்கங்கே சாம்பல் நிறம்கொண்ட மேகங்கள், அவன் மனதில் ஏற்பட்ட சஞ்சலம்போல், அங்கும் இங்குமாக நகர்ந்து உருவம் மாறிக்கொண்டிருந்தன.

'பழைய அகல்யாவுக்கும் இப்பொழுதுள்ள இவளுக்கும் எத்தனை வித்தியாசம்! உலக அபவாதத்தை அவள் அப்பொழுதும் பொருட்படுத்தாமல் என் உறவை நாடினாள். இப்பொழுது வேறுவகையில் உலக அபவாதத்தை அலட்சியம் செய்கிறாள். தன்னுடைய தூய்மையில் தனக்கே அளவுகடந்த நம்பிக்கை இருந்தாலன்றி இவ்வாறு கூறமுடியுமா? ஆனால் ஊர் வாயைக் கண்டு எவ்வளவோ லட்சிய வாதிகள்கூட நடுங்கும்பொழுது இந்தப் பேதை, 'நான் பயப்படமாட்டேன்' என்று சொல்கிறாளே! அவள் சொல்லைத் தட்டமுடியவில்லை இரவை இங்கே கழித்துவிட்டுக் காலையில் செல்ல வேண்டியதுதான்.........''

"தேவராஜா, போஜனம் தயார்" என்று சொல்லிக்கொண்டே இரண்டு கைகளிலும் பழத்தட்டுகளை ஏந்திவந்தாள் அகல்யா.

மாலைக் கடன்களை முடித்துவிட்டு இந்திரன் பழங்களை அருந்த ஆரம்பித்தான். அகல்யா, "தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் என்றுகூட நான் இதுவரையில் கேட்கவில்லையே, தெரிந்து கொள்ளலாமா?" என்றாள்.

மென்றுகொண்டிருந்த பழத் துண்டத்தை விழுங்கிவிட்டு, இந்திரன், "நான் அயோத்தியிலிருந்து வருகிறேன்" என்றான்.

"அங்கே ஏதாவது விசேஷம் உண்டா? அரண்மனையில் யாவரும் சுகம்தானே?"

"அங்கே ஒரே பரபரப்பாக இருக்கிறது"

"ஏன், என்ன ஆயிற்று, சீதைக்கு ஒன்றும் ஆபத்தில்லையே"

"சீதைக்கு ஆபத்து என்று ஒன்றும் இல்லை, ஆனால் அவள் மறுபடியும் கானகம் செல்கிறாள்"

"அரசாங்க ஆசை மீண்டும் கைகேயிக்குத் தோன்றிவிட்டதா? ஏன் ராமரும் சீதையும் கானகம் செல்லவேண்டும்?"

"அகல்யாதேவி, சீதை காட்டிற்குச் செல்கிறாள் என்றவுடன் ராமரும் உடன் செல்லவேண்டும் என்று தாங்கள் ஊகித்தது சரி இல்லை. இந்தத் தடவை சீதை மட்டும்தான், அதுவும் கர்ப்பிணியான சீதை மட்டும்தான், கானகம் செல்கிறாள்"

"தேவராஜா, கர்ப்பிணியான சீதையைத் தனியே நாட்டைவிட்டுக் காட்டிற்கு ராமர் ஏன் அனுப்பவேண்டும்? அவள் என்ன தவறு செய்துவிட்டாள். சீக்கிரம் சொல்லுங்களேன்."

"அவள் என்ன தவறுசெய்தாள்? அபவாதத்தின் குரல் செய்த கொடுமைதான் அது. லக்ஷ்மணன் ஒரு நாள் நகர சோதனை செய்து வரும்பொழுது ஒரு வண்ணானுக்கும் அவன் மனைவிக்கும் ஏதோ சண்டை நடந்துகொண்டிருப்பதைக் கண்டு, அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கேட்டு நின்றான். அந்த வண்ணானின் மனைவி வேறு எங்கேயோ இராப்பொழுதைக் கழித்துவிட்டுத் திரும்பி வந்ததால் அவளுடைய கற்பின்மீது சந்தேகம்கொண்ட அவன், அவளை வீட்டிற்குள் அனுமதிக்க மறுத்தான். அவள் கெஞ்சினாள், அழுதாள். தான் தூய்மையில் எவ்விதத்திலும் குறைந்துவிடவில்லை என்று கதறினாள், அவன் கடுங்கோபத்தில், "உன்னை மறுபடியும் ஏற்றுக்கொள்ள என்னையும் என்ன ராமர் வம்சம் என்று நினைத்துக்கொண்டாயோ?" என்ற பொருள்படக் கேட்டானாம். அரக்கன் வீட்டிலிருந்த சீதையை ராமர் ஏற்றுக்கொண்டு அரசு செலுத்துவதைப்பற்றி இழிவாக அந்த மனிதன் குறிப்பிட்டது லக்ஷ்மணன் செவிகளில் அம்பு பாய்வது போன்றிருந்தது. இது ராமர் காதிற்கும் எட்டிவிட்டது. ராமர் தீவிரமான சிந்தனைசெய்து 'உலக அபவாதத்திற்குமுன் நான் என்ன செய்ய முடியும்? சீதைமீது எனக்கு எவ்வளவோ அன்பு இருக்கலாம். அவளுடைய தூய்மையில் எனக்குப் பரிபூரண நம்பிக்கையும் இருக்கலாம். ஆனால் நான் குடிகளுக்கு அரசன். அவர்கள் கொள்கைப்படி நான் பரிசுத்தனாக இருக்கவேண்டும். அவர்களில் ஒருவருக்குச் சந்தேகம் வந்தால்கூட நான் சீதையை எப்படி அரசியாக வைத்துக்கொள்ள முடியும்? சீதை இனி இங்கே இருக்கவேண்டாம், என்று தீர்மானித்தார். நேற்றுக் காட்டிற்கும் அனுப்பிவிட்டார்" என்று விசனம் நிறைந்த குரலில் கூறி முடித்தான் தேவர்கோன்.

அகல்யாவின் கண்களிலிருந்து நீர் பெருகிக் கொண்டிருந்தது. உலக அபவாதம் அவ்வளவு பொல்லாததா? எனக்குத் தெரியவில்லையே! ராமரைக்கூட ஆட்டிவைக்கும் சக்தி வாய்ந்ததா அது? கற்புக்கு அரசியான சீதையே அதன் கோரக் கைகளினால் ஒதுக்கப்பட்டு இன்பவாழ்விலிருந்து அப்பால் தள்ளப்படும்பொழுது நான் எம்மாத்திரம்? இந்திரனும் நானும் சேர்ந்து இருக்கலாமா? அபவாதத்தின் கண்களில் நாங்கள் பட்டுவிட்டால்? உலகமே சுழன்றது போன்று இருந்தது அவளுக்கு.

"தேவராஜா, தாங்கள் இப்பொழுதே இங்கிருந்து சென்றுவிடுங்கள், நாம் இருவரும் ஒன்றாக உட்கார்ந்திருப்பதே பிறர் கண்களில் படக் கூடாது" என்றாள் சட்டென்று.

தேவ விமானம் மண்ணிலிருந்து விண்ணை நோக்கிக் கிளம்பியது.

பர்ணசாலையின் வாசலில் ஆடாமல், அசையாமல், நேரம் போவதே தெரியாமல் கலங்கிய உள்ளத்தோடு அகல்யா கற்சிலைபோல் உட்கார்ந்திருந்தாள். அவ்வப்பொழுது விட்ட நெடு மூச்சுத்தான் அவள் மீண்டும் கல்லாகவில்லை என்பதைத் தெரிவித்தது.

சைனா தேசத்தில் ஒரு பழமொழி உண்டு. அதாவது பட்டுப்பூச்சி கூட்டைக் கட்டி அதனுள்ளேயே தங்குகிறது, அதனால் அது சிறையிலிடப்படுகிறது; எட்டுக்கால் பூச்சி வலையைப் பின்னிவிட்டு வெளியில் தங்குகிறது. அதனால் அது பந்தமில்லாமல் வசிக்கிறது. குலம், சங்கம், சமூகம் எனப்படும் கூடுகளில் அகப்பட்டுக்கொண்டு, அவைகளால் விதிக்கப்பட்ட ஆசாரங்கள், ஒழுக்கங்கள், நிபந்தனைகள், கட்டுப்பாடுகள், முதலியவைகளுக்கு இணங்கி, நாலுபேர் பேச்சுக்கே பயந்து நடு நடுங்கி வாழ்நாட்களைப் போக்குபவர்கள் பட்டுப் பூச்சிக்குச் சமானம். அதனுடைய கூட்டில் அதற்கு வாய்த்த பந்தோபஸ்தும், போஷாக்கும், மேற்கூறியவர்களுக்கு சமூகத்திலும் சங்கத்திலும் கிடைக்கும் ஆதரவும், செல்வாக்கும் போலாகும். ஆனால் பட்டுப் பூச்சியைப்போல அவர்களும் சிறையில் அகப்பட்டுத் திண்டாடவேண்டியதுதான். குலம், சங்கம், சமூகம் என்பன ஒரு விஸ்தாரமான சிறைச்சாலை. அவைகளால் விதிக்கப்பட்ட ஆசாரங்களோ, சுயேச்சைக்கும், சுயாதீனத்துக்கும் விருத்தமான சங்கிலிகள் போன்றனவே. நம்முடைய தேசத்தில், அதிலும் தமிழ் நாட்டில், இந்தச் சங்கிலிகள் கோரமான விலங்குகள் ஆயின.

தமிழ்நாட்டுமக்கள் எல்லோரும் சுயேச்சையையும், சுயாதீனத்தையும் வெகு விமரிசையாகக்கொண்டாடுபவர்கள் என்பது ஐதீகம். ஆனால் இந்த ஐதீகத்தில் எவ்வளவு குறைபாடுகள் உண்டு என்பதை யோசித்தார்களா? கவனிப்போம்! ஜாதிமதபேதம் ஒன்றுமில்லாமல் நம் குழந்தைகளை வளர்க்கவேண்டும் என்கிறோம். அந்த ரீதியில் அவர்களைப் பள்ளிக்கூடங்களில் சேர்க்கிறோம். அவர்கள் பருவம் முதிர்ந்து, பகுத்தறிவு தெளிந்து வரும்வரையில் வித்தியாசாலைகளிலும் கலாசாலைகளிலும் ஆண்களும் பெண்களும் சேர்ந்து வளரும்படி வசதிகள் அளிக்கிறோம். குழந்தைகள் மூலமாய்க் குடும்பங்களும் சேருகின்றன. ஆனால் கலியாணம் என்கிற பேச்சு எடுத்தவுடன் ஜாதிமத குலாசாரம் குறுக்கே நுழைகிறது. நாலுபேர் என்ன சொல்லுவார்கள் என்கிற வசனம் பெரிய ஒரு முட்டுக்கட்டையை இடுகிறது. எப்பேர்ப்பட்ட விவேகிகளாயிருந்தாலும் தாய் தகப்பன்மார்கள், சமூக முறைச்குப் பயந்து நடு நடுங்கி, வழக்கத்துக்கு விரோதமான சம்பந்தம் ஏற்படக்கூடாது என்கிற நிபந்தனையைக் கொண்டுவருகிறார்கள். சில வருஷங்களுக்கு முன் ஜாதிப் பிரஷ்டத்துக்கும் குலப் பிரஷ்டத்துக்கும் பயந்தார்கள். இப்பொழுது அந்தப் பயம் கிடையாது. ஆனாலும் கேவலம் ஏச்சுப் பேச்சுக்கே பயம்! என்ன, உம்முடைய பிள்ளையாண்டான் உம்மைக் கேட்காமல் யாரோ ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டுவிட்டானாமே, என்கிற பேச்சுக்கு நடுக்கம்! ஓஹோ, உம்முடைய பெண் உம்முடைய சம்மதமில்லாமல் அவளுடைய சுயேச்சையாகவே ஒரு பையனைக் கட்டிக்கொண்டாளாமே, என்கிற பேச்சுக்கு நாணம்! ஆகக்கூடி வாழ் நிலையில்

சுயேச்சையென்பது சதவிகிதம் இருக்க வேண்டியது விவாக சம்பந்தத்தில்தான். ஆனால் நமது தேசத்தில் இன்னும் இந்த விஷயத்தில்தான் சுயேச்சை என்பதே கிடையாது. பெரியோர்களால் நிச்சயிக்கப் பட்ட கலியாணங்களே சகஜமாகவிருக்கின்றன. இருக்கட்டும், அதில் ஒன்றும் பெருங் குற்றம் இல்லை. பெரியோர்கள் சிறியோர் களுடைய மனோபிஷ்டத்தை உத்தேசித்து நிச்சயித்தால் நல்லதுதான். ஆனால் பெரியோர்கள் ஒரு மூலையும் சிறியோர்கள் ஒரு மூலையுமாக இழுத்துக்கொண்டு நின்றால் என்ன கதியாவது?

பண்டைக்காலத்தில் மணம் புரியும் மக்கள் சிறிய வயதுள்ளவர்களாயிருந்தனர். அவர்களுக்குச் சுயேச்சையளிப்பது அனுசிதமாகத்தானிருந்தது. தற்காலத்திலோ பரிஸ்திதி மாறிவிட்டது. பெண்களுக்கு இருபது முதல் முப்பது வயது வரையில் இப்பொழுது கலியாணங்கள் நடைபெறுகின்றன. ஆண் மக்களில் இருபத்து ஐந்து முதல் முப்பத்தைந்து வரையில் நடைபெறுகின்றன. இவர்களுடைய சுயேச்சைக்கும் முட்டுக் கட்டைகள் விழுந்தால் வாழ்க்கையில் இவர்களுக்கு இன்பமும் தெம்பும் குறைவாவது ஆச்சரியமா?

தமிழ் நாட்டுச் சமூகத்தில் வாழ்க்கையில் விறுவிறுப்பு, ஊக்கம், இன்பம், பசை என்பன குன்றிப்போயிருப்பதை வெகு சந்தர்ப்பங்களில் காணலாம்! நம்முடைய சமூகத்துக்கு விமோசனமே கிடையாது என்று சொல்லுபவர் பலருண்டு! என்ன பிரயோஜனம்? மண்டையை இடித்துக்கொண்டாலும் நம்முடைய நாட்டிலே ஒன்றும் உருப்படாது என்று வெறுப்புடன் சொல்லுபவர்களும் அநேகருண்டு! இதற்கெல்லாம் காரணம் என்னவென்கிறீர்கள்? வாழ்க்கையின் அடிப்படையான தத்துவங்களில் ஏற்பட்ட கோளாறுகள்தான். அந்தத் தத்துவங்கள் அபத்தமானவையென்று நியாய சம்பந்தமாக அங்கிகரித்தபோதிலும், அவைகளை நிறுத்தவோ மீறி நடக்கவோ, திரஸ்கரிக்கவோ தைரியமுள்ளவர்கள் வெகு சிலரே. நாலு பேர் என்ன சொல்லுவார்களோ? பரிகாசம் செய்வார்களோ? நிந்திப்பார்களோ? நமக்கென்ன வாச்சுது? கிருஷ்ணா ராமா கோவிந்தா வென்று நம் காலத்தைப் போக்கிவிடுவோம்! என்கிற கொள்கையில் பெரும்பாலார் பசையற்று வாழ்நிலையைப் போக்குகிறார்கள்!

மாதம் ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய் சம்பாதிக்கும் உத்தியோகஸ்தன் ஒருவன், தன் பெண் ஒருத்திக்குக் கலியாணம் செய்வித்தால், தற்காலத்தின் சமூகத்தின் முறைப்படி, குறைந்த பக்ஷம் 7500 ரூபாய் வெட்டி ஜம்பத்தில் செலவழிக்கவேண்டும். இல்லாமல் போனால் "நாலுபேர்கள்" காறித் துப்புவார்கள். கொட்டகைப் பந்தலுக்கு ரூபாய் 2500, பாட்டுக் கச்சேரிக்கு ரூபாய் 1500, சிற்றுண்டி ஐஸ்கிரீம் டீ பார்டிக்கு ரூபாய் 1300, மேளத்துக்கு ரூபாய் 700, சாப்பாடு சிப்பந்திச் செலவுக்கு ரூபாய் 1500. இதைத் தவிர புடவை, வேஷ்டி, சட்டை, நகை, பாத்திரம், பரிசுகள் வகையராவுக்கு அந்தஸ்துக்குத் தக்கபடி செலவு உண்டு. இவைகளை அங்கிகரித்தாலும்,முதலில் கூறிய 7500 ரூபாயைப் பொறுத்தவரை வெல்லத் தண்ணீர்தான். ஆயிரத்து ஐந்நூறுபேர்கள் விருந்தினர் என்கிற கணக்கில் கலியாணம் நடக்கும். இந்த ஆயிரத்து ஐந்நூறு பேர்களில் செலவாளியின ஆத்மார்த்த நண்பர்களும் நெருங்கின பந்துக்களும் நூறு பேருக்குமேல் இருக்கமாட்டார்கள். ஒருநாள் கூத்துக்கு மீசையைச் சிரைப்பது என்பது இத்தகைய கோலத்துக்குத்தான் சொல்லுவது. சுயேச்சை, சுயாதீனம் என்பதைப் பிரமாதமாகக் கொண்டாடும் பெரியோர்களில் அநேகர் இத்தகைய விபரீத பந்தத்தில் ஈடுபட்டு, சமூகத்தின் பழக்க வழக்கத்துக்கு அடிமையாகக் கிடப்பதை நமது தேசத்தில் தினே தினே காணலாம்.

சுயேச்சையென்பது வெட்டிப்பேச்சு! என்னுடைய இஷ்டப்படி உடுப்பதற்குங்கூட எனக்குச் சுயேச்சை கிடையாதே! நல்ல சட்டைபோட்டால் 'டம்பாச்சாரி' என்று என் காதுபடப் பரிகாசம் செய்வார்கள்! என் மனப் போக்குக்குத் தகுந்தபடி உடுத்தால், பித்துக்கொள்ளி, கோமாளி, அசடு, அரைப் பைத்தியம், சிசம், என்று குழந்தைமுதல் கோட்டான்வரையில் என்னைப் பரிகாசம்செய்வார்கள். இந்த வேதனையை எப்படிச் சகிப்பது! ஆகவே வேறு விமோசனமில்லை. நாலு பேர் எப்படி உடுக்கிறார்களோ அப்படித் தான் உடுத்துத்தீரவேண்டும்! வேறு விதி? வயிற்றுக்குச் சோறு இல்லாவிட்டாலும் உடுக்கத் துணி மாத்திரம் பிறர் கண்குளிர இருக்கவேண்டும். இல்லாவிடில் சமூகப் பிரஷ்டனாகத்தான் திரிய வேண்டும். சுயேச்சையா?

எனது இஷ்டப்படி என் வீட்டுக்குள்ளேயே என்னை இருக்கவிடமாட்டேன் என்கி

றார்களே, எனக்கு ஏது சுயேச்சை? மாடியில் ஒரு அறையில் உட்கார்ந்துகொண்டு, கதவையும் அடைத்துவிட்டு நான் சிந்தனையில் மூழ்கிக்கிடந்தாலும், தடதடவென்று கதவையிடித்து ஐயா, ஐயா வென்கிறார்கள். யார் என்று கேட்டுக்கொண்டு கதவைத் திறந்தால், "தெருக்கோடியில் பஜனையொன்று செய்கிறோம், அது சமாப்தியாகிறது. நாளையதினம் வனபோஜனம்—அதற்குச் சந்தா வசூல் செய்கிறோம். உம்மாலான கைங்கரியம் போடவேண்டும்" என்கிறார்கள். ஊரார் கூத்துப் பார்க்கவும் ஆவா எண்ணெய் வார்க்கவும்! பஜனை கோஷ்டிக்கு வனபோஜனமாம், நான் அதற்குச் சந்தா கொடுக்கவாம்! மாட்டேன் என்பதற்கு எனக்குச் சுயேச்சையுண்டு! ஆனால் தைரியமுண்டோ? நீசன் என்பார்களே! நாஸ்திகன் என்று தூற்றுவார்களே! கஞ்சன் என்ற பெயர் வந்துவிடுமே. தெய்வமே! என்று எண்ணிக்கொண்டு ஐந்து ரூபாய் கொடுக்க வேண்டியதுதான்!

அலுத்துச் சலித்து அக்கடா வென்று அயர்ந்து நித்திரை செய்யும்போது, வாண வெடியும், மண்டைவிளக்கும், நாதஸ்வரமும், பாண்டுமாக ஒரு ஊர்வலம் வந்துவிடுகிறது. கதவைச் சார்த்திக்கொண்டு தூங்கமுடிகிறதா? தெருவில் ஒருவர் குழந்தைக்குக் கலியாணம் நடத்துகிறார். ஆசையுடன் மந்தைகூட்டி, சந்தை வளைத்து ஊர்வலம் விடுகிறார். இரவு ஒருமணிதான்! அசந்தர்ப்ப வேளைதான். அவர் செய்வது அக்கிரமந்தான். எனக்குச் சுயேச்சையுண்டு. நான் தலையணையை இறுகக் கட்டிக்கொண்டு தூங்கிவிடலாம்! ஆனால்! என்னை ஒரு அரசிகன் என்பார்களே! அசூயைக்காரன் என்றும் பட்டம் கட்டுவார்களே. பக்கத்திலிருப்பவர் பச்சென்றிருப்பதைப் பார்க்கச் சகிக்காதவன் என்றும் சொல்லுவார்களே. ஆகவே கண்ணைத் துடைத்துக்கொண்டு, எழுந்து வெளியேவந்து, சந்தனம், பன்னீர், புஷ்பத்தை வாங்கிக்கொண்டு, மணமக்களைப் பார்த்து, கண் குளிர்ந்தமாதிரி பாவித்துவிட்டு, ஊர்வலம் போனபின் உள்ளேபோக வேண்டும்—இதுதான் சரியான ஆசாரம்!

நாள், நக்ஷத்திரம், ராகுகாலம், குளிகை காலம், எமகண்டம், சூலம், வர்ஜ்யம் இவைகளில் நம்பிக்கையில்லாதவர்கள் யாராகிலுமுண்டோ? சீமைக்குப்போய்ப் பத்துவருஷங்கள் தங்கிவிட்டு வந்திருக்கலாம்—ஒரு வெள்ளைக்காரியையும் கலியாணம் பண்ணிக்கொண்டு இருக்கலாம். அப்படியும், ஒரு சனிக்கிழமை காலையில் 9 மணியிலேயிருந்து 10½ மணிக்குள்ளே ஒரு பவுண்டன் பேனா கூட வாங்கமாட்டார். ராகுகாலம் போகட்டும் என்பார்! ஒரு மோட்டார்காரைப்போலப் பெரிய வஸ்து வாங்குவதென்றால் புரோகிதரைக் கூப்பிட்டுப் பஞ்சாங்கம் பார்த்து, நல்ல நாள் குறிக்கச்சொல்லுவார். இன்னும் பெரிய விஷயம், அதாவது ஒரு வீடு வாங்குவதைப்போல் வந்துவிட்டால், ஜோஸ்யரைக் கூப்பிட்டு, தம்முடைய ஜாதகம், தம்முடைய பாரியையான வெள்ளைக்காரியினுடைய ஜாதகம், இரண்டையும் கணிக்கச்சொல்லி, பொருத்தம் பார்க்கச் சொல்லுவார். ஒரு சமூகத்தில் சிலவிதக் கொள்கைகள் தொன்றுதொட்டு ஏற்பட்டுவிட்டால் அவைகளை மாற்றுவது பிரும்மதேவனாலும் ஆகாதகாரியம். விவேகத்துக்கு விரோதமானாலும், அறிவுக்கு விரோதமானாலும், அநியாயமானாலும் அவைகளைப் பற்றிக்கொண்டுதானிருப்பார்கள் சமூகத்தின் அங்கத்தினர்கள்!

நாலு பேருக்குப் பயப்படுகிறோம்! சமூகத்துக்குப் பயப்படுகிறோம்! நவக்கிரகங்களுக்குப் பயப்படுகிறோம்! ஜோதிஷத்துக்குப் பயப்படுகிறோம்! இதரவிதக் கட்டுப்பாடுகள்தான் இருக்கவே இருக்கின்றன: அரசாங்கக் கட்டுப்பாடுகள், ஜாதிக் கட்டுப்பாடுகள், குடும்பக் கட்டுப்பாடுகள், பிரத்தியேக சங்கங்களின் கட்டுப்பாடுகள் அவையாவன, "ஸ்வயங்கிருத அபராத" கட்டுப்பாடுகள்—இவைகளைப் போன்றவை. இவ்வளவு நிர்ப்பந்தங்களுக்கு அடங்கியிருக்கச் சம்மதப்பட்ட பிறகு, சுயேச்சை, சுயாதீனம் என்கிற வார்த்தைகளுக்குப் பிரமாதமான உத்கிருஷ்டம் கொடுக்கிறோமே அது எதற்கு என்றுதான் எனக்கு விளங்கவில்லை. நான் சுயேச்சையை விரும்பப்பட்டவன் என்றும், என் இஷ்டம் இது என்றும், என் மனப்போக்கு அது என்றும் என் மனச்சாட்சி இப்படிப்பட்டது என்றும், என் கொள்கை அப்படிப்பட்டது என்றும் வீர வாக்குகளைக் கொட்டுகிறோமே அவைகளுக்கு ஏதாவது அர்த்தமுண்டா? சுயேச்சையென்பது சுத்தப்புரளி, வெட்டிப் பேச்சு! சமயத்துக்குத்தக்கபடியும், சமூகத்துக்குத் தகுந்தபடியும் நாமெல்லோரும் நடந்துகொள்ளுகிறோமே தவிர வேறு ஒன்றும் கிடையாது. நாமெல்லோரும் பட்டுப்பூச்சிகள்தான்; பந்தங்களால் கட்டுண்டு நசித்துப் போகிறோம்—எட்டுக்கால் பூச்சி மாதிரி எப்போது பந்தங்களை விலக்கி, வெளியேயிருந்து விவகாரங்களை நடத்துகிறோமே அப்போதுதான் நம்முடைய வீர வாக்குகளுக்கு அர்த்தமுண்டு.

பண்டாரம் மகன்

சபரி

உத்தமபாளையம் என்பது ஒரு மலைப்பாங்கான இடம். பாளையம் என்று சுருக்கமாக அவ்வூரைக் குறிப்போரும் உண்டு. தென்னிந்தியாவில் பல வளமும் நிறைந்த சில இடங்களில் பாளையமும் ஒன்று. நெல் வளம் மிகுதி அங்கு. பெரியாற்றுப் பாசனத்தின் தலைவாசல் அவ்வூர். மலைவளங்கொண்ட தமிழ்ப் பள்ளத்தாக்கு உத்தமபாளையமும், சுற்றுப் புறங்களும்.

கோடைக் கொதிப்பில் அங்கே குளுமை உண்டு. 'குது குது' வென நடுக்கும் சாரலுமுண்டு. தென் மேற்குத் தென்றலின் முதல் திசையே அதுதானே.

பாரதப் பண்புப்படியே, செழித்த அப்பூமியிலும் ஏழைகள்தான் மிகுதி. நெல் வயல் மிகுந்தும் புல் விளைவிக்கக்கூட காணி நிலம் இல்லாத பரம்பரை! பணக் குமாரி வம்புப் பிடியாகச் சிலரிடம் மட்டுமே அகப்பட்டுக்கொண்டு தவித்தாள். குல வழக்கிலும். பண வழக்கிலும் உயர்ந்த அப்பிரமுகர்கள், கேள்வி ஞானத்தால் மட்டும் பணத்தை அநுபவித்து வந்த சேரி மக்களைக் கண்டபடி 'உபயோகித்தனர்.'

பணக்காரரை எதிர்த்து வலிய சிவப்புச் சட்டையர்களாகச் சேரியில் யாருக்கும் துணிவு கிடையாது.

இந்தச் செழித்த ஊரில் சில வாரங்களாவது 'பசி யின்றிக்' கழிக்கலாமென்றுதான் அந்தப் பிச்சைக்காரன் மதுரையிலிருந்து கால்நடையாகவே புறப்பட்டுவிட்டான். அவனுடைய அப்பன் உத்தமபாளையத்தில் தன் பழைய அநுபவத்தைத்தான் மகனுக்குப் பிதிரார்ஜிதமாக்கி விட்டு மடிந்தான். ஏன், ஒரு ஓட்டையும் கொடுத்திருக்கிறான், பாவம், தன் குலம் ஓங்கட்டும் என்ற பெருநினைப்போ என்னவோ? நல்லவேளை; மதுரையிலிருந்து பாளையத்துக்கு ரயில் மார்க்கமில்லை. இல்லையென்றால் அவன் தேசத்துரோகம் பண்ணிக்கொண்டே பாளையம் வந்திருப்பான். பஸ்களில் யாரும் தேசத்துரோகம் பண்ணமுடியாதல்லவா. அவைதான் இன்னும் சர்க்காரின் சொத்தாகவில்லையே!

தன் அப்பன் உத்தமபாளையத்தைப் பற்றிக் கூறிய செழிப்பு விவரங்களைப்பற்றிச் சந்தேகம் எழும்போதெல்லாம் அந்தந்த ஊராரிடம் விசாரிக்கத் தொடங்கிவிடுவான்.

"ஏஞ் சாமி, இந்த பாளையம் வந்து இங்கிருந்து எம்புட்டுத் தூரமிருக்கும்?"

"அதா, இங்கிருந்து நாப்பது மைல்"

"அது நல்ல செழிப்பான ஊர்தானுங்களே? எங்களைப் போலவங்களுக்கு புழைப்புக் கெடைக்குமுங்களா?"

"அட, மதுரை ஜில்லாவிலேயே தஞ்சாவூர்ப் பக்கம் மாதிரியில்ல அந்தப் பாளையம், ஏதோ சோறுங்ற இடத்தில் ஒரு கூளாச்சுங் கெடைக்கும் போ" என்றபதில் அவனைப் புளகாங்கிதமடையச் செய்துவிடும். தனக்கு வழிகாட்டிக் கொடுத்த தன் அப்பனை நன்றியோடு நினைப்பான் ஒருமுறை, அப்புறம் அடுத்த ஊர் வரும்வரை பாளையம் ஸ்மரணைதான் பாவம் அவனுக்கு.

இப்படியாகத்தானே உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி, தேனி முதலிய பல ஊர்களையும் கடந்தான். இளம் தாடையோடு புறப்பட்ட அவன் முகத்தைத் தாடியும் மீசையும் முற்றுகையிட்டன. பழைய காவி அங்கி, பழகிய திரு ஓடு, புதுத் தாடியும் மீசையும். அவன் இப்பொழுது முழுப் பிச்சைக்காரன் ஆனான், 'ஏண்டா, இப்படி தடிப் பயல்மாதிரி இருக்கிறாயே வேலை வெட்டி செய்து பிழைத்தால் என்ன?' என்று யாரும் அவனைக் கேட்டுவிடமுடியாது. ஏனெனில் அவனுக்கு ஏற்கனவே இளைத்த உடல். இப்பொழுது பல நாள் நடையும், களைப்பும் சேர்ந்து குச்சியாயிருந்தவனைத் துரும்பாக்கிவிட்டது. பல ஊர்க்காரரும் பாளையத்துக்குத்தான் வழிகாட்டி, அவ்வூரின் செழிப்பைத்தான் பிரதாபப்படுத்தினார்களேயொழிய ஒருவராவது "ஏன் எங்கள் ஊரும் நல்ல ஊர்தான். இங்கேயே இருந்து காலங்கடத்துறதுதானப்பா? அவ்வளவு தூரம் அலைவானேன்?" என்று கூறி அவனை நிறுத்தவில்லை. ஊர்க்காரர்களுக்குத் தெரியாதா, ஒரு பிச்சைக்காரனுக்கு இடங்கொடுத்தால் தொத்து வியாதி போல் பல்கிப் பல பேர்கள் ஆகிவிடுவார்கள் என்று. நாட்டின் நலம் கருதி அவனைத் தங்கள் ஊர்களில் நுழைய விடாத பெரியார்கள் பிச்சைக்காரர்கள் தொந்தரவின்றி நீடூழி வாழட்டும்.

கைகளும் கால்களும் சோர்ந்த நிலையில் பன்னெடு நாளாய்க் காணத்தவித்த உத்தம பாளையத்திற்கு வந்துவிட்டான். ஊருக்கு ஐந்து மைல் தூரத்திலேயே அவன் கண்ட பெரியாற்றின் ஓட்டமும், பசுமை நிலங்களும், ரஸ்தாவின் இரு புறத்துத் தென்னஞ் சோலைகளும் அவனைப் பரவசப்படுத்திவிட்டன. மதுரையின் வெப்பத்திலும், இளகிச் சூடேறிய தாரிலும் அநுபவப்பட்டிருந்தவனுக்குப் பாளையத்தின் நுழைவாயில்

பலபல குளிர்ந்த நினைவுகளைக் கிளப்பிவிட்டது. பாலும் தேனும் பாய்ந்தோடும் பக்குவப்பட்ட பூமியாகவே அவன் பரதேசி மனம் எண்ணமிட்டது. 'அப்பன் சொன்னதிலும் தப்பில்லை' என்ற தத்வார்த்தம்கூடக் கொஞ்சம் தலைதூக்கி நின்றது அவனுடைய பசித்த உள்ளத்தில்.

என்னதான் செழித்துக் குலுங்கும் ஊரானாலும் அவனை ஒருவரும் கொட்டுமேளத்தோடும் மாலை மரியாதைகளுடனும் வரவேற்கப்போவதில்லை. அவன் ஒரு மந்திரியா என்ன? இலவச வரவேற்பு வைபவங்களுக்குப் பாத்திரனாக. ஏதோ மற்ற ஊர்களில் மூன்று நாட்களுக்கொருமுறை சாப்பாடு கிடைத்தால், கொஞ்சம் செழித்த இத்தகைய ஊர்களில் இரண்டு நாட்களுக்கொருமுறையாகிலும் கிடைக்குமல்லவா? இதுதான் அவன் எதிர்பார்த்தது.

இதற்குமேல் எதிர்பார்க்க அவனுக்கு உரிமைதான் ஏது? "வானளாவிய பழச் சோலைகளும், மாதம் மும்மாரி பாயப்பெறும் வயல் நிலங்களும் நிறைந்த நாடு' என்பதெல்லாம் வர்ணனை அளவில்தானே. வர்ணனைகளும், வாதங்களும் அதற்கேற்ற சூழ்நிலைகளையுமே தன் பண்பாகக் கொண்டிருக்கும் வரை பாரத பூமியில் பரதேசிகளுக்குப் பஞ்சம் ஏது?

எண்ணற்ற காலமாய்த் தவம் கிடந்து வரம் கிடைக்கும் விநாடியில் பேசச் சக்தியற்றவனைப் போல், உத்தமபாளையம் கடை வீதிகளைக்கண்டு மனம் பூரித்துப்போய் முதன் முதலாக அவ்வூரில் கையேந்தினான். 'முசு முசு' வென்று கண்கள் பஞ்சடைந்தன. உடல் பூராவும் ஒரே காந்தல். கால்களில் 'வெடுக் வெடுக்' என்ற கடுப்பு. வயிற்றிலே திராப்பசி நோவு. கையை நீட்டிக் கொண்டே "அய்யா சாமி..............." என்று நடந்தவனைப் பாளையத்து கருங்கல் ஒன்று ருசி பார்த்துவிட்டது.

காலைத் தட்டிவிட்ட கருங்கல் 'சொத சொத' வென்று ஒழுகிய அவன் இரத்தத்தால் அபிஷேகமானது. "கடவுளே" என்று காலைப் பிடித்துக் கொண்டே குப்புற விழுந்தான் பிச்சைக்காரன். வலது பாதம் முழுதும், உறைந்த ரத்தத்தால் பிசுக்கிட்டுப் போயிருந்தது. சுருண்டு மயங்கியவனைச் சுற்றிலும் உத்தமபாளையத்தின் உத்தமர் கூட்டம்! ஒருவராவது ஊரின் பெயரைக் காப்பாற்ற முன்னுக்கு வரவில்லை! இதர ஊர்களின் 'அ உத்தமர்களைப்போன்றே அவர்களும் வேடிக்கை பார்த்தனர், சிரித்தனர், முகத்தில் கையை ஊன்றினர், அநுதாபத்தோடு 'பாவம்......' என்றனர். பார்க்கச் சகிக்காத சிலர் அவனை நின்று பார்த்துவிட்டு அகன்றனர்.

யாருடைய உதவியுமின்றி நீண்ட தூரப் பயணம் வந்த பரதேசி யாருடைய உதவியுமின்றியே கண் விழித்தான். ஒரு வேளை இதைத்தான் உருவற்ற கடவுள் செய்கை என்கிறார்களோ, மனிதர் தலையிடாத இடங்களில் 'அவன்' காரியம் நடைபெறுவதென்பது என்னவோ நூற்றுக்கு நூறு உண்மையாயிற்றே!

கண் விழித்தவன் முதன் முதலாக அக்கரையோடு பார்த்துக்கொண்டது அத் திரு ஓட்டைத்தான். அதுதானே அவன் ஜீவ நாடி. நல்ல வேளையாக அவ் வோடு அவனுடைய உடைந்து சிதறிய உள்ளத்தைப்போல் நொறுங்கிப்போய் விடவில்லை. கீழே தன்னை மறந்து விழுந்த போதும் ஓட்டை விடாமல் பிடித்துக்கொண்டே விழுந்துகிடந்தான்.

கையில் பிடித்துச் சுவைத்துக்கொண்டிருந்த மாங்கொட்டையை அவ் வோட்டினுள் தூக்கிப் போட்டார் ஒருவர். அதையும் நிராகரிக்கவில்லை அவன். அதைத் தொடர்ந்து இரண்டு மூன்று முறுக்குத் துண்டங்களும், வடைத் தூள்களும் சில சிறுவர்களிடமிருந்து அவனைச் சரண் அடைந்தன. ஆகா! அவன் கண்களில்தான் எத்தனை நன்றி யுணர்வு! எங்கோ பறந்து போய்க்கொண்டிருந்த பாதி ஜீவன் 'படக்'கென்று அக் கண்களில் புகுந்துகொண்டதோ என்னவோ. அக் கண்களில் புது ஒளி யொன்று 'டால்' வீச ஆரம்பித்தது. எச்சில் பட்டவைதான் அப் பண்டங்கள், ஆனால் அவனுக்கு அவைகளின் மேல் எவ்வளவு ஆசை!

கிடைத்த சிற்றுண்டியும், வயிறு புடைக்கக் குடித்த தர்மக் கிணற்று நீரும் அவனைத் தெம்பு கொள்ளச் செய்தன. தாடியிலும், உடலிலும் ஒட்டிக்கொண்டிருந்த புழுதியைத் தட்டி விட்டுக் கொண்டே நடந்தான். நொண்டி நொண்டி நடந்தான். காலில் சக்தியில்லை. ஆனால் அவன் மூக்கிற்கு எவ்வளவு வீர்யம், எங்கிருந்தோ வந்த சுகந்த மணம், 'நளபாகத் தென்றல்' அவன் நாசியை உராய்ந்து சென்றிருக்க வேண்டும். அறுசுவை உண்டியின் ஆனந்தமான வாடை அவனுக்குப் பசி ரேகையை வரைய ஆரம்பித்தது. பாவம், ஒன்றுமில்லாதவர்களுக்குத்தான் பகவான் பெரிய வயிற்றைக் கொடுத்துக் கொடுமை செய்கிறான்.

மூக்குத் தெரிந்து சொன்ன சாப்பாட்டு வாசனையைச் சப்புக்கொட்டி வரவேற்றது நாக்கு. கண்கள் அத்திக்கை நோக்கின. கால்களின் பரிபூரண ஒத்துழைப்புடன் ஒரு வீட்டின் முன் போய் நின்றான். அவன் குறி தப்பவில்லை. நான்கு ஐந்து பேர் வீட்டினுள் அமர்ந்து சம்பிரமமாய்ச் சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். எல்லோருக்காகவும் உண்டாக்கப்பட்ட உலகத்தில் ஒருவன் வெளியே காலி ஓட்டுடன்: மற்றவர்கள் உள்ளே 'நிறைந்த' பசுமை இலைகளுடன்! இதுதான் செயற்கை.

பத்து வீடுகளில் கெஞ்சினான். பாதி ஓடு நிறைந்தது. அது போதும் அவனுக்கு. 'தனி மனிதனுக்கு இவ்வளவு தினசரி வரவு கிடைத்தால் போதும்' என்று வாழ்க்கைத் திட்டம் போட்டு வேலை செய்கிறதுகளே அரசுகள்—

இப் பிச்சைக்காரனிடம் பிச்சைதான் கேட்க வேண்டும் திட்டம் வகுக்க. அன்றன்றைய வரவை எவ்வளவு கச்சிதமாக்கிக்கொண்டிருக்கிருன்!

படர்ந்திருந்த ஆலமரம் ஒன்று. இந்நாட்டு 'மன்னர்'களுக்கு நிழலாகிக்கொண்டிருந்தது. வம்பு அளப்பதையே வேலையாகக்கொண்டு அதன் கீழ் உட்கார்ந்திருந்தனர் சிலர். வேறு வேலையில்லை அவர்களுக்கு. அவர்கள் வாழ்க்கையே வேறு தினுசு. பெண் சாதி பிள்ளைகள் நிறைய உண்டு. தினசரி உணவு என்பது இந்த உலகத்திலில்லை ஏதோ வேலை கிடைத்த அன்று கூலியும் கூழும். இதுதான் அவர்களின் காந்திஸம், கம்யூனிசம் எல்லாம். அவர்கள் 'பிச்சைக்காரன்' பட்டத்தை ஏற்கும் நிலையில் இல்லை. ஏனெனில் கௌரவ உலகவாசிகள்! எவ்வகையிலும் அவர்களுக்குச் சம்பளமில்லை யல்லவா! இந்தியக் குடியரசின் ஜனங்களில் இவர்களுக்கும் சமத்துவம் உண்டாம். சட்டம் சொல்கிறது அப்படி. அம்பேத்காரின் அரசியல் இவர்களைக் கூட அணைத்து ஆதரிக்கிறதாமே. வாழட்டும் பாரதக் குடியரசும், பாமர மன்னர்களும்!

பிச்சைக்காரன் இவர்களைக் கடந்து கொஞ்ச தூரத்தில் போய் உட்கார்ந்துகொண்டான். ஒரே ஆலமர நிழல்; அதன் கீழ் ஒரே மனித வர்க்கம். அவனும், அவர்களும் நெருங்கிப் பிணைந்து உட்கார முடிகிறதா? ஒரே பாரத தேசம்; ஒரே பாரத இனம். ஆனல் பிரிவு? நம் பாரதப் புண்ணிய பூமியின் 'டிரேட் மார்க்' அது.

"கவலையில்லாத பிழைப்பு" என்முன் கௌரவ பாரத மகன் ஒருவன், பிச்சைக்காரனின் ஓட்டைச் சுட்டிக்காட்டிக் கொண்டே.

"ஓட்டுலே என்னடா?" என்முன் இன்னெருவன்.

"சும்மா நாலு வீட்டிலே எடுத்த சோறுங்க சாமி" என்முன் பிச்சைக்காரன்.

"எந்த ஊரப்பா?"

"மதுரையிங்க"

"எல்லாரும் பட்டிகள்ளேயிருந்து பட்டணங்களுக்குப்போனு, நீ பட்டணத்திலே யிருந்து இங்கே வந்திருக்கிறியே?"

"................................"

"அங்கே ரேஷன் அரிசி உடம்புக்கு ஒத்திருக்காது. இப்படி நெல் விளையுற இடமா பார்த்துப் புறப்பட்டுட்டாரு துரை"

"கட கட" வென்று சிரித்தனர் எல்லோரும், லட்சியமே இல்லாத பிச்சைக்காரன் எதையும் லட்சியம் செய்யாமல்ஓட்டைக்கந்தைத்துணியால் மூடி மார்போடணைத்தபடியே மரநிழலில் படுத்து விட்டான். மரத்தின்மேல் குரங்குகளின் கிரீச்சல், காகங்களின் கரஹரப்ரியா. மரத்தின் கீழ் வம்பர்களின் துன்பக் கதறல், சில்லறை அரசியல், சினிமா முணகல், சிற்றின்ப உரையாடல்கள் 'அமைதியின்' நடுவே அயர்ந்துவிட்டான் பரதேசித் தமிழன்.

பரதேசி பாளையத்திற்கு வந்து பத்துத் தினங்களாகிவிட்டன. பத்துத் தினங்களிலும் பதறிய வயிற்றுக்குச் சிறிது ஓய்வு. அவன் தங்குவதற்கு ஒரு இருப்பிடமும் தேடிக்கொண்டான்.

"ஏய் பிச்சைக்காரா, இங்கேயெல்லாம் படுக்கக்கூடாது. இது குடியானத்தெரு. மேற்கே போ. சேரியிலே சாவடி கீவடி யிருக்கும் படுத்துக்கிடலாம்." என்று ஒரு புண்ணியவான் மழையோடு மழையாய் விரட்டினன்.

"டே யாருடா அங்கே, இந்த நேரத்தில் சுத்திகிட்டு? இங்கேயெல்லாம் இனி ஒரு தடவை பார்த்தேன்னு ஸ்டேஷனுக்கு இழுத்துகிட்டுப் போயிடுவேன். போ மேலத் தெரு பக்கம்" என்று அதட்டினன் ஒரு போலீஸ்காரன்.

இப்படி பல நாள் அதட்டல்களுக்குப் பிறகு சேரியே கதியென வந்து ஒடுங்கிவிட்டான். வந்த புதிதில் கிடைத்துக்கொண்டிருந்த அரிசிச் சாதம் இப்பொழுது கிடையாது. சேரியில் கிடைக்கும் கேழ்வரகு, சோளம் இவற்றின் கூழே அவனுக்குப் போதுமானதாயிருந்தது.

"பட்டணங்கள்ளே எப்பொவாவது ஏதாவது கெடச்சாலும். பலகாரம் பட்சணமா கெடைக்கும். இங்கே நெறையத்தான் கெடைக்குது. ஆனல் அத்தனையும் கூழு" என்று அவனுகவே ஒரு நாள் சிரித்துக்கொண்டான்.

சேரியில் ஒரு கூரைச் சாவடி. அதுதான் அவன் இருப்பிடம். பகலெல்லாம் பரக்கக் காட்டியலையும் திருஓட்டை, இரவில் குப்புறப்போட்டுத் தலையணையாக்கிக்கொள்வான். அடுத்த நாளைக் கென்று எதுவும் அவன் மீத்து வைப்பதில்லை. மீத்துவைக்க முடியாத நிலையில்தானிருந்தான். ஏனென்றால் சேரிக் குழந்தைகள் சிலர் அவனைச் 'சாமி' உறவு கொண்டாட ஆரம்பித்துவிட்டனர். மாலை வேளையில் அவன் சாவடியையடையவேண்டியதுதான், குழந்தைகள் சூழ்ந்துகொள்வர். அவன் கொண்டுவரும் தின்பண்டங்கள், கூழ் இவற்றில் பங்கு பெறுவர், 'பிச்சைக்காரனிடமும் பிச்சையா?' என்று அவன் மனது சிரிக்கும். கை பரிமாறும். வாய் சிறுவர்களுக்குக் கதைகள் சொல்லும். சேரியில் 'ஜனரஞ்சகனுகி' விட்டான்.

அவனும் மனிதன் தானே. முன்னேற்றத்தில் ஆசையிராதா? என்முவது ஒரு நாள் அந்தப் பிச்சைப் பிழைப்பைத் தூர எறியவேண்டுமென்ற அவன் நினைவுக்கேற்ப அவ் வூரின் கடைசியில் மூலிகை மருத்துவன் ஒருவன் வந்து சேர்ந்தான்.

ஒரு தினப் பழக்கம் இருவரையும் நண்பர்களாக்கி விட்டது. தினத்துக்கொரு முறை பிச்சைக்காரன் மருத்துவனுக்குச் சாப்பாடு கொடுக்கவேண்டியது, அதற்குப் பதிலாக மருத்துவனிடம் வைத்தியம் கற்றுக்கொள்ளவேண்டியது என்ற உடன்பாடு இருவருக்குள்ளும்.

அரைகுறை முறைகளால் ஆரம்ப வைத்தியஞ்செய்ய ஆரம்பித்துவிட்டான் பரதேசி. மருத்துவக் குரு செல்லும் வீடுகளுக்குச் சிஷ்ய முறையில் சென்று பழகினான். ஒரு நாள் மருத்துவனின் வார்த்தையின் படியே தன் தாடி மீசைகளைச் சிரைத்துவிட்டான். 'பளிச்'சென்று அவனைப் பிச்சைக்காரனுக்கிக் காட்டிற்றும் அவ்வடையாளங்கள். இப்பொழுது காவி யொன்றுதான் அவனை 'மாஜி' யாக்கிக் கொண்டிருந்தது.

அன்று இரவு காவி அங்கியையும் கழற்றிவிட்டு எங்கோ கிடைத்த பழைய வேட்டி யொன்றையும், கிழிந்த சட்டை யொன்றையும் போட்டுக்கொண்டு பூரண நிலவொளியில் தன் முகத்தை எங்கோ பொறுக்கியெடுத்த கண்ணாடித் துண்டில் பார்த்து நகைத்தான். 'இவன் பரதேசிதான்' என்று தெரியாத பெண்கள் அந்த நிலையில் அவனைப் பார்த்திருந்தால் காதல்கூடக் கொண்டுவிடுவார்கள் போலிருந்தது அவன் தோற்றம்.

ஆயினும் அவ்வளவு சீக்கிரத்தில் காவியைக் கழற்றி உதற அவன் துணியவில்லை. மறுபடியும் அப்பண்டாரத் துணியை உடுத்திக்கொண்டான்.

இப்பொழுது அவன் அரைப் பிச்சைக்காரன். இரண்டொரு தினங்களே பிச்சையெடுப்பான். மற்றத் தினங்களை வைத்தியம்செய்து வந்த வரவால் கழிக்கலானான். அவன் கைராசி, சிலர் வீடுகளுக்கே அழைத்து வைத்தியம் செய்து கொண்டனர். பரதேசித் தமிழன் 'தன்மானத்' தமிழனாக மாறிக்கொண்டிருந்தான்.

தென்மேற்கு மலையின் குளிர்காற்று, ஆடிக்காற்றுப்போல் 'வெடவெடக்க வீசியது.' பரதேசி—வைத்தியன்' குளிரில் நடுங்கிக்கொண்டே சாவடியை அடைந்தபொழுது இரவு சுமார் எட்டு மணியிருக்கும். எங்கேயோ ஒரு சில்லறை 'ஹோட்டலில்' சாப்பிட்ட ஏப்பக் குரலோடு குன்றிக் குறுகிப் படுத்தான். தூக்கம் வரவில்லை. சிந்தனை வண்டி புறப்பட்டது. எங்கிருந்தோ வந்த சிறு குழந்தையின் அழுகைக் குரல் அவன் சிந்தனைப் பயணத்திற்கு ஒரு 'பிரேக்' ஆகியது

சாவடியிலிருந்து இரண்டு மூன்று குடிசைகள் தள்ளி, ஒரு 'பெரிய வீடு.' அங்கிருந்துதான் அழுகைக் குரல். நேரம் நடு இரவுக்கு மேலாயிற்று. அழுகை ஓயவில்லை. அவ் அழுகையையே கூர்மையாய்க் கேட்டுக்கொண்டிருந்த அவன் சலிப்போடு 'உச்'சுக் கொட்டிக் கொண்டே எழுந்தான். அழுகைக் 'குரல் வீட்டை'யடைந்து "யாருங்க ஐயா உள்ளே?" என்று மெதுவாய்க் கூப்பிட்டான்.

கதவு திறந்தது. பெண் ஒருத்தி "யாரையா அது?" என்ற இரைச்சலுடன் வெளியே வந்தாள்.

"இல்லீங்கம்மா, ஓயாம கொளந்தை அழுதுகிட்டிருக்குதுங்களே ஏதாச்சும்............"

"அட பண்டாரமா...ஆமா ரெண்டு மூனு நாளா சொரம். நானு தனியா பயந்துகிட்டே உக்காந்திருக்கேன். சாவடியிலே ஒன்னைக் கூப்புடலாம்னு கொளந்தையக் கொஞ்ச நேரங்கூட தனியா விட முடியலே," என்று அழாத குறையாகக் கூறினள் அப்பெண்.

அதே நேரத்தில் சாவடியின் அருகே கரிய உருவம் ஒன்று தடியுங் கையுமாக வந்துகொண்டிருந்தது. அவ் உருவம் பண்டார வைத்தியன் நின்றுகொண்டிருந்த வீட்டையடைந்ததும், "எங்கம்மா பாக்கலாம்" என்று வைத்தியப் பண்டாரம் வீட்டினுள் நுழைந்ததும் ஏறக்குறைய ஏக சமய நிகழ்ச்சிகள். வந்த உருவத்தின் பற்கள் 'நெறு நெறு' வென்றன.

"எவனோ ஒருத்தனை என்ன தைரியமா நடுராத்திரியிலே கூப்பிட்டுட்டுப் போரு"என்ற புதுச் சிந்தனையைக் குதர்க்கமாகச் சிருஷ்டித்து விட்டது அவ்வுருவம்,

குழந்தைக்குக் குளிர்காற்று ஆகாதென்று வைத்தியன் உள்ளே நுழைந்தவுடன் பெண் கதவைச் சாத்தியது பெருந் தீமையாகப்பட்டது உருவத்தின் மனதுக்கு. உள்ளே என்ன நடக்கிறதென்று உற்றுக் கேட்டது உருவம். 'களா புளா' வென்று பேச்சுக் கேட்டதேயொழியத் தெளிவாய் விழவில்லை.

"உன் புருஷன் எங்கேயம்மா?" என்றான் வைத்தியன்.

"ஏலக்காய் மலைக்கு வேலைக்குப்போன அந்தப் பாவிக்கு ரெண்டு கடதாசி போட்டாச்சு குழந்தைக்கு சீக்குன்னு; இன்னம் வரலை" என்றாள் பெண்.

"அதுக்கென்ன பயப்படாதீங்க. நான் பாத்துக்கிறேன்; எல்லாம் சரியாப் போயிடும்." இது வைத்தியன்.

குளிரில் நடுங்கிக்கொண்டே வெளியே நின்ற உருவத்திற்கு மேற்படி வார்த்தைகள் 'உடைந்து' அதுவும் ஒன்றிரண்டாகவே காதில் பட்டன.

"என்......புருஷன்......பாவி......?"

"அதுக்கென்ன...... நானிருக்கேன்" என்பது போன்ற சொற்களையே செவியுற்ற உருவம் கோபத்தால் தன் மீசையில் கை வைத்தது. இதற்குள் கதவின் அசைவைக்கண்டு சற்று ஒதுங்கி மறைந்துகொண்டது.

வைத்தியன் வெளியேவந்தான். சாவடியை நோக்கி நடந்தான். கரிய உருவமும் அவனைப் பின் பற்றியது அரவமில்லாமல். சாவடியில் தன் மூட்டைக்குள் கையைவிட்டான். ஓட்டைக் கையிலெடுத்தான். மறுகணம் "பிச்சைக்காரப்பயலே" என்ற ஒரு உறுமல், அதை யொட்டி 'தடால்' என்ற பெரும் தடி அடி அவன் தலையில். மண்டை கிழிந்து, இரத்த ஓட்டம். திருவோடு தவறிச் சிதறியது. 'பொத்' தென்று கீழேவிழுந்தான் இரத்த வெறி பிடித்ததுபோல் அவ் உருவம் பழையபடி அவ் வீட்டிற்குக் கோப நடைபோட்டது.

"அடியே தாயம்மா......" என்ற இரைச்சலுடன் கதவை உதைத்துக்கொண்டு உள்ளே சென்றது. அடுத்த சில நிமிஷங்களுக்கெல்லாம் அப் பெண்ணின் தலை மயிரைப் பிடித்து இழுத்துக் கொண்டு சாவடிக்கு வந்தது. "பார் உன் கள்ளப் புருஷனை" என்ற வார்த்தைகளைக் கேட்ட தாயம்மாள் என்ற அப் பெண் பதை பதைத்துவிட்டாள். பயம், நடுக்கம் இவைகளின் மத்தியில் "அய்யய்யோ......நம்ம பயலுக்கு......வைத்தியம் பண்ண வந்தவரை......இப்பிடிக் கொண்ணுப் புட்டீங்களே......" என்று அரற்றினாள்.

கரிய உருவம் "ஆ..." வென்று வாய்விட்டு அலறத் தொடங்கியது. "அய்யோ தாயம்மா, என் மடத்தனத்தாலே இப்படிப் பண்ணிட்டேனே! எங் கொளந்தை...... எங் கொளந்தை......" என்று முடிக்கு முன்பே மயங்கி விழுந்துவிட்டது. ஏலக்காய் மலையில் வேலைக்குச் சென்று திரும்பிய தாயம்மாளின் கணவன் கந்தசாமிதான் அவ் உருவம். குழந்தைக்கு வியாதியென்ற தன் மனைவியின் கடிதப்படியே தோட்ட முதலாளிகளுக்கு கூடத் தெரியாமல் குழந்தையைக் காண இரவுக்கு இரவே ஓடி வந்தான்.

மலைகளிலும், காடுகளிலும் மழைக்குளிரையும் சட்டை பண்ணாமல் முப்பது மைல் தூரம் ஓடி வந்த ஆயாசம்—மலைக் கொசுக்களின் கைங்கரியமான மலேரியா சுரம்—மனைவியைத் தப்பாக விபசாரி என்று முடிவு கட்டிய சினப் பெருக்கு—இரவில் கண்ட பிச்சைக்கார வைத்தியனின் இரத்தப் பசை எல்லாம் சேர்ந்து கந்தசாமியைக் கதிகலங்க வைத்துவிட்டன. மயக்கமுற்றுத் தரையில் சாய்ந்த அவன் உடலும் சீக்கிரமே 'சில்' லிட்டுவிட்டது.

தாயம்மாளின் அலறல் சிலரைத் தூக்கத்திலிருந்து எழுப்பிவிட்டது. தள்ளாடித் தள்ளாடிச் சுவரைப் பிடித்துக்கொண்டே தன் வீடு சேர்ந்தவளைப் பயத்துடன் பார்த்துக்கொண்டே ஒரு கூட்டம் பின் தொடர்ந்தது.

தன் குழந்தையை நடுங்கும் தன் கரங்களால் ஸ்பர்சித்தாள். மருந்து எடுத்துவரச் சென்ற மருத்துவனை எதிர்பார்த்து அழுது அழுதுதானோ என்னவோ அக்குழந்தை கண்களை மூடிக் கொண்டு அலுத்துக்கிடந்தது. அங்கும் இங்கும் புரட்டினாள் தாய். அசைவில்லை குழந்தையிடம். அசைவுக்குக் காரணமான மூச்சு எப்பொழுதோ நின்றுவிட்டது.

அடுத்த நாள் காலை பிச்சைக்காரன் விட்டுச் சென்ற சாமான்களைச் சோதனை செய்தனர். உடைந்து கிடந்த ஓட்டுச் சில்களில் ஒன்றில் 'முத்துப் பண்டாரம் மகன் முனியாண்டி' என்ற கிறுக்கல்கள் காணப்பட்டன. ●

உங்கள் தினசரி தேவைக்கான

- சிறந்த தேன்
- சுத்தமான உப்பு (டேபிள் ஸால்ட்)
- விளக்கெண்ணெய்
- ஓமத்திராவகம்
- வாஷிங் சோடா
- பேதி உப்பு (எப்ஸம் ஸால்ட்)

இவை எங்களிடம் கிடைக்கும்

ஸ்ரீ வத்ஸா கெமிகல்ஸ் & டிரக்ஸ் லிமிடெட்

72, கோவிந்தப்பநாயக்கன் தெரு, மதராஸ் - 1.

ஆபீஸ் போன் } 4684

தபால் பெட்டி 1787

ஆயிரம் வருஷத்து நெய்

எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

சுகபோக புருஷன், போக்கியமெல்லாங் கண்ட பூமான், சரபோஜி மகாராஜன்! தஞ்சைச் சீமைக்குத் தனிச் சிறப்பு ஊட்டியவர்களுள் அவனும் ஒருவனும்.

ஒரு சமயம் பேதி மருந்து வேண்டினான் அப்பார்த்திபன். பேதி மாத்திரை கொள்வனோ? ஆமணக்கெண்ணெயை அருந்துவனோ? போக போக்கியத்துக்கு ஏற்றதாக இருக்கவேண்டுமே அப்பேதி மருந்து.

ஆதலின், மருத்துவ வல்லானொருவன் பூச்செண்டொன்று கட்டிக் கொணர்ந்தான்; அதனை மோக்கச் செய்தான் அம்மன்னவனை. ஒருதரம் மோந்தால் ஒரு தடவை, இரண்டு முறை மோந்தால் இரண்டு தடவை பேதியாகும்.

அத்தகைய பேதி மருந்து கொடுத்த வைத்தியன் பெயர் கண்ணுப் பிள்ளை என்பர் சிலர். அப்பிள்ளையைக் கட்டி யணைத்து மானியம் ஈந்தான் அச்சரபோஜி மன்னவன் என்று கன்ன பரம்பரை பேசும்.

இரண்டாவது உலக மகாயுத்தம் நேர்ந்த சமயம், ஜகப் பிரசித்திபெற்ற பீல்ட் மார்ஷல் ரோமல் என்பான் சகாரா பாலைவனத்தின் வழியே தனது படைகளுடன் கிழக்கு நோக்கி வந்தான் அலெக்ஸாண்டிரியா நகரை நோக்கி. பாலைவனத்திலே குடிதண்ணீருக்கும் உணவுக்கும் தக்கவகை ஏது?

ஐரோப்பாவிலிருந்து மத்தியதரைக் கடலின் குறுக்காகக் கப்பல்களின் மூலம் இத்தாலியிலிருந்து உணவுப் பொருள் அனுப்பலாம் என்றாலோ, அம்மத்தியதரைக் கடலிலே ஆங்கில யுத்தக் கப்பல்கள் நடமாடிக் கொண்டிருந்தன. ஆதலினால் ஜெர்மானியர் ஓர் உபாயம் செய்தனர்.

ஜெனரல் ரோமலுக்கும் அவன் படைவருக்குமாக ஏராளமான மாத்திரைகள்—டாப்லட்ஸ் என்பார்கள் ஆங்கிலத்திலே—செய்துகொடுத்திருந்தனர். அவற்றில் ஒன்றை வாயில் போட்டு மென்றால், ஒரு வார காலம் பசி தாகம் எடுக்காது. உடம்பும் இளைக்காது. வலிவும் குன்றாது.

இது கட்டுக்கதையாகத் தோன்றும் சிலருக்கு. ஆயினும் அப்பட்டமான உண்மையாம். அத்தகைய—பசி தாகம் தீர்க்கும்—மாத்திரை செய்யும் வகை துறைகள் வடமொழி நூல்களில் காணப்படும்.

ஆயுர்வேதத்திலே அவ்விதமான மருந்து வகைகள் எவ்வளவோ உண்டு. காயகல்ப முறையும் இருக்கிறது. காசு படைத்தோரிடமிருந்து காசைப் பறிக்கும் மாயமான காயகல்ப முறை அன்று.

பண்டித மதனமோகன மாளவியா என்பார் காயகல்ப சிகித்ஸை கொண்டார் தமது கடைநாளிலே, ஓரளவு நல்ல பலனும் அடைந்தார். அரிய ஆராய்ச்சி செய்துபார்ப்பின், அநேக அற்புத மூலிகைகளும் முறைகளும் புலப்படும். சாகப்பொழுது உண்டே யொழிய வேகப் பொழுது ஏது? நம்பினோர் கெடுவதில்லை, இது நான்மறைத் தீர்ப்பு என்று பாடிப்போனார் சுப்பிரமணிய பாரதியார்.

பெருநோய், தொழுநோய் என்று தமிழ் நூல்கள் பேசும். பெருவியாதி என்றும் புகலும். ஒரு மண்டலம் அல்லது இரண்டு மண்டலம் நியமப்படி சாப்பிட்டுவந்தால், அப் பெரு வியாதியை அறவே போக்க மருந்தொன்று உள்ளது.

குடியரசு பெற்றுமென்ன? உணவுக் கஷ்டத்தைப் போக்க முடியாமல், நமது மந்திரி

கள் திணறுகின்றனர். இந் நிலையில், அத்தகைய அரிய மருந்து வகைகளை ஆராய்ந்தறியும் துறைகளை அமைக்க அவகாசம் ஏது?

பெருவியாதியைப் போக்கவல்ல மருந்தினுக்கு உரிய ஒரு சரக்கு ஆயிரம் வருஷத்து நெய். அதுவும் பசுவின் நெய். டால்டாவும் இல்டாவும் பிரபல்மாயுள்ள இக்காலத்தில் நெய் ஏது? சுத்தமான நெய் ஏது? பசுவின் நெய்தான் ஏது? காப்பிக்குடிக்கே பால் பற்ற வில்லையே. வெண்ணெய் எடுத்து நெய் காய்ச்சப் பால் ஏது?

ஆயிரங்காலத்துப் பயிர், ஆயிரங்காலத்து கிழவி என்பர். இங்கே ஆயிரம் என்பது நெடுங்காலம் என்றே பொருள்படும். ஆயிரம் வருஷத்து நெய் என்பதில் உள்ள ஆயிரம் அப்படி அன்று. உண்மையில் ஆயிரம் வருஷத்து நெய்யாம்.

எவ்வகையான மேக நோயையும் போக்கவும், கெட்டுப்போன இரத்தத்தைச் சுத்தி செய்யவும், சரும வியாதிகளையெல்லாம் அகற்றவும், இன்னும் பலவற்றிற்கும் அந் நெய் பயன்படும். ஆயுர்வேத நல்லறிஞரைக் கேட்டுப் பாருங்கள்.

பசுவின் நெய் பரம புனிதமானது, அதனையே தினம் உணவுடன் கலந்து உண்டு வந்தால், மதி நுட்பம் அதிகரிக்கும்; மூளை குளிரும்; மூளை நரம்புகள் வன்மை எய்தும். முக விலாசமும் உண்டாகும். பெரியோரிலும் நோயாளரிலும் சிலர் பசுவின் பாலையே பெரிதும் விரும்புவர். குழந்தைகளுக்குப் பசுவின் பால் மிகவும் எடுத்தது. எனவே பசுவின் நெய் எவ்வளவு பெருமையுடையது என்று யூகித்துக்கொள்ளலாம். ஆயிரம் வருஷத்திய நெய், அதிலும் பசுவின் நெய் இப்போது எங்கே கிடைக்கும் என்று எவரும் மயங்க வேண்டாம். கிடைக்கும் இடம், அந்த இடத்தின் வரலாறு இவற்றை ஆராய்வோம்.

கேரள நாட்டை நிருமித்தவர் பரசுராமர். ஆதலின் அதனைப் பரசுராம க்ஷேத்திரம் என்பர். முன்னம் கண்ணபிரான் கடலகத்தே—மேலைக்கடலகத்தே வடமதுரை கண்டான் அல்லவா? அவ்வாறே கேரளத்தைக் கண்டார் பரசுராமர் என்று புராண இதிகாசங்கள் பகரும்.

வெளிவந்துவிட்டன!

கமர்ஷியல் வெளியீடான இரண்டு
இணையற்ற கலைப் பொக்கிஷங்கள்!

சோலைமலை இளவரசி
கல்கி எழுதியது .... விலை ரூ. 3-8-0

போரும் காதலும்
... டால்ஸ்டாய் எழுதியது. முதல் பாகம் 650 பக்கங்கள் கொண்டது.
மொழி பெயர்த்தவர்: பொ. திருகூடசுந்தரம் .... விலை ரூ. 10-0-0...

வியாபாரிகளுக்கு கமிஷன் 25% :: தபால் சிலவு தனி.

விபரங்களுக்கு :-
கமர்ஷியல் பிரிண்டிங் அன்
பப்ளிஷிங் ஹவுஸ்,
தபால் பெட்டி நெ. 1569, 46, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1.

Aykam

அச்சில்: அலை ஓசை, சிவகாமியின் சபதம் (கல்கி எழுதியது)

கேரளநாட்டை இப்போது சேர நாடு என்பர். திருவாங்கூர்' கொச்சி, மலபார், இம் மூன்றும் சேரநாடாம். அந் நாட்டினிலே முதன்முதல் உண்டான ஊர் திருச்சிவப் பேரூர் எனப்படும். அது மகா சிவ க்ஷேத்திரம். அதனை வடமொழியில் விருஷாசலம் என்று கூறுவார்கள்.

விருஷம் என்றால் நந்தி என்று அர்த்தம். அங்கே மலை ஒன்று தோன்றும். மண்ணை வெட்டிக் கொட்டி, அழகாகப் பண்ணினது போல் அது அழகாக இருக்கும். அந்த மலை பார்வைக்கு நந்திகேசுவரரைப்போல் தென்படும். அதன் உச்சியிலே மகத்தான சிவாலயம் ஒன்று இருக்கிறது.

அந்த ஆலயத்தில் ஒரு பெரிய ரிஷபத்தைக் காணலாம். அந்த ரிஷபம் சுத்த வெள்ளையாக இருக்கும். அந்த விருஷாசலத்தில் வரங்கிடத்தல் உண்டு. அதன் விவரம் என்னவென்றால்:—

ஆண்டவனது சன்னிதியிலே ஒன்று அல்லது இரண்டு மாதம் இருத்தல் வேண்டும். தினம் அங்குள்ள புண்ணிய நதியில் நீராடவேண்டும். ஆலயத்தில் அன்றாடம் கிடைக்கக்கூடிய தெய்வப் பிரஸாதத்தையே உணவாகக்கொள்ளவேண்டும். கொண்டு, அங்கேயே இரவு பகலாக இருத்தல்வேண்டும். இப்படி வரம் வேண்டி, அச்சன்னிதியில் காத்துக் கிடத்தல் பரம்பரையான கோட்பாடாகும்.

அத் தலத்தில் சிவராத்திரி மிகவும் விசேஷம். அங்கே புண்ணிய நதியொன்று ஓடுகின்றது. அதன் தண்ணீர் பலவாறான மூலிகைகளில் படிந்து ஓடிவரும். அதனால் அது புண்ணிய நதி எனப்படும்.

திருச்சிவப் பேரூர் அல்லது விருஷாசலம் என்னும் தலத்திலே ஆண்டவனுக்கு எப்போதும் பசுவின் நெய்யையே அபிஷேகம் செய்வார்கள். அவ்விதம் செய்தல் இன்று நேற்று அன்று. அத்தலம் தோன்றின நாள்தொட்டு நடந்து வருகிறது.

மூர்த்திக்கு அபிஷேகம் பண்ணிய நெய் மலைபோல் குவிந்திருக்கும். அதனால் மகா லிங்கத்தைப் பார்க்க முடியாது. அப்படி நிறைந்து கிடைக்கிறது பசுவின் நெய்.

கேரளத்திலே ஆயுர்வேத சாஸ்திரப் பயிற்சியும் ஆயுர்வேத வைத்தியமும் மிக அதிகம். மற்ற இடங்களைவிட அங்குத்தான் வடமொழிப் பயிற்சியும் மிகுதி. ஆயுர்வேதத்தில் புராதனமான கிருதம் (நெய்) பற்பல வியாதிகளைப் போக்கவல்லது. ஆயிரம் வருஷமாக இருக்கிற பழைய நெய் அத் தலத்தில் ஏராளமாக உண்டு.

ஆங்குள்ள வைத்தியர்கள் பழைய நெய் வேண்டும் என்றால் அத் தலத்திற்குச் சென்று வாங்கிவருவார்கள். அந்த நெய்யை இதர மூலிகைகளுடன் சேர்த்து எத்தனையோ வியாதிகளுக்கு உபயோகம் செய்வார்கள்.

திருச்சிவப் பேரூர் என்னும் புராதனமான பேரே நாளடைவில் திரிச்சூர் என மருவிற்று. ஆதி சங்கராச்சார்ய சுவாமிகளின் தாய் தந்தையரான ஆர்யாம்பிகையும், சிவகுருவும் அத்தலத்தில்தான் பிள்ளை வரம் கிடந்தார்கள். ஆண்டவனும் அருள் சுரந்து தாமே பிள்ளையாய் வந்து பிறப்பதாக வாக்களித்தார்.

அத்தகைய அருமை பெருமை வாய்ந்தது அத் திருச்சிவப் பேரூர். மைனர்கள் என போர் வேறுவிதமாக அதன் மகிமையைக் கருதக்கூடும். திருச்சூர் தாலுக்காவின் தலைநகரம் திருச்சூர். கொச்சி ராஜ்யத்தில் அது உள்ளது. மேலைக் கடற்கரையில் அதுவே முதன்மையான பட்டணம்,

கொச்சி அரசரின் அழகிய அரண்மனையை அங்கே பார்க்கலாம். அங்கே கிறிஸ்தவர்— ஸிரியன் கிறிஸ்தவர் மிக அதிகம். வர்த்தகமெல்லாம் அவர்களின் கையில்தான். ஊக்கமும் விடாப்பிடியும் அவர்களின் விசேஷ குணங்களாம்.

கள்ளிக்கோட்டை அரசர் என்ன, ஆங்கிலக் கும்பினியார் என்ன, ஐதர் என்ன, அவன் மகன் திப்பு என்ன, முன்னம் இவர்கள் அடுத்தடுத்து அந் நகரைக் கைப்பற்றி, ஆண்மை செலுத்த அரும்பாடுபட்டனர். புழையின் கரையிலே அது இருப்பதால் அங்கே வர்த்தகம் மிகுதி. ஸ்ரீ சங்கர மடங்கள் மூன்று அங்கே இருக்கின்றன. இது நிற்க,

ஆயுர்வேதத்திலே அரிஷ்டம், அசுவம் சூரணம், கிருதம், லேகியம். தைலம் என்று பலவகையான மருந்துகள் உண்டு. இருபது முப்பது விதமான கிருதங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கிருதமும் ஒவ்வொரு நோய்க்கு ஏற்றது. ஆயிரம் வருஷத்திய "பசுவின்" நெய் முக்கியமான கிருதங்களுக்கு மிகவும் அவசியம். அத்தகைய ஆயிரம் வருஷத்து நெய்—பசுவின் நெய்— அத் திருச்சிவப் பேரூரில்தான் கிடைக்கும்.

ஸிம்ப்ஸன் & கம்பெனி லிட்.

[ஆடோமோபைல் & ஜெனரல் இன்ஜினீயர்ஸ் உயர்தர கருவிகளும் உபகரணங்களும் உற்பத்தியாளர்கள்]

மதராஸ் 2

எங்கள் சொந்த தயாரிப்புகள்.

இணையற்றது. நம்பக்கூடியது.

கீழ்க் கண்டவைகளை விற்பனை செய்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம் :-

- வில் பாரோஸ்
- கொல்லுலைகள், துருத்திகள்
- அஸிடிலைன் ஜெனரேடர்கள்
- பதப்படுத்திய உருக்கு ஸ்பானர்கள்
- கைத்தொழிலுக்குரிய ஸ்டீல் சக்கரங்கள்
- ட்ராலிகள், ட்ரெய்லர்கள்
- ஸாகெட் ரின்ஞ்செஸ் (23 டைப்)
- போர்ட்டபில் க்ரேன்கள் (தொழிற்சாலைகளுக்கு)
- வண்டிகளுக்கான ஸ்டீல் ப்ராப்ஸ்
- தண்ணீர் தொட்டிகள் & தூக்கு வண்டிகள்

முதலானவைகள்

தலைமை ஆபீஸ் & தொழிற்சாலை

202/203, மவுண்ட்ரோடு, மதராஸ்—2.

பிராஞ்சுகள் :

பெங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, ஹைதராபாத் (Dn.)

டெப்போ :

கோயமுத்தூர்

"என் உணவு
எப்பொழுதும்
டால்டாவில்
சமைத்திருக்கிறதா
வென்று நிச்சயித்துக்
கொள்கிறேன்–

அது, தினசரி
செலவாகும் சக்தி
யை, திரும்பப்பெற
உதவுகிறது"



சமநிலை உணவில் உங்களுக்குத்தேவையான கொழுப்பைக் கொடுக்கிறது

HVM. 140-172 TM

மன்னிப்பு உண்டா?

கோமதி சுப்ரமணியம்

பளபளவென்று கண்ணைப்பறிக்கும் கலரில் நாலைந்து ஸில்க் துண்டுகள் சரஸ்வதியின் கரங்களில் தொங்கிக்கொண்டிருந்தன.

காலையில் கணவனுடன் சென்று எடுத்து வந்த துணிகளைத் தன் தோழியிடம் காண்பித்துக் கொண்டிருந்தாள்.

"இது எங்க லதாவுக்கு" என்று முதலில் ஒன்றை எடுத்துவைத்தாள். இரண்டாவதாக, ரோஸ் கலரில் மாம்பூ போட்டிருந்த துணியைக் கையிலெடுத்தபோது சரோவின் இளம் இதயத்தில் ஆசையென்னும் அலை லேசாக மோதத் தொடங்கியது. இந்த அழகிய துண்டு தன் பங்குக்கு வந்துவிட்டால்...

இதற்குள் அத்தை அதையும் லதாவுக்கென வைத்துவிட்டாள். போனால் போகிறது. அடுத்தாற்போல் அத்தை கையிலெடுத்த வைலட்கலரும் அழகாய்த்தானிருந்தது என்று எண்ணமிடுவதற்குள்ளாகவே அதுவும் லதாவின் பெயராலேயே வைக்கப்பட்டது.

அடுத்தடுத்து ஏற்பட்ட ஏமாற்றச் சுழலில் தத்தளித்து நின்றபோதுதான் மீதியிருந்த இரண்டு துண்டுகளையும் தனக்கெனக் கூறி முடித்தாள் அத்தை.

தனக்கு—தன் பங்குக்கு—இத்தனை துண்டுகளில் ஒன்றுகூட தனக்கில்லை என்றபோது சரோவின் விழிகள் ஏமாற்றத்தைக் கக்கின. அரைவயிற்றுச் சோற்றுக்கு அத்தையிடம் அடி உதை வாங்கும் அவள், அழகிய ஸில்க் துணிகளின்மேல் ஆசைவைக்கக் கூடாதென்றுணருகிற பருவத்தை இன்னும் எட்டாத குறைதான் சரோவின் கைகூடாத ஆசைக்குக் காரணம். 'இனமறியா வயது' என்பார்களே அந்தப் பருவம். லதாவைப் போல் சரோவுக்குத் தாயார் என்று ஒருத்தி இருந்தால் இடுப்பில் தூக்கி, சாதம் ஊட்டும் வயதுதான். தாயை இழந்த குறையினால் இன்று சரஸ்வதியின் கையில் இடிசோறு வாங்கித்தின்று வயிறு வளர்க்கும் நிலையிலிருந்தாள் சரோஜா.

சரஸ்வதி, சரோவுக்குத் தூரப்போனவளுமல்ல. அதோடு துர்க்குணமே உருவாகக் கொண்டவளுமல்ல. அந்த நாளில் அவள் தாயற்று, தன் அண்ணனிடம் வளர்ந்தபோது அண்ணனின் மனைவி—சரோவின் தாயார்—செங்கமலம்படுத்தியபாடு இன்றும் நினைவில் நின்று சரோவைக் கொடுமைப்படுத்தத் தூண்டுகோலாய் நின்றது. பழிக்குப்பழி என்ற தத்துவத்தில் பழிதீர்த்துக் கொண்டாள் சரஸ்வதி.

தனக்குப் பட்டுத்துணி கிடைக்கவில்லையென்கிற ஆத்திரத்தை மனதில் வைத்துக் கொள்ளத் தெரியாமல் வாயைவிட்டும் கொட்டிவிட்டாள்.

"என்ன அத்தை, அத்தனை துணிகளையும் உனக்கும் லதாவுக்குமே வைத்துக் கொண்டாயே. எனக்குமட்டும் ஒன்றுமில்லையா?" என்று குழந்தை மனதுடன் கேட்டுவிட்டாள்.

"நீ கெட்ட கேட்டுக்குப் பட்டுத்துணி ஒன்றுதான் குறை. உன் அம்மா ஒரு ஸில்க்ரிப்பனுக்கு என்னைப் படுத்திவைத்தபாடு இன்னும் என் நெஞ்சைவிட்டு அகலவில்லை. இந்த லக்ஷணத்தில் பட்டுத் துணியா வேணும் உனக்கு?" என்று பட்டென்று கன்னத்தில் ஒரு அறை வைத்தாள்.

சரோவின் அழுகுரல்கேட்டு மாடியிலிருந்து இறங்கிவந்த அவள் கணவன் குழந்தை அடிபட்டு நின்ற நிலையைப் பார்த்து மனம் பதறினான். கோபத்தால் அவன் கண்களில் சிவப்பேறின.

"சரஸ்வதி, வர வர உன் அக்கிரமம் சகிக்கவேயில்லை" என்று சீறினான்.

"போதும் உங்கள் பரிவு. அந்த நாளில் அவ அம்மா என்னைப் படுத்திவைத்தபாடு...!

"சீ, வாயை மூடு. குழந்தையிடம்போய் இதெல்லாம் என்ன பேச்சு......"

"குழந்தையாம் குழந்தை, யாருடைய குழந்தை அவள். என் அண்ணனின் குழந்தைதானே, எனக்கில்லாத பரிவு உங்களுக்கேன்......"?

'மனிதத் தன்மையற்ற உனது பரிவுதான் உலகப்பிரசித்தமாச்சே. நீ இப்படி நடந்து கொள்வது உன் அண்ணுவுக்குத் தெரிந்தால்......!"

'தெரிந்தால் தெரியட்டுமே!'

'அவர் மனம் எப்படி புண்படும் என்பதை யோசித்திருந்தால்......?'

'யோசனைக்கு இடமேயில்லை. உடன் பிறந்த சகோதரி ஹிம்சைப்பட்டபோது புண்படாத மனமா இப்பொழுது புண்படப் போகிறது. அவர் மனம் அன்பும் பாசமும் வறண்டுபோன உணர்ச்சி மரக்கட்டை என்பது எனக்குப் பல வருஷங்களுக்கு முன்பே தெரியும்!' என்று கூறிவிட்டுச் சட்டென்று உள்ளே போய்விட்டாள்.

2

அப்பொழுது சரஸ்வதிக்கு வயது பதினொன்று. வீட்டுக்கு வந்த மருமகள் சரஸ்வதியின் மதனி வந்த புதிதில் தன் நாத்தியிடம், மிகவும் அன்பாகத்தான் நடந்துகொண்டாள். வருஷங்கள் உருண்டன. வாழ்வுகள் மாறின. மனப்போக்கும் மாறத் தொடங்கியது. மாமியார் என்கிறவள் மருமகளின் குற்றம் குறைகளை அலசி ஆராய்வதைக் கண்யமாகக் கருதினாள். அதற்குச் சரஸ்வதி உளவாளியாகச் செங்கமலத்தின் நடத்தையைக் கண்காணிப்பதில் தன் திறமையைக் காண்பித்துக் கொண்டாள். அண்ணனுடன் தனியாகப் பேசிக்கொண்டிருந்தாள். இந்தப் பாத்திரத்தை அங்கே வைத்துவிட்டாள். நெய்யைச் சமையலில் அப்படியே கவிழ்த்துவிட்டாள். இன்னும் இதுபோல் பலபல குற்றப் பத்திரிகைகள் வாசித்து இரண்டொரு வசவுகளாவது வாங்கிக் கொடுக்காவிட்டால் சரஸ்வதிக்கு அன்றிரவு நிம்மதியான தூக்கம்வராது.

இந்த அரசாட்சி இரண்டு வருஷகாலம் நீடித்திருந்தது. தன்னுடைய ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுக் கண்ணை மூடிவிட்டாள் மாமியார்.

ஓடுகிற நாயை ஓடும்வரைதான் துரத்துவது சுலபம். திரும்பிவிட்டாலோ, சமாளிப்பது கஷ்டம். அப்படித்தான் சரஸ்வதியின் நிலைமையும் ஆகிவிட்டது. தாயார் இருக்கும்பொழுது எப்படி மருமகளை ஆட்டிவைத்தாளோ அந்தப் பொம்மலாட்டத்தையே அதன் பிறகும் நிலைநிறுத்த முயன்றுபார்த்தாள். செங்கமலம் விழித்துக் கொண்டாள். குடும்ப நிர்வாகமென்னும் சூத்திரக் கயிற்றைத் தன் கைப்பற்றிக்கொண்டாள். அதன் பிறகுதான் ஆதிக்கவெறி மெள்ளமெள்ள அவள் இதயத்தில் படமெடுத்து ஆடத் தொடங்கியது. தாயுடன் சேர்ந்து சரஸ்வதி தன்னைப் படுத்திய பாடெல்லாம் அவள் மனதில் அணி அணியாகப் பதிந்துபோயிருந்தது. அந்த அணிவகுப்புகளையெல்லாம் பழிதீர்க்கும் வேகத்தையூட்டி, சரஸ்வதியை நோக்கிப் பாயவிட்டுக் கொண்டிருந்தாள் தனக்குச் சமயம் வாய்த்தபோது.

தன் மனைவி கொடுமைப் படும்போது ஏனென்று கேட்காத ஆறுமுகம் இப்பொழுது தங்கை கொடுமைப் படும்போது மட்டும் வாயைத் திறந்து கேட்டுவிடவா போகிறான்? என்றைக்காவது ஒருநாள் மனம் பொறுக்காமல் ஏதாவது கேட்டுவிட்டானானால் அன்று ஒரே அமர்க்களம் தான். ஏக ரகளை செய்து பிறந்தவீட்டிற்குப் புறப்பட்டுவிடுவாள் செங்கமலம். சமைக்கத்

தெரியாத தங்கையை வைத்துக்கொண்டு அவன் சமைத்துப்போட முடியுமா? முடிந்தாலும் வேலைக்குப் போகமுடியுமா?

அப்படித்தான் அன்றும் நடந்தது. உறவுக்குள் நடந்த விவாக வீட்டிற்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தாள் செங்கமலம். முதலில் தான்மட்டும் செல்வதாகத்தானிருந்தாள். சரஸ்வதியும் வருவேனென்று அடம்பிடித்தாள். அவள் வருவதால் குழந்தையைத் தூக்கிவரச் சௌகரியமாக இருக்கலாமென்றெண்ணி, சரஸ்வதியும் வருவதற்கு உத்தரவு கொடுத்துவிட்டாள்.

தனக்கும் கைக்குழந்தை சரோவுக்கும் பட்டும் பணியுமாக அணிந்துகொண்டாள். தனக்கும் நல்ல உடைகள் அண்ணி தருவாள் என்று நினைத்திருந்த சரஸ்வதி ஏமாந்துதான் போனாள் 'என்னடி இன்னும் புறப்படாமலிருக்கிறாய்; உனக்காக முகூர்த்தம் காத்துக் கொண்டிருக்குமா? சீக்கிரம் தலைவாரிக்கொள்ளேன்' என்று மிரட்டினாள் செங்கமலம்.



'உடை மாற்றிக்கொண்டு......'

'உடைக்கென்ன வந்துவிட்டது. நீ கட்டிக்கொண்டிருப்பது போதாதோ. வேறு டிரஸ் வேண்டுமோ உன் அழகுக்கு......!' என்று மிரட்டவே விதியே என்று தலையைச் சீவிக்கொண்டாள்.

தலைவாருமிடத்தில் அட்டைப் பெட்டியில் அழகாக ரிப்பன்கள் இருப்பதைக் கண்டதும் அவளையுமறியாமல் ஓர் ஆவல் தூண்டியது. அவற்றுள் அழகான ஒன்றை எடுத்துச் சடையில் பின்னிக்கொண்டிருந்தாள். இன்னும் தலை பின்னிக்கொள்ளவில்லையா என்று கேட்டுக்கொண்டே அங்குவந்த செங்கமலம் சரஸ்வதியின் செய்கையைக் கண்டு திடுக்கிட்டாள்.

'என்ன துணிச்சலடி உனக்கு. என் ரிப்பனை என்னைக் கேட்காமல் நீ எதற்காக எடுத்தாய்?' என்று கேட்டுக்கொண்டே வெடுக்கென அவள் பின்னிக்கொண்டிருந்த ரிப்பனை இழுத்தாள்.

அதே சமயம் அவள் கணவன் அந்தப் பக்கமாக வந்துகொண்டிருந்தான். தனக்காகத் தன் அண்ணன் ஒரு வார்த்தையாவது பரிந்துபேச மாட்டானா என்று ஏங்கியிருந்த அவள் செவிகளில் அண்ணனின் கடுமையான மொழிகள் நாராசமாய்ப் பாய்ந்தன.

'ஏன் சரஸ்வதி? எத்தனைதரம் சொன்னாலும் உனக்குத் தெரியமாட்டேனென்கிறது. இருக்கிறதை வைத்துக்கொண்டால் நம் அந்தஸ்து குறைந்துபோய் விடுமா என்ன!' என்று அதட்டினான்.

அண்ணன் இப்படி பாரபக்ஷமாகப் பேசவே, இதுவரை எதிர்த்துப் பேசியறியாத அண்ணனிடம் அன்றைக்கு வெடுக்கென இரண்டு வார்த்தை கேட்டுவிட்டாள்.

உன் மனைவியும், உன் குழந்தையும் பகட்டாகப் புறபட்டுப் போய்விடுவதால்மட்டும் உன் அந்தஸ்து உயர்ந்துவிடுமா அண்ணா? அவர்கள் பின்னால் பரதேசிபோல் நான் போனால் என்னை உன் வீட்டு வேலைக்காரி என்று சொல்லமாட்டார்களே, உன்னுடைய தங்கையென்றுதானே சொல்லுவார்கள். அது உனக்குக் கௌரவக் குறைச்சலில்லையா?' என்று கேட்டுவிட்டாள்.

: துடுக்குக்கார நாயே, வாயை மூடிக்கொண்டு உள்ளேபோ!' என்று இரைந்துவிட்டு வெளியே போய்விட்டான்.

3

அப்படிப் பேசிய அண்ணாதானே அன்று மனைவியை அதட்டிக் கேட்டிருந்தால் இன்று என்னையும் கேட்க நியாயமுண்டு. எந்த

முகத்தைக் கொண்டு என்னைக் கேட்கவருவார் என்று தன் மனதிற்குத் தானே சமாதானம் தேடிக்கொண்டாள்.

தன் மனதில் தோன்றிய சமாதானத்தைக் கணவனிடமும் சொல்லி மனதைத் தேற்றிக் கொண்டாள்.

'மனைவிக்காகப் பயந்து வெளிப்படையாக உன்னிடம் பரிவு காட்டவில்லையென்று குறை சொல்கிறாயே தவிர அவர் உனக்காக—உன் வாழ்க்கைக்காக—எடுத்துக்கொண்ட சிரமங்களைச் சிந்தித்துப் பார்க்கவேண்டாமா? இன்று நீ ஏகபோக வாழ்வில் சுகமனுபவிப்பது யாரால்? உன் அண்ணாவால் தானே! அற்ப விஷயங்களிலெல்லாம் உன் மதனியின் போக்குக்கு விட்டுக்கொடுத்து வந்தவர் உன் விவாக விஷயத்தில் அவளுடன் போராடி—ஏன் அவள் அறியமுடியாமலே உனக்கு வாழ்வளித்தவர் அவர்தானே! அவர் மட்டும் தந்திரமாய் இந்த ஏற்பாடு செய்யாதிருந்தால் இன்று நீ எங்கிருப்பாய்......?

வாஸ்தவம் அவள் சிந்தனை சிறகடித்துப் பறந்தது நல்ல இடத்தில் கொடுத்தால் நகை சீர் வரிசைகள் செலவாகும். அதோடு தன் கண் முன்னிலையில் அவள் மேன்மையடையக்கூடாதென்கிற அடிப்படை ஆத்திரம் அதை மறைமுகமாகக்கொண்டு வந்த வரனையெல்லாம் தட்டிக்கழித்துக் கொண்டிருந்தாள் செங்கமலம். அவள் கருத்தை நன்கறிந்த அவள் அண்ணன் இந்த வரனை முடித்துத் தாலி கட்டப்போகிற சமயத்தில்தான் மனைவிக்குத் தெரியப்படுத்தினான். அதோடு மட்டுமல்ல. தங்கையின் விவாகத்திற்கென மனைவிக்குத் தெரியாமல் சிறுகச் சிறுகப் பணம் சேர்த்து வைத்திருந்தான். சரஸ்வதியின் விவாகத்திற்குச் செங்கமலம் பணம் தர மறுத்ததும் அதை லக்ஷியம் செய்யாமல் தான் சேமித்து வைத்திருந்த பணத்தைக்கொண்டு சரஸ்வதியின் விவாகத்தைச் சிறப்பாக முடித்து வைத்துவிட்டாள். அந்த ஆத்திரத்தில் சண்டை போட்டுக்கொண்டு வீட்டை விட்டுப் போனவள்தான் செங்கமலம். மறுவாரம் ஏதோ ஒரு இடத்தில் அவள் பிணத்தைத்தான் கண்டெடுக்க முடிந்தது.

அதெல்லாம் பழங்கதை. இப்பொழுது அவன் வீட்டிற்கு வேறொரு லக்ஷ்மி வந்துவிட்டாள் விளக்கேற்றி வைக்க. அவளிடம் குழந்தையை ஒப்புவிக்க மனமில்லாதவனாய், தங்கையிடம் விட்டு வைத்திருந்தான் அருமை மகளை.

அவன் நினைத்தது வேறு. நடந்தது வேறு.

4

ஆறுமுகம் வண்டியை விட்டிறங்கியதும் முதன் முதலாக அவன் பார்வையில் தென்பட்டது, அழுதுகொண்டு நின்ற அவன் மகள் சரோதான். ஒரே பெண்ணான அருமை மகளை மாற்றாந்தாயின் ஹிம்சைக்கு விடக்கூடாதென்று தன் தங்கையிடம் விட்டுவைத்திருந்தான், தன்னுடைய தங்கை துன்பத்தில் அடிபட்டவள், பிறரால் ஹிம்சைப்பட்டு அதன் கொடுமையை ஓரளவுக்கு உணர்ந்திருக்கக்கூடியவள், தன்னுடைய அனுபவத்தினால் குழந்தையை ஆதரவோடு வளர்த்து வருவாள் என்று நினைத்ததற்கு மாறாகக் கண்கலங்கி நின்ற சரோவைத்தான் கண்ணெதிரே கண்டான். எலும்புந் தோலுமாய் இளைத்துக் கறுத்து நின்ற மகளைக் கண்டு திடுக்கிட்டுப் போனான். அவள் இடுப்பை மறைத்திருந்த கந்தை ஆடையும், எண்ணெய் வறண்டு போயிருந்த பரட்டைத் தலையும், அவள் வளரும் சவரணைக்குச் சவால் விடுத்துக்கொண்டிருந்தன. சற்றும் எதிர்பாராத நிலையில் இருந்த மகளைக் கண்ட அதிர்ச்சியில் செயலற்று நின்ற அவனை 'அப்பா' என்று ஓடிவந்து கட்டிக்கொண்டாள் சரோ.

மகளைத் தூக்கிக்கொண்டே ஆறுமுகம் வீட்டைநோக்கி நடந்தான். அடிபட்ட பொருமலை மனதுள் வைத்து குமுறிக்கொண்டிருந்த சரோவும் தந்தையிடம் சென்றதும் விக்கிவிக்கி அழத்தொடங்கினாள்.

'ஏன், என்ன நடந்ததம்மா? எதற்காக இப்படித் தேம்புகிறாய்' என்று பரிவோடு விசாரித்தபடியே, நடந்ததையறிய, 'சரஸ்வதி' என்று குரல் கொடுத்தான்.

சற்றும் எதிர்பாராத வேளையில் அண்ணன் வந்துவிடவே பிரமித்து நின்றாள் சரஸ்வதி. தன்னுடைய செய்கையை அண்ணா அறிந்தால் என்ன நினைப்பான் என்று நினைத்து வெட்கினாள் ஒரு கணம். ஒரே கணம்தான் மறுகணமே மாறியது அவள் மனம்.

அண்ணாதான் கேட்கட்டுமே, நன்றாக மனதைத் திறந்து கூறிவிடுவது என்று நினைத்தபடியே தைரியமாக வெளியே வந்தாள்.

"ஏன் அண்ணா, வந்ததும் வராததுமாய் எதற்காக இப்படி அமர்க்களப்படுத்துகிறாய். உன் அருமை மகளை யார் என்ன கொடுமைப்படுத்திவிட்டார்கள், உன் அன்பு மனைவி உன் சகோதரியை நடத்திய கொடுமையைவிட நான் ஒன்றும் உன் குழந்தையை......"

இதற்குள் அவள் கணவன் இடையே குறுக்கிட்டான், "இதெல்லாம் என்ன பேச்சு சரஸ்வதி. பழங்கதை யெல்லாம் பேசிக்கொண்டு......!"

"உங்களுக்கு அதெல்லாம் பழங்கதையாகத் தோன்றலாம். ஆனால் என் நெஞ்சத்தில் இப்பொழுது நினைத்தாலும் அவள் செய்த கொடுமைகள்......"

"கொடுமையில் சிக்கி, அதன் துன்பத்தை நன்குணர்ந்த நீ, பிறரைக் கொடுமைப்படுத்தமாட்டாய் என்று நம்பியே சரோவை உன்னிடம் ஒப்படைத்தேன்...!"

"அதுவே, மனதிலடங்கிக் கிடந்த என் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள வழி வகுத்துக் கொடுத்தது. இப்பொழுதுதான் அண்ணு என் மனம் சாந்திபெற்றது."

"இல்லை யில்லை. இப்பொழுது நீ அடைந்து வருவது உண்மையான மனச்சாந்தியாகாது சரஸ்வதி. உன் மனக்குழப்பத்தை மறைப்பதற்காக வேண்டுமானுல் சாந்தி என்று உன் மனதைத் தேற்றிக்கொள்ளலாம். உண்மையில் நீ அடைந்து வருவது மகாபாவத்தைத்தான். சரோ உன்னிடம் கொடுமைப்படும்படியாக அவள் செய்த குற்றம்தானென்ன? உன்னை கொடுமைப்படுத்திய செங்கமலத்தின் வயிற்றில் பிறந்தாள் என்ருல் அது அவள் குற்றமா? நீ செய்யும் கொடுமைக்காக நாளை உன் லதா தண்டனை அனுபவிக்க நேர்ந்தால் உன் மனம் எப்படித் துடிக்குமென்பதை சிறிதாவது சிந்தித்துப் பார்த்தாயா?"

பிறர் ஹிம்சையில் அகப்பட்டு வாடித்துடித்த உனக்கே—உன் மனதிற்கே அதன் துன்பத்தை உணரும் சக்தி இல்லையென்ருல் அப்பாவி செங்கமலம் எப்படி அதை உணர்ந்திருக்கமுடியும்? போகட்டும். இப்பொழுதாவது உன் மனம் சாந்தி அடைந்துவிட்டதல்லவா? இனி குழந்தையை நான் எடுத்துச் செல்லுகிறேன். சரோவின் மாற்ருந்தாய் நானறிந்தவரை உன்னைவிட மேன்மையானவளென்றே நம்புகிறேன். அவளை நம்பாமல் குழந்தையைப் பிரித்துவைத்திருந்த பாவத்திற்குத் தகுந்த தண்டனை பெற்றுவிட்டேன். இனியும் அத் தவறைச் செய்யமாட்டேன். போய் வருகிறேன்" என்று கூறி, குழந்தையைத் தாங்கியவாறே புறப்பட்டுவிட்டான்.



இரண்டே வார்த்தையில் தன்னுடைய தவறை உணரும்படி செய்துவிட்ட அண்ணுவையும், அவளுடைய கொடுமையினின்று விடுதலைபெற்றுப் புறப்பட்டுவிட்ட சரோவையும் பார்த்தபடி செயலற்று நின்றுவிட்டாள் சரஸ்வதி. மனச்சாட்சி அவளுடைய நன்றிகெட்ட தனத்தை இடித்துக் காட்ட, தன்னுடைய தவறுக்கு மன்னிப்புக் கிடைக்குமா? என்று ஏங்கியபடி நின்ருள் அவள்,

காவேரி சந்தா விகிதம்.

	இலங்கை, பர்மா & உள் நாடு			மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு		
	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
ஒரு வருஷம்	6	0	0	7	8	0
அரை வருஷம்	3	0	0	3	12	0
தனிப் பிரதி ஒன்றுக்கு	0	8	0	0	10	0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாசிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர் "காவேரி"
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

அன்புக்கட்டளை

"விந்தியா"

கடற்கரைக்கு வரும்பொழுதெல்லாம் இது தான் யோசனை. காதல் அன்பின் நிழல் அன்றோ பொறுமை. நிழல் சில சமயம் நீண்டு பரவுகிறது, சில சமயம் குறுகிவிழுகிறது, சில சமயம் புலனாவதில்லை. எனக்கு இத்தகைய எண்ணம் உண்டானதுபற்றிக் கூசுவானேன்? விஜியிடம் அதை வெளியிடத் தயங்குவானேன்? அவள் சிறுமைப் படமாட்டாள். என் ஆசை உடைமையாகிய அவள் பால் நான் கொண்டுள்ள அன்பும் அக்கரையும்தான் என் மருட்சிக்கும் எண்ணத்திற்கும் மூலம் அன்றோ? என் விஜி எல்லோருடனும் கூடிக் கும்மாளமாகப் பழகுவது என்றால் தான் இயலவில்லை —இதை விஜி அறிவாளாயின் கனிவும் உவகையும்அன்றோ மிதக்கும், அந்த அழகிய கண்களிலே! "கண்ணே! நீ என்னவள்!" என உரிமை பாராட்டும் தோரணையிலே நான் என்னுடைய எண்ணத்தை வெளியிடுவேனாயின் கசக்குமோ விஜிக்கு? அவளுடைய கொவ்வை இதழ்களிலே முல்லை முறுவலன்றோ அரும்பும்? மகிழ்வுடன் ஏற்பாளே என் அன்புக் கட்டளையை!

ஒரு நாள் கேட்டுவிட்டேன். என் தாபத்தைக் குறிப்பிட்டுவிட்டேன். "விஜி நாலு பேருக்கிடையே நாம் இருக்கும்பொழுதும் நீ ஏன் என்னிடம் சிறிதுதனிப்பட்ட முறையில் பழகக்கூடாது? நம் உறவுதான் மாணவர்களுக்கெல்லாம் தெரியுமே!" என்று வினவினேன்.

இதற்கு விஜயா அளித்த விடை என்னைத் துணுக்குறச்செய்தது. "அந்த நாலுபேருக்கு நடுவிலேயே இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கலாமே? கேட்கிறது தானே?" என்றாள் அவள், புருவங்களை உயர்த்தி!

ஆம்—நான் ஏன் தனிமையிலே கேட்கிறேன்? அந்த 'நாலுபேருக்கு' மத்தியிலே விஜியை உரிமையுடன் கேட்கவில்லையேநான்? கேட்க முடியுமா? காதலுக்கும் சில கட்டுத் திட்டங்கள், எல்லைகள் இருக்கின்றனவே!

ஆனால், நான் விஜியினிடம் எதிர்பார்ப்பது எதுவும் தவறானதல்லவே! என்மனதை அவளிடம் உள்ளது உள்ளபடி நான் சொல்லவில்லையாதலால் அவள் புரிந்துகொள்ளவில்லை! ஆம், அழகாக, நேர்த்தியாக அவளிடம் என் உள்ளத்தை விளங்கவைக்காத குற்றம் எனதன்றோ?

துணுக்கத்தைச் சற்றே சமாளித்துக் கொண்டேன் நான். "அதற்குச் சொல்லவில்லை விஜி! நீ என்னிடம் அதிகமான உரிமை காட்டிப் பழகமுடியாதுதான். அது நன்றாக இராது. ஆனால் நீ மற்ற மாணவர்களோடு பழகுவதைச் சற்றுக் குறைத்துக் கொண்டால்?.........பிரச்னை தீர்ந்தது, இல்லையா?" என்று கேட்டேன்—கடல் அலைகளைப் பார்த்தவாறு.

"ஓஹோஹோ ஹோ!" என்று சிரித்தாள் விஜி. நான் எதிர்பார்த்தபடியே பெருமிதம் மிதந்தது அவள் முகத்திலே. "சரிதான் சங்கர், தெரிந்தது, புரிந்தது!" என்றாள் குஷியாக.

அவள் வாய்திறந்து என் விருப்பப்படி செய்வதாகக் கூறாவிடினும், நான் அவளிடம் இணக்கத்தையே எதிர்பார்த்தேன். அதனால் பேச்சை வேறு விதமாக வளைத்தேன்.

ஆனால் மறுநாள் கல்லூரியிலே என் வேதனை பெருகிற்று. எதிர்பார்த்த ஆறுதல் இட்டாததால் கலக்கம் வளர்ந்தது. விஜி என்றும்போலவே கலகலப்பாகப் பழகினாள் மாணவர்களோடு. என் சொற்களை அவள் நினைவு வைத்திருக்கிறாள் என்பதற்கு லவலேசம் ருசு தென்படவில்லை. அவளை அதிகம் கவனித்ததனாலோ என்னவோ தினத்தைவிட அதிமாகக் கும்மாளம் போடுவதாக எனக்குத் தோன்றிற்று! என் நெஞ்சம் திகுதிகுவென எரிந்தது. அவளை வெறித்து வெறித்துப் பார்த்தேன். அவள் செய்த புன்னகைகள் என் மென்னியை அடைத்தன. என் ஆற்றாமையை நானே கண்டித்துக்கொண்டேன். திடீரென்று அவர்களிடம் விலகிப் பழகமுடியுமா? மெள்ளத்தானே பழக்கத்தைக் குறைத்துக் கொள்ளலாம்—என்றெல்லாம் சொல்லிக் கொண்டேன். மாலையில் உலாவ, வழக்கம் போல் விஜி, குஷாலாக என்னுடன் கிளம்பிவிடவே, நான் மன நிறைவு பெற்றேன். உணவுப் பண்டம் கண்டதும் வேற்றுமை நீங்கி நெருங்கி வரும் குழந்தைபோலாகிவிட்டேன். பொல்லாத பொறாமை அடங்கிவிட்டதுபற்றிச் சந்தோஷித்தவாறே, கடற்கரைக்கு அவளுடன் புறப்பட்டேன்.

இப்படியே ஒரு வாரம் போயிற்று. ஏழு நாட்களும் இதே போல் மனப்பதட்டம், சுய சமாதானம், மறு பிறவி எடுக்கும் நம்பிக்கை, ஆட்சேப சமாதானங்கள். சீரான போலிப் பல் வரிசை போன்று ஒரு போலியான அமைப்பும் அமைதியும், இந்த நிகழ்ச்சிகளிலும் உணர்ச்சிகளிலும் நிலவின. விஜயா அப்படியேதான் இருந்தாள். பிற மாணவரோடு சகஜபாவம் குன்றவில்லை. என்னுடன் உலாவ வருவதிலும் அவளுடைய ஆர்வம் குறையவில்லை. மீண்டும் விஜயாவிடம் என் வேதனையை வெளியிடவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. மெல்ல 'விஜி, நீ என் கலக்கத்தைக் குறைப்பாய் என்றல்லவா எண்ணினேன்?' என வினவினேன்.

விஜயா சிரித்தாள். "உங்களுக்கு ஏன் இத்தகைய எண்ணங்கள் சங்கர்?" என்று கேட்டாள், முறுவலித்து. காதலின் சகாவாகிய பொறாமை என்னிடம் குடிகொண்டிருப்பது தவறாகுமோ என நான் கேட்கயோசிக்கும்பொழுது விஜயா, "உங்கள் விஷயத்திலே எனக்கு இவ்வாறு தோன்றுவதில்லையே! நீங்கள் மாணவிகளோடு பேசினால் நான் ஏதாவது நினைக்கிறேனா?" என்று கேட்டாள்.

"நீ மாணவர்களோடு பழகுவதுபோல அத்தனை நெருங்கி மாணவிகளோடு நான் பழகுகிறேனா!" என்று கேட்டேன் ரோசமுடன்.

"பழகிப் பாருங்களேன், நான் ஏதாவது தடை செய்கிறேனா என்று!" எனச் சவால் விடுத்தாள் விஜயா.

"அப்படியானால் உனக்கு என்மேல் அன்பு அதிகம் இல்லை என்றுதான் நான் நினைக்கணும்!" என்று சொல்லிப் பார்த்தேன்.

"அது தப்பு!" என்று கூறிவிட்டாள் அவள். விஜயாவின் இந்த விமர்சனத்திற்கு விளக்கம் யாது? "இதுபோன்ற விஷயங்களைக்கொண்டு காதலை அளவெடுப்பது தவறு!" என்றாளோ? அல்லது, "என் அன்பு குறைவு என்று நீங்கள் நினைப்பது தவறு!" என்றாளோ? ஆகக்கூடி நான் சொல்வது, பொறாமையினால் பேசுவது, சரியல்லதான் போலும்! ஆம், பொறாமை ஒரு பேய்! விஜிக்கு இந்தப் பேய்க்குணம் கிடையாது. விஜியின் சலனமற்ற அன்பின் முன்னே நான் என் சஞ்சலத்தை ஒருவாறு கட்டுப்படுத்தினேன். "என்னமோ எனக்கு அசட்டுப் பிசட்டு எண்ணங்கள்தான் விஜி!" என்று ஒப்புக்கொண்டேன். விஜயா காதலுடன் என்னை நோக்கி எனக்கு ஒரு அன்புக் கட்டளை விதித்தாள். "நான் மாணவர்காளாடு 'ப்ரீ'யாக இருக்கிறேன் என்பதினால் நீங்கள் மனசை அலட்டிக் கொள்ளவே கூடாது, சங்கர்! தெரியுமா?" என்று சொன்னாள் ஏற்றுக்கொண்டேன்.

அன்று ஏற்பட்ட தென்பு சில நாள்வரை நிலைத்தது. மனப்பக்குவமும் அமைதியும் நிலைநாட்டி

விட முயன்றேன். ஆனால் இந்த நிலைமையும் ஒரு நாள் பொதிமணலிலே அகப்பட்டுக்கொண்டு விட்டது.

ஒரு நாள் கடற்கரையிலே உலாவி வருகையிலே ஒரு மாணவன் ஏதோ புத்தகம்பற்றி விஜயாவைக் கேட்க வந்தான். பேசவேண்டிய விஷயம் முடிந்ததுமே அவனை விஜி அனுப்பிவிட்டிருக்கலாம். அப்படி உடனே போகச்சொல்வது அவளுக்குச் சரியாகப்படவில்லைபோலிருக்கிறது, "நீங்களும் எங்களுடன் வரலாமே!" என்றாள். அவன் குஷியாக உடனே ஒப்புக்கொண்டான். நான் கலங்கிப்போனேன்.

ஒடுங்கிக் கிடந்த உள்ளத்திலே எண்ணங்களை விசாலமாக்க முயன்றவாறே, உலாப் படலத்தை ஒருவாறு சமாளித்துக்கொண்டிருந்தேன். அழைப்பு விடுத்த கடமையை எண்ணி விஜயா அவனுடன் அதிகம் பேசவேண்டியதாயிற்று.

அவ்வப்போது அவர்களுடன் பேசத் திரும்புவதும், கடல் அலைகளை நோக்குவதுமாக நான் இருந்தேன்,

"போகட்டுமா?" என்று அந்த மாணவன் அவளிடம் கேட்பதை நான் கவனித்தும் திரும்பவில்லை. அவன் சென்றபின் திரும்ப எண்ணினேன். விஜி அவனிடம், "நாளைக்கும் இப்படி எங்களுடன் வாருங்களேன்!" எனவும், திடுக்குற்றுத் திரும்பிப் பார்த்தேன்.

"ஓ, எஸ்!" என கனஜோராக, புன்னகை பொழியும் முகமுடன் விஜியிடம் விடைபெற்றுச் செல்லும் அவனையும், அவனுடைய பூரிப்பையும் கண்டு கலங்கவே திரும்பினேன். "நாழியாயிற்றே, நாமும் போகலாமா;" என விஜி கேட்க, ஒரு நிமிஷம்தான் உள்ளது என்பதை அறியாது திரும்பினேன். போக நாங்களும் எழுந்தோம். "ஏன் நாளைக்கும் அவனை வரச்சொன்னாய் விஜி! இன்றைக்கு நான்பட்ட அவஸ்தைபோதாதோ?" என்று கேட்டேன் அவளை.

"அப்படியா? எனக்குத் தெரியுமா? அந்தமாதிரி எண்ணங்களை விட்டாச்சுன்னு நினைச்சேன்!" என ஒரு தினுசாக வினவினாள் விஜி.

"சோதனை பலமாக ஏற்படவே உறுதி குலைந்து விட்டது, விஜயா," என்று ஒப்புக்கொண்டேன் நான்.

"பார்க்கலாம் உங்கள் மனசை என்று நானும் எண்ணினேன் சங்கர்!" என்று அவளும் ஒப்புக்கொண்டாள்.



"நாளைக்கு அவனை வரச் சொல்லிவிட்டாயே! எப்படித் தவிர்ப்பது! எங்காவது வேறு இடம் செல்வோம்!" என்று கூறினேன். சம்மதித்துவிட்டாள் அவள். இதற்குப் பிறகும் விஜியின் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் நான் துன்புறுத்தலாமா? கோழையல்ல அவள். பல புருஷர்களுடன், மாணவர்களுடன், பழகுவது தவறு என்றோ, தனக்கு அதனால் தூய்மைக் குறைவு என்றோ, பயந்து நடுங்குகிறவள் அல்ல. தன்னைப் பற்றி, தனக்கில்லாத அக்கரை யாருக்கு? என நிமிர்ந்து நிற்கும் புதுமைப்பெண். அவளை

தந்தி "VISCOM" டெலிபோன் : 4044

எல்லாவித

குவாலிடி எலக்டிரிக் சாமான்கள்

நம்பி வாங்குவதற்கு

விஸ்வநாதன் & கோ.

எலக்டிரிகல் இன்ஜினீயர்கள்

103, A. கிடங்குத் தெரு, மதராஸ் - 1.

வீடுகளில் ஒயரிங், மின்ஒளி அலங்காரம்
தியேட்டர்களுக்கும் ஸ்டூடியோக்களுக்கும் விளக்கு
களும் திறமையாக ஒயரிங் செய்துகொடுக்கப்படும்.

ஸகலவிதமான எலக்டிரிக் ஸாமான்களும் ஸ்டாக்கில் உள்ளன.

80 வருஷங்களுக்கு மேலாக

ஆரம்பமுதலே ஜனநாயகக் கொள்கையின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட பம்பாய் மியூச்சுவல் 1871-ல் அதன் முதல் பாலிஸியை வெளியிட்டது. அந்த நாள் முதலாக மிகக் குறைந்த செலவில் மிகச் சிறந்த இன்ஷ்யூரன்ஸ் ஊழியம் புரிய முனைந்து வெற்றிபெற்றுள்ளனர். இன்ஷ்யூரன்ஸ் வியாபாரத்தில் இருதரப்பினரிடமும் எமது சொஸைடி அடைந்துள்ள புகழே இதற்கு அடையாளமாகும்.

பம்பாய் மியூச்சுவல் லைப் அஷ்யூரன்ஸ் சொஸைடி லிமிடெட்

ஒவ்வொரு பாலிஸிதாரரும் ஒரு பங்குதாரர்

வசீகர நிபந்தனையின்பேரில் ஏஜண்டுகள் தேவை

விவரங்களுக்கு :

S. A. ராமஸ்வாமி & பிரதர்ஸ்

பிரதான ஏஜண்டுகள் :

சென்னை ராஜதானி, திருவாங்கூர், கொச்சி சமஸ்தானங்களுக்கு.

பம்பாய் மியூச்சுவல் பில்டிங், 378, எஸ்பிளனேட், மதராஸ்.

நான் சந்தேகிப்பதுபோலக் காட்டிக் கொள்வது அழகா? அவளை அடக்க முயல்வது சரியாகுமா?

வருடாந்தர விடுமுறை நெருங்கியது. காதல் ஜோடி நாங்கள், வரவிருந்த பிரிவை வெகு கவலையுடன் எதிர்பார்த்து ஏங்கிவிடத்தொடங்கினோம். அவள் தன் ஊர் புறப்பட இன்னும் பத்து நாள் கூட இல்லை.

அவள் புறப்பட இருந்ததை இரண்டு நாள் தாமதப்படுத்தலாமா என்றுகூட எண்ணம் எனக்கு. அப்படி இருக்கும்போது ஒரு மாலை நாங்கள் கடற்கரையில் உட்கார்ந்திருந்தபோது நடராஜன் வந்தான். "நானும் அன்றைக்குத் தான் புறப்படுகிறேன்!" என்றான் விஜியிடம். "ஓ, அது நான் எதிர்பார்த்ததுதான்!" என்று சொன்னாள் விஜி. பிறகு சற்றுநேரம் அவளுடன் வார்த்தையாடிவிட்டுப் போனான் அவன். ஏனோ எனக்கு விஜியிடம் பேச்சுக்கொடுக்கவே தென்பில்லை; ஒன்றுமே பேசத் தோன்றவில்லை. களுக்கென விஜயா சிரித்தது கேட்டுத் திகைப்புடன் அவளைப் பார்த்தேன். "என்ன சங்கர்" என அவள் என்னைக் கேட்டாள்.

"எதற்கு என்ன? நான் எதுவும் பேசவில்லையே!" என்றேன். "வாய் திறந்து சொல்லாவிட்டாலும் உங்கள் முகம் சொல்கிறதே!" என்றாள் அவள்.

"என்ன சொல்கிறது என் முகம்?"

"நான் நடராஜனுடன் பேசினது பிடிக்கவில்லை உங்களுக்கு!" என்றாள் அவள்.

ஆம், உண்மை. அவன் எங்களை அணுகிய போது என் வயிற்றைக் கலக்கியது. அவன் பேசிய விஷயம் என் உணர்வையே பறித்துவிட்டது. விஜி கண்டுகொண்டுவிட்டாள்.

"ஆம், விஜி! அவன் ஏன் பேசவந்தான் என்றுதான் இருக்கிறது!" என்று பதிலளித்தேன்.

"இப்படியெல்லாம் இருந்தால் நாம் எப்படி இல்லறம் ஆகிய நல்லறம் நடத்துவது சங்கர்?" என்று கூறி, குறுநகை புரிந்தாள் விஜயா. நான் உவகை எய்தினேன்.

"நாம் இல்லறம் நடத்தப்போவது உண்மைதானே, விஜி! இப்போது விடுமுறை வருவதை எண்ணும்போது, மற்றச் சந்தோஷ நினைப்பு வருவது கஷ்டமாகிறது!" என்றேன் வேதனை தாளாமல்.

"உண்மையில்லாமல்? எப்படியும் இல்லறம் நடத்தத்தான் போகிறோம்! சேர்ந்து நடத்துவோமோ, தனித்தனியே நடத்துவோமோ......... ஆகக்கூடி................"

THE
INDUSTRIAL & PRUDENTIAL ASSURANCE Co., Ltd.
(Established: 1913)
Renowned for its Service, Security & Strength.

PROGRESSIVE FEATURES:

New Business completed in 1950 over	Rs.	2,36,90,000/-
Total Business in force	,,	18,00,00,000/-
Total Assets	,,	5,00,00,000/-

Variety of schemes at low premiums controlled by Well-known Directors.

WELL-KNOWN
for its LOW EXPENSE RATIO and PROMPT settlement of claims.

Applications are invited for Special Agents.

Managing Director,
V. C. Setalvad Esq., B. A., LL. B.

HEAD OFFICE:
Industrial Assce. Building,
Fort, Bombay.

MADRAS BRANCH:
10, Lingha Chetty Street,
G. T. Madras.

199325

அவள் விளையாட்டுக்குச் சொன்னாளாயினும் நான் திகைப்புற்றேன். என் வேதனையை அறிந்ததும் அவள், "அச்சச்சோ, சும்மாச் சொன்னேன்—இது தெரியவில்லையே!" என்று என்னை ஆசுவாசப் படுத்தத் தொடங்கிவிட்டாள். அவளுடைய குழந்தைத் தனமான குறும்புப் பேச்சிலே மகிழ்ச்சி காணாமல் துணுக்குற்றுவிட்ட என் அறியாமையை நொந்துகொண்டுவிட்டு, அவளுடன் சந்தோஷமாகப் பேச எண்ணினேன். ஆனால் வரவிருந்த பிரிவின் துயர் என்னைச் சற்றுத் துன்புறுத்தியது. "நடராஜனும் நீயும் ஒரே நாள், ஒரே வண்டியிலே போகவேண்டாமே, விஜி! நீ இரண்டுநாள் கழித்துப் போயேன்!" என்றேன்—என் வேதனையைக் குறைக்கக்கூடிய இரண்டு விஷயங்களை ஒரே சொல்லில் விளக்கினேன்.

"ஒரே நாளில், ஒரே வண்டியில் போனால் உறுத்துமா உங்களுக்கு! ஒரே ஊருக்குத்தானே இருவரும் போகிறோம்?" என்று கேட்டுவிட்டாள் விஜி. பிறகு "நல்ல எண்ணம்!" என்று என்னை அன்புப் பரிகாசம் செய்தாள்!

விஜயாவை ரயிலேற்றிவிடச் சென்றபொழுது, நான் பயந்ததுபோலவே ஆயிற்று. நடராஜன் வந்திருந்தான். விஜயாவுடன் ஒரே பெட்டியில் பயணம் செய்யும் பகிரங்க நோக்கமுடன் எங்களை அணுகினான். அவளை அவளுடைய வீட்டின் வாசற்படிவரை அழைத்துச் சென்று வீட்டில் சேர்ப்பிக்கும் வலுப் பொறுப்பும் ஏற்றான். அவன் செய்த அட்டகாசம் என் தென்பைப் பறித்துவிட்டது. வண்டி வந்ததும் விஜயாவுக்கு அவன் இடம் செய்துகொடுத்த பரபரப்பும், எங்களுக்குக் குளிர்ந்த பானகம் அளித்த சுறுசுறுப்பும், அவன் பேசிய தோரணையும், என்னைச் செயலற்றுக் கம்பமாக்கிவிட்டன. விஜயா நடராஜனுக்கு நன்றியுரைத்தபோது நான் சிறுமைப் பட்டேன். வண்டி நகரும்பொழுதும், பேசத் தோன்றாமல் நின்றேன். ஓடும் வண்டியிலே, அடுத்தடுத்த ஜன்னலருகு அமர்ந்து எனக்கு "டாட்டா" செய்தவாறே அவர்கள் இருவரும் ஒரே உருவம்போல தோன்றியவாறு மறைந்ததை, என்னை மறந்து துன்பமுடன் நோக்கிவிட்டு, என் வீட்டிற்குத் திரும்பினேன் நான்.

"விஜியைப் பிரிந்து விடுமுறையை எங்ஙனம் கழிப்பது?" என்று விடுமுறையின் துவக்கத்திலே கவன்ற நான், விடுமுறையின் இறுதியிலே, "விடுமுறை முடிந்து கல்லூரி திறந்ததும் விஜியை எவ்வாறு பார்ப்பது நான்?" எனக் குழம்பி நின்றேன்!

கல்லூரி திறந்தது. விஜயா தென்பட்டாள். "கேள்விப்பட்டேன்" என்றாள் விஜயா. அவள் முகம் வாடித்தான் இருந்தது, பாவம்!

"என்னமோ பண்ணிக்கொண்டு விட்டேன், விஜி!" என்று சொல்ல முடியாமல் சொன்னேன்.

நீங்கள் பண்ணிக்கொண்டது தவறா?" என்று கேட்டாள் அவள். "ஆண் வர்க்கத்திற்கு இது தவறா? என்றுதான் கேட்கிறாளோ? எனக்கு



அவள் எதிரில் பேசவே கலக்கமாக இருந்தது. நான் செய்துவிட்ட தவறு அவள் வாழ்வைக் குலேத்துவிடுமோ என அஞ்சினேன்.

"வா, விஜி! நாம் இருவரும் எங்காவது போய் வாழ்வோம்!" என்று ஆவேசமுடன் மொழிந்தேன்.

விஜி லேசாக ஒரு வெற்றுச் சிரிப்புச் சிரித்தாள். "அவள்?" என்று கேட்டாள்.

"ஆம், அவள்!......பாவம், அவள்!" தடுமாறினேன். "என்னமோ தெரியவில்லே, பண்ணிக் கொண்டுவிட்டேன்!" என்று கதறினேன்.

சாவதானமாக விஜி கேட்டாள், "ஒரு விஷயம் சொல்லணும், எனக்கு" என்ருள். அவளேப்பற்றி- என் மனேவியாகிவிட்ட சரஸ்வதியைப்பற்றி— தகவல்கள் சில கேட்டாள். சொன்னேன். சரஸ்வதி அதிகம் படித்தவளில்லே என்றும், விசேஷ அழகும் கொண்டவளல்ல என்றும், ஒரே ஒரு முறைதான் நான் அவளே வேண்டா வெறுப்பாகப் 'பெண் பார்த்தேன்' என்றும் சொன்னேன். தந்தையின் வற்புறுத்தலின்மேல்தான் பெண் பார்க்கவென்று போனதாகவும் சொன்னேன்.

"போதும், சங்கர், எனக்கு வேண்டிய தகவல் இவ்வளவுதான்" என்ருள் விஜி.

"நான் நிறையப் பேசணும், விஜி" என்றேன். மறுநாள் சொல்லலாம் என்று அவள் கூறவே ஒப்புக்கொண்டேன்.

மறுநாள் விஜயாவைக் கல்லூரியிலே காணவில்லே. அவள் தன் ஊர் போய்விட்டாளாம்!

முதலில் சற்றே துணுக்குற்றேனுயினும் பிறகு ஆறுதலே பெற்றேன்.

நான்கு நாட்களுக்கெல்லாம், நான் எதிர்பாராத கடிதங்கள் இரண்டு வந்தன.

"நெஞ்சிலே காதல் மட்டும் இருந்தால் போதாது என்பதை இப்போது நன்குணர்கிறேன். அன்பு செறிந்த ஒத்துழைப்பும் நெஞ்சிலே இருக்கவேண்டும். உங்கள் மனம் குளிரட்டும் என்று எண்ணுதவளாய் நான் உங்களேயே என் வழி வர விரும்பினேன். பெண்ணுகிய நான் ஆடவர்களுடன் சகஜபாவம் குறைத்துக் கொண்டிருப்பின், என் பெண்மை உயர்வுபெற்றிருக்குமேயன்றி தாழ்வு பெற்றிருக்காது. ஆனல் எனக்கு உங்கள் உணர்ச்சிகளே மதிக்கும் ஆற்றல் இருக்கவில்லே. அதற்குச் சரியான தண்டனே பெற்ருச்சு. பெண்மை நிறைந்த பெண்ணுகிய சரஸ்வதி உங்களே ஒரே பார்வையில் கவர்ந்திழுத்துவிட்டாள். உங்களுக்கு இணையான இல்லாள் அவள்தான்."

விஜி எழுதிய கடிதம் இது. என் மனம் விஜியின்பால் அனுதாபமும் பரிவும் கொண்டது. "பலவீனங்கொண்டு சோர்ந்த நிலேயிலிருந்த என் மனதை, சரஸ்வதி கவர்ந்துவிட்டது ஒரு விந்தையா, விஜி!" எனக் கேட்கவேணும்போலத் தோன்றியது.

கையிலிருந்த மற்ருெரு கடிதத்தைப் பிரித்தேன். ஆ! சரஸ்வதி!

சிறு கடிதத்தின் ஒரு பெரும்பகுதியாக விளங்கிய இந்த விஷயம் என் கவனத்தைப் பிணேத்தது. மிளகு, இஞ்சி, ஆகியவற்றின் வாசனே முன்பெல்லாம் இவளுக்கு இஷ்டமே இல்லேயாம்! என் தங்கை சொன்னுளாம், எனக்கு இந்த வாசனேகள் பிரியம் என்று! அதனுல் சரஸ்வதியும் இப்பொழுது இஷ்டமுடன் இஞ்சி, மிளகு சேர்ந்த பண்டங்கள் புசிக்கிருளாம். இவை போட்டு என்னென்ன பக்குவங்கள் செய்யலாமோ எல்லாம் கற்கிருளாம் இப்பொழுது! நான் இன்பப்புன்னகை பூத்தேன். "சரஸ்வதி! சரசு! சரஸ்! சச்சு!" என்றெல்லாம் முணுமுணுத்தது என் அந்தரங்கம். ஆசையுடனும் ஆர்வமுடனும் நினேப்புக்கு இழுத்துவந்து நிறுத்தினேன், அவளுடைய உருவத்தை.

இதோ, விஜியின் கடிதம்!......இரண்டு கடிதங்களுக்கும் பதிற் கடிதம் எழுதவேண்டுமா? என்னவென்று எழுதுவது? கடற்கரையையே நாடிச் சென்றேன், சிந்தனே செய்ய.

கடற் காதலரைப்பற்றி ஒரு பேச்சு வழங்குகிறதுண்டு. ஆண் அலே இழுத்துப்போய் விடும் பொருளே. இளகிய இயல்புள்ள பெண் அலே கரை சேர்த்துவிடுமாம்!

கடற்கரைக் காதலராக விஜயாவும் நானும் உலாவிய நாட்களிலே!...விஜயா இளகா நெஞ்சமுள்ளவளாயும், நான் குழைவே உருவாகவும், விளங்கினேம். பெண்மைக்குரிய கனிவும், விட்டுக்கொடுக்கும் தன்மையும் அவளிடம் இருக்கவில்லே! உண்மை!

நிலேயருகு காத்துக் கிடக்கும், புழுதியையும் சகதியையும் சுமந்து படுத்துக் கிடக்கும், மிதியடியை, புழுதி நீக்கிச் சுத்தம் செய்யும் வழி யாது? மிதியடியைத் தரையிலே அறைந்து மோதுவதுதானே! என் பொருமை எண்ணங்களே உலுக்கிவிட விஜயா கையாண்ட முறை இதுவே! மோகமாகிய ஏடு கட்டிவிட்டிருந்ததனுல் என் மனமாகிய பால், நீர்த்து, பலமற்றுப் போயிருந்தது. விஜயா என் ஆண்மையை யெல்லாம் மெல்ல மெல்ல ஒடுக்கினுள்! விடுமுறையின் துவக்கத்திலே அவளுடைய தோழமை விடுபட்டபோது, முதலில் மனம் பளுவாயிருப்பினும், பிறகு ஒரு சுதந்திர உணர்ச்சி ஏற்பட்டதல்லவா எனக்கு? அதன் பயனுகத்தான் தந்தையின் வார்த்தைகளுக்கு எளிதிலே செவி சாய்த்துவிட்டேன் போலும்!

பலவீனமுற்ற என் மனதை, சரஸ்வதி ஆட்கொள்ள வில்லே! பலம் பெற்று, புத்துயிர்பெற்ற என் மனதைத்தான் சரஸ்வதி வசீகரித்திருக்கிருள். சரஸ்வதி அலாதிப் பெண்.

விஜயாவின் கடிதத்திற்கு விளக்கம் ஸரஸியின் கடிதம். ஸரஸியின் கடிதத்திற்கு விளக்கம் விஜியின் கடிதம். இரண்டு கடிதங்களுக்கும் இத்தகைய நெருங்கிய தொடர்பு இருப்பினும் நான் ஒரே ஒரு கடிதத்திற்குத்தான் பதில் விடுத்தேன். சரசுவுக்கு! சரசுவின் அன்புக் கட்டளே! ●

பட்டு உற்பத்தி

அ. வேணுகோபாலன்

பட்டுத் தொழில் இந்தியாவின் ஒரு பழமையான கைத்தொழில். 1796ஆம் ஆண்டில் 6,56,000 பவுண்டு பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது; அதே சமயத்தில், இத்தாலி, பிரான்ஸ் போன்ற நாடுகளின் மொத்தப் பட்டு ஏற்றுமதி 2,82,304 பவுண்டுகள்தான். இதிலிருந்தே இந்தியா, பட்டு உற்பத்தியில் முன்னேறியிருந்தது எனத் தெரிகிறதல்லவா? 1866ல் வங்கத்திலிருந்து ஐரோப்பாவுக்கு 15,58,246 பவுண்டு பட்டு ஏற்றுமதியாகியிருக்கிறது. ஆனால், நாளடைவில், அன்னிய நாட்டு ஆதிக்கத்தின்கீழ் இந்தப் பெருந்தொழில் நசித்து வரலாயிற்று.

பட்டு உற்பத்திக்கு, புழுக்கள் மிகவும் முக்கியமானவை; இப்புழுக்கள் அபிவிருத்தியடைய ஆகாரம் அவசியம் வேண்டும். இவைகளுக்கு முசுக்கட்டைச் செடியின் இலைகளின்மேல் விருப்பம் அதிகம்; எனவே, பட்டு நூலைச் சேகரிக்க விரும்புபவர்கள் இச் செடிகளை வளர்த்து, இங்கே புழுக்களை வளர்ப்பார்கள். சரியான தருணத்தில், இப் புழுக்களிறங்குவதற்குத் துண்டுத் துணிகளை விரித்து வைப்பார்கள். இத் துணிகளின்மேல் புழுக்கள் ஒவ்வொன்றும் 200 முதல் 500 முட்டைகளையிடும். இப்படிக் கிடைக்கும் முட்டைகளைப் பொரிக்கும்படி செய்ய, சூடான அறைகளில் வேண்டிய சீதோஷ்ண நிலையில் வைப்பார்கள். இம்முட்டைகள் பொரித்த பின், அதிலிருந்து வரும் பட்டுப் புழு சுமார் கால் அங்குல நீளமுடையதாயிருக்கும்.

இவைகள் வளர, ஒருவித வெள்ளை முசுக்கட்டை இலைகளை வெட்டிப் போடுவார்கள். இந்தச் சிறு புழுக்கள், இவ்விலைகளைத் தின்று நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வரும். இப்படித் தின்று தின்று 5 வாரங்களில் இப் புழுக்கள் சுமார் 4 தடவைகள் தங்கள் தோல்களை உரித்துவிடும்; 5ஆம் வாரத்தில் இப் புழு சுமார் 3 அங்குல நீளமாயும், $\frac{1}{2}$ அங்குலம் தடிப்பாயும் இருக்கும்.

இதற்குப் பிறகு, சாப்பிடுவதை நிறுத்திவிட்டு, தங்களுடம்பின் பக்கங்களிலுள்ள கோளங்களிலிருந்து பசைபோன்ற நூலை, மேலுதட்டின் துளை வழியாய் (நூல் நூற்கும் அவயவம்) வெளியிட்டு, அதனால் ஒரு மேலுறையை நூற்றுக்கொள்ளுகின்றன. இப்படியாகத் தன்னைச் சுற்றிச்சுற்றிக் கொள்ளுவ

அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பட்டுக் குண்டுகளின் (Cocoons) மாதிரி

தால் அவையெல்லாம் சேர்ந்து ஒரு பெரிய உறைபோலாகிவிடும்; இது காற்றினால் காய்ந்து கடினமாகிவிடும். பின்பு இவைகளைக் கொண்டுபோய், சூடான அறையில் வைத்து அடிக்கடி புரட்டிக் கொடுப்பார்கள். இதன் பின் தங்களுக்கு வேண்டியவைகளைப் பார்த்துப் பிரித்தெடுப்பார்கள். இதற்குள் பட்டுப் புழுக்கள் இறந்துவிட்டிருக்கும். கெட்டியாகக் கட்டிக்கொண்டிருக்கும் அந்தப் பசைபோன்றதைச் சூடான தண்ணீரில் ஊற வைத்து நனைப்பார்கள்; நனைந்தபிறகு, அந்த இழைகள் பிரியும்படியாய், பிரஷ்ஷினால் கிண்டி, அந்த இழைகளை ஊசிக்கொண்டை போன்ற துவாரங்களில் நுழைத்து, திரித்து, தண்ணீரில் அலைத்து, கண்டைகளில் சுற்றுவார்கள். இப்பொழுது, பட்டுப்புழுவின் பசை, பட்டாக இருக்கும். இந்தப்பட்டு நூலுக்குத் தங்கள் திறமைக்கேற்றமாதிரி பளபளப்பு, வர்ணம் போன்றவைகளைக் கொடுத்து, பட்டுநூலைத் துணிகளாக நெய்வார்கள்.



1. பட்டுப் பூச்சி 2. பட்டுப் புழு 3. புழு நூல் நூற்றல் 4. கூட்டின் உட்புறம் 5. பட்டுப் புழுவின் கூண்டு 6. பூச்சி கூட்டை விட்டு வெளிவருதல்

இந்தியாவில் மைசூர், காஷ்மீர். வங்காளம், சென்னையில் சிலவிடங்கள், மற்றும் அஸ்ஸாம், பீகார், பஞ்சாப், ஒரிஸ்ஸா, மத்திய மாகாணம், ஹைதராபாத் முதலிய விடங்களில் பட்டு தயாரிக்கிறார்கள். பட்டு உற்பத்தி செய்ய, முசுக்கட்டைச்செடிகள் இன்றியமையாதவை. கொள்ளேகாலத்தில் மட்டும் 15,000 ஏகராவில் முசுக்கட்டைச் செடிகள் பயிர் செய்யப்படுகின்றன. கொள்ளேகாலத்தைத் தவிர, ஹோசூர், காஷ்மீர் மேலும் வங்கம், மத்திய மாகாணம், பீஹார் முதலிய இடங்களில் டஸார் செடிகளையும், அஸ்ஸாமில் ஆமணக்குச் செடிகளில் வளரும் பட்டுப்பூச்சிகளையும், மூசு பட்டையும் தயாரிக்கிறார்கள். மைசூரில் மட்டும் 14,00,000 பவுண்டு பட்டுக் குண்டுகளை (cocoons) உற்பத்தி செய்திருக்கிறார்கள். 1938–39ல் 2,46,000 ரூபாய்கள் இத்தொழிலுக்கு மானியம் வழங்கினர்; 1948ல் இத்தொகை 7 லக்ஷமாக உயர்ந்துள்ளது. அதிகச் செலவிற்கேற்ப முசுக்கட்டைப்பயிர் 30,000 ஏகராவிலிருந்து 75,000 ஏகராவாக, இதன் பரப்பும் அதிகரித்திருக்கிறது.

பட்டுத் தொழிலைக் கூட்டுறவு முறையில், தேர்ந்த திட்டத்தின் கீழ் மைசூர் அரசாங்கம் நடத்தி வருகிறது. (1) மானியம் வழங்குதல் (2) முசுக்கட்டை வளர்ச்சிக்கேற்ப, "போனஸ்" கொடுப்பது (3) வெளிநாடுகளின் அனுபவத்தை உபயோகித்தல் (4) பட்டுப்பூச்சி மார்க்கெட்டைச் சீராக வைத்தல் (5) பட்டுத் தொழிலைக் கூட்டாக நடத்துதல் (6) இதற்குச் சம்பந்தப்பட்ட கல்வி போதித்தல். இப்படி இதன் முன்னேற்றத்திற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

வட இந்தியாவில் வங்கத்தில் இத்தொழில் பிரமாதமாக இருந்து வருகிறது. இம் மாகாணத்தில் மட்டும் ஏறக்குறைய 1,30,000 நபர்கள் பட்டுப் பூச்சிகளை வளர்ப்பதிலும், முசுக்கட்டைச் செடிகளை வளர்ப்பதிலும் ஈடுபட்டுள்ளனர். சுமார் 1,000 கிராமங்களிலுள்ள 3,20,000 நபர்கள் இத்தொழிலிலீடுபட்டுப் பிழைக்கிறார்கள். இத்தொழிலுக்கு 250,000 முதல் 4,00,000 மானியம் வழங்கும் வங்கம், இதன் வளர்ச்சிக்குப் பல திட்டங்களை வகுத்துள்ளது. (1) விதைகளை உற்பத்தி செய்வது (முசுக்கட்டை விதை) (2) இத் தொழிலிலீடுபட்டுள்ளவர்களில் சிறந்தவர்களுக்குப் பயிற்சி அளித்தல் (3) விதைகளைப் பரீக்ஷிக்கக் குழுவினரை ஏற்படுத்துதல் (4) கூட்டுறவு முறையில் உற்பத்தியதிகரிக்க வசதி செய்தல் (5) தொழில் முன்னேற்ற மடைய, பட்டுச் சங்கங்களை ஏற்படுத்துதல், (6) பட்டை, ஒருதரப் படுத்துவதின் மூலம் மதிப்பை யதிகரிக்கச் செய்தல்.



"எழிலோங்கும்
சருமத்தை **லக்ஸ் டாய்லட் சோப்**
உபயோகிப்பதால் எளிதில் பெறலாம்"

என்று கூறுகிறார் வரலக்ஷ்மி



இனிய மணத்துடன் கூடிய
இந்த வெண்மையானதும்
சுத்தமானதுமான சோப்
உங்கள் சருமத்தை
வசீகரமாகச் செய்யும்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 282-172 TM



எமது முதல்தரமான
சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான் களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் படுகின்றன !

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண் டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும் !

கே. சுவாமிநாதன் & கம்பெனி

24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.

பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.
No. 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.
No. 8/44, ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.
தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்

டோங்ரேயின் பாலாம்ருதம்

K. T. டோங்கரே அண்கோ., பம்பாய்-4.

இந்தியாவில், 24 லட்சம் பவுண்டு எடையுள்ள 4 கோடி ரூபாய் பட்டு உற்பத்தியாகிறது. நமக்கு வேண்டியதோ 40 லக்ஷம் பவுண்டு. எனவே, உள் நாட்டுத் தேவையைப் பூர்த்திசெய்ய வேண்டுமானுல் 16 லட்சம் பவுண்டு பற்ருக்குறையிருக்கிறது.

1910-ல் வங்கத்தில் மட்டும் 1,31,000 ஏகரா முசுக்கட்டைச் செடியிருந்தது; ஆனுல் 1,938ல் 95,000 ஏகராவாகக் குறைந்துவிட்டது! வெளிநாட்டுப் பட்டிற்கு ஏராளமாக வரி விதித்துங்கூட, அவை இறக்குமதியாகிக் கொண்டுதானிருக்கிறது. யுத்த சமயத்தில் இந்தியப் பட்டுத் தொழில் அபிவிருத்திக்கு அதிக வசதியிருந்தது. பட்டிற்கு அதிக தேவையிருந்ததின் காரணமாக முசுக்கட்டைச் செடி உற்பத்தி 2 முதல் 3 மடங்கு வரை உயர்த்தப்பட்டு உற்பத்தியை யதிகரிக்க முயன்றனர்; விலை, யுத்த சமயத்தில் முன்பிருந்ததைவிட 6 முதல் 10 மடங்குவரை உயர்ந்தது. ஆனுலும், வெளிநாட்டின் அடக்க விலை இதில் பாதியேதானுகிறது. இதிலிருந்தே இந்தியப் பட்டுத் தொழில் இன்னும் முன்னேற வேண்டுமெனத் தெரிகிறதல்லவா? இத்தொழில் மூலம் சுமார் 6 லட்சம் குடும்பங்கள் இந்தியாவில் பிழைத்து வருகின்றனர்; சுமார் 300 தொழிற்சாலைகள் இருக்கின்றன.

யாயிருக்கிறது; மற்றும், இது பாரசூட்டிற்கு இன்றியமையாதது; பெரிய துப்பாக்கிகளைக் கட்டுவதற்குச் சரடாகவும், வெடி குண்டுகளைச் சிப்பங் கட்டவும், பளுவான சாமான்களைச் சுமக்கப் பைகளும் பட்டினுலேயே தயாரிக்கப்பெறுகின்றன. எனவே, யுத்தத்திற்கு வேண்டியவைகளுள் பட்டும் ஒன்ருகவிருக்கிறதல்லவா? பட்டை அணிவதற்காக மட்டும் உபயோகிப்பதில்லை; வேறு பல வேலைகளுக்கும் அது பயன்படுகிறது. மின்சாரத்தின் பலவித பிரிவுகளுக்கும், சங்கீதக் கருவிகளின் பல பாகங்களுக்கும், கம்பியில்லாமல் கேட்கும் 'டெலிபோன்' சாதனங்களுக்கும், மற்றும் நவீன மீன் பிடிக்கும் வலைகளுக்கும், மாவு அரைக்கும் யந்திரங்களுக்கும் இன்றியமையாததாயிருக்கிறது. இதுவன்றி, தற்போது பட்டுப் பூச்சியிலிருந்து கிடைக்கும் நூலைப்போன்ற நரம்பு, சஸ்திர சிகிச்சைக்கு வெகுவாகப் பயன்படுகிறது.

உலகத்திலேயே, பட்டு உற்பத்தியில் பெரிய அளவில் முன்னேறியுள்ள நாடுகளில் ஜப்பான் முன்னணியிலிருக்கிறது. இங்கு சுமார் 10,00000 குடும்பங்கள், கிட்டத்தட்ட 50 லக்ஷம் மக்கள் இதிலீடுபட்டுள்ளனர். சராசரி 15 கோடி பவுண்டு

கீழே கொடுத்திருப்பது, சமீபகால ஏற்றுமதி, இறக்குமதி விவரம்:—

வருடம்	இறக்குமதி லக்ஷம் பவுண்டுகளில்	மதிப்பு ரூ. லக்ஷக்கணக்கில்	ஏற்றுமதி லக்ஷம் பவுண்டுகளில்	மதிப்பு ரூ. லக்ஷக்கணக்கில்
யுத்தத்திற்குமுன்	...	394·5	...	58·
யுத்தத்திற்குப்பின்	...	573·9	...	65·80
1937—38	22·68	90·	4·6	29·30
1939—40	20·20	54·3	4·5	22·80
1942—43	0.20	0·12	3·3	23·10
1943—44	0·10	0·13	1·8	9·10
1944—45	0·10	0·15	1·4	8·10
1945—46	...	5·	1·15	7·6

19ஆம் நூற்ருண்டில் லங்காஷயரிலிருந்து அதிக ஆடைகளை இறக்குமதி செய்ததினுல், அதிக விலையாகவிருந்த பட்டின் நிலை பாதிக்கப்பட்டிருந்தது. ஆனுல் 1914-18க்குப் பிறகு யுத்தத்தின் காரணமாக அபிவிருத்தியடைந்தது. யுத்தத்திற்கும் பட்டிற்கும் என்ன சம்பந்தம்? யுத்தத்தினுல் பட்டின் நிலை எப்படி அபிவிருத்தியடைந்தது என்ற சந்தேகம் எழலாம். காரணங்களைக் கவனித்தால், பட்டு இல்லாமல் யுத்தத்தை நடத்த இயலாது என்றே கூறலாம். மிக உறுதியாக வேண்டிய துணிகளுக்குப் பதிலாகப் பட்டையே பயன்படுத்துகின்றனர்; இதுவன்றி, யுத்த தளவாட சாமான்களுள் பட்டின் சேர்க்கை மிகுதி

பட்டுக் குண்டுகளை (Cocoons) உற்பத்தி செய்கிருர்கள்.

இந்தியாவில் 150 சதவீதம் வரி விதித்துங்கூட ஜப்பானியப்பட்டு விலை இந்திய பட்டைக் காட்டிலும் சரசமாகவே இருக்கிறது. இதற்குக் காரணமென்ன? ஜப்பானியர்கள் குறைந்த விலையில் விற்க முயல்வதுதான் இதற்குக் காரணம். இவர்களால் மாத்திரம் எப்படிக் குறைந்த விலையில் விற்க முடிகிறது என்பது அறிந்துகொள்ளவேண்டிய அம்சமாகும். அதிக அளவில் முன்னேறியதின் காரணமாக உலகச் சந்தையில் 80சதவிகிதப் பட்டு மூலப்பொருளை விற்றிருக்கிறது. 1937ல்

மாத்திரம் ஜப்பான் ஏற்றுமதி செய்த பட்டினளவு 75,000,000 பவுண்டுகளாகும்!

இந்த உற்பத்திப் பெருக்கத்தின் ரகசியமென்ன? முன்பெல்லாம், ஜப்பான் வருடத்திற்கு ஒரு தடவைதான் பட்டுப் பூச்சிகளை உற்பத்தி செய்து வந்தது; ஆனால், இப்போதெல்லாம் 3, 4 தடவைகள்கூட ஒரே வருடத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது! செயற்கை முறையில் விஞ்ஞான வசதியோடு, சீதோஷ்ண நிலையும் பொருந்தியிருப்பதால், இந்த அதிக பட்டுப்புழுக்களினுதவியால், அதிக பட்டைப் உற்பத்திசெய்வது சாத்தியமாகிறது. இந்தியாவை எடுத்துக்கொண்டால், இவ்விஷயத்தில் கட்டைவண்டி வேகத்தில்தான் முன்னேறுகிறது! மற்ற நாடுகள் ஆகாய விமான வேகத்திலும், ரயில் வேகத்திலும் ஓடும்போது, நம் நாட்டின் வேகம் எம்மூலைக்கு?

பட்டு உற்பத்தியின் எல்லாப் பருவத்திலும், உற்பத்தி வேகத்தையும், வேலையையும் சமமாகப் பங்கிட்டு, வேலை வேகமாக நடக்கிறது. அரசாங்கமே இதற்குச் சொல்லமுடியாத அளவு உதவுகிறது. இதற்கு உதாரணமாக, ஒரு சம்பவத்தைக் கூறலாம்: ஒரு சமயம் முசுக்கட்டைச் செடிகளுக்கு ஒருவித நோய் வந்துவிட்டதால், பட்டுப் புழுக்களெல்லாம் நசிக்கவாரம்பித்தன. உடனே, பட்டு உற்பத்திக் குறைவுக்குக் காரணமென்னவென்பதை ஆராய்ந்து சமர்ப்பிக்க ஒரு கமிட்டி நியமித்து, அரசாங்கம் அதன் முடிவுகளைப் பரிசீலனை செய்து, அதற்குக் காரணமாகச் சொல்லப்பட்டவைகளைத் தடுக்கச் சில புதிய சட்டங்களையும் கொண்டு வந்தது.

பட்டு நூல், தண்ணீரின் தன்மைக்கும் சூட்டினளவிற்குமேற்ப நீளமாகவோ, குட்டையாகவோ கிடைக்கிறது. ஜப்பானில் சராசரி ஒரு பட்டுப் புழுவிலிருந்து 1300 கெஜம் பட்டு கிடைக்கின்றது. ஆனால், இந்தியாவில் 400 முதல் 600 கெஜம்தான் பட்டு கிடைக்கின்றது.

ஜப்பானிலே, ஒரே ரீலரில் அதை இயக்கும் ஒரு நபர் 20 முதல் 40 ரீலர்களை ஆடோமேடிக் கருவியினால் இயக்கி, குறைந்த பக்ஷம் $2\frac{1}{4}$ பவுண்டு பட்டு நூலைத் திரித்து, அரை யென் அல்லது அணா 13 சம்பாதிக்க முடிந்தது, யுத்த காலத்திற்கு முன்பே, இப்படியாக உற்பத்தியைப் பெருக்கியதின் காரணமாக, 1900ஆம் ஆண்டில் பட்டு உற்பத்தியின் புள்ளி 100 ஆக இருந்தது, 1936ல் 682 ஆக உயர்ந்துவிட்டது! அதாவது, பெரிய முன்னேற்றத்தையடைந்து விட்டனரென்பதே இதன் அர்த்தம். பட்டு உற்பத்திக்காகச் சுமார் 300 ரீலிங் பேக்டரிகளுள்ளன; பட்டு நெசவாலைகளிலுள்ள கதிர்களின் எண்ணிக்கை 24,000; நெசவுத் தறிகளின் தொகை 33,200. யுத்தத்திற்குப் பின்னால் நாடு நாசமடைந்து மோசமான நிலையிலிருந்த சமயத்திலுங்கூட ஜப்பான் தன் பட்டு உற்பத்தியில் 85 சதவிகிதமான 20,000,000 பவுண்டு பட்டினை ஏற்றுமதி செய்திருக்கிறது!

இந்தமாதிரி அபிவிருத்தியடைந்திருப்பதின் காரணமாக, விலை குறைவாக விற்க முடியுமாதலால், இந்நாட்டுச் சரக்கிற்கு எங்கும் வரவேற்பிருக்கிறது. ஆனால், இந்தியா விஷயம் அப்படியல்ல; இங்கே பெரும்பாலும் பட்டு நெசவு கைத்தறி மூலமாகவே நடப்பதாலும், இன்னும் அபிவிருத்தியடையாததாலும் விலை குறைவாக விற்க வசதியில்லை. இதைப்பற்றி டோரோண்டோ வியாபாரக் கமிஷனர் 1946ல் கூறும்போது "இந்தியப் பட்டு தரத்தில் உயர்ந்திருப்பதனால் உலக மார்க்கட்டில் இதற்கு நல்ல மதிப்பிருக்கிறது; இருந்தாலும் இதன் விலையதிகம்" என்று குறிப்பிட்டிருக்கிறார். இதை நாம் கவனிக்கவேண்டும். ஒரு கெஜ இந்தியப் பட்டின் விலை 7,500 சென்டாக விற்றால், சீனா, ஜப்பான் பட்டின் விலை 2,500 செண்டாக விற்கப்படுகிறது. இதில், எதை வாங்குவார்கள் மக்கள்? எனவே, இந்தியப் பட்டு உலக மார்க்கெட்டில் விற்கப்படவேண்டுமானால் விலை குறைய வழி செய்யவேண்டும்.

பட்டிலிருந்து அநேகவிதமான வகைகள் தயாரிக்கப்படுகிறது. இவைகளின் வகைகளைப்பற்றிச் சற்றுப் பாருங்கள்: ரேடியம், சைனா சில்க், ப்யூஜி. கிரேப், சார்மியூஸ், ப்ரொகெய்ட், சாட்டின், புல்காட், பாரிஸ்ஸில்க், ஜப்பான் சில்க், சைனா ஷீட், ஜார்ஜெட், பட்டர் சில்க், கான்பாஸ், வெல்வெட், பங்காரா சில்க், டிஷ்யூ, பாப்ளின், டார்கா, லினன். இன்னும் பல்வேறு பெயர்களில் நூற்றுக்கணக்கான வகைகளுள.

நம் இந்தியாவில் வெகுகாலமாகக் கைத்தறிகளின் மூலந்தான் பட்டு தயாரிக்கப்பெற்று வந்திருக்கின்றது. 18ஆம் நூற்றாண்டின் பிற்காலத்தில்தான் ஆலைகளில் தயார் செய்யவாரம்பித்தனர். இந்தியாவில், காஷ்மீரிலும், மைசூரிலும், போற்றத்தக்க முறையில் பட்டு தயாரிக்கப்பெறுகிறது. இவ்விரண்டிடங்களிலும் சர்க்காரே நவீன வசதிகளைக் கொண்டு, தற்காலத்திற்கேற்ற மாதிரி பட்டு தயாரிக்கிறார்கள். இங்கு, லினன், ஜார்ஜெட், சாடின், கிரேப் போன்றவைகள் தயார் ஆகின்றன. இதுவன்றி, டூபியின், ப்ரேச்சர், ஷாங்காய் என்பவைகளும் தயாராகின்றன.

ஆலைகளில் தயாராகும் பட்டு மிகவும் வழுவழுப்பாக, அதாவது பகட்டாக இருக்கிறதே தவிர, கைத்தறியில் தயாராகும் பட்டுப்போல உறுதி வாய்ந்ததன்று. ஆலைகளில் பட்டாடைகளுக்குப் பளபளப்பும், பகட்டுமேற்பட ஒருவித திராவகத்தில் தோய்த்தெடுக்கிறார்கள். பிறகு, இது ஒரு பெரிய இரும்பு உருளையினால் சமனப்படுத்தப்படுகிறது. இதனால், இப் பட்டாடைகள் கண்ணைக்கவரும் வண்ணம் பகட்டாக இருக்கிறது; ஆனால், இதன் உறுதி திராவகக் கலப்பால் பாதிக்கப்பட்டு, கைநெசவுப் பட்டைப்போல் நீண்ட நாட்களுக்குழைக்காது.

1949-ல், 22 நாடுகளின் பட்டு மகாநாடு ஜுரிச்சில் நடைபெற்றபோது, ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு தரத்தை யேற்படுத்திக்கொள்ள வேண்டு

மெனத் தீர்மானமாயிற்று. இப்படி ஏற்பட்டால், ஒவ்வொரு நாட்டின் பட்டும், வேறு நாட்டிற்கு ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படுமாதலால் போட்டி ஏற்படாது என்பது இம் மகாநாட்டின் யோசனை. ஆனால், இம்மாதிரியான முடிவினால் போட்டி மனப்பான்மை குறைந்து, உயர்ந்த ரகத்தைத் தயாரிக்க ஊக்கமேற்படாததோடு, விலை குறையவும் வழியில்லை. எனவே, விலை குறைவாகவும், தரம் உயர்வாகவுமிருக்கப் போட்டியிருக்க வேண்டுமென்பதே நம் அபிப்பிராயமாகும்.

இந்தியாவின் ஒரு சிறந்த கைத்தொழிலாகப் பட்டு நெசவு இருந்ததெனக் குறிப்பிட்டுள்ளோம். கைத் தறிகளின் மூலமாக, தாவரச் சாயங்களினால் கண்ணைக் கவரும் முறையில் பிரமாதமாக நடந்து வந்த இத்தொழில், அந்நியநாட்டின் அடிமைத் தளையின் கீழ் நசிவுற்ற அநேக பெருங் கைத்தொழில்களுள் ஒன்றாகும். நவீன வசதிகளோடு கூடிய இந்த நாகரிக யுகத்தில், போதிய நவீன வசதிகளை உபயோகிக்காமலேயே, இந்தியப் பட்டுத் தொழில் இன்னும் நடைபெற்று வருகிறது; இதற்குக் காரணம், பட்டின் உறுதியும், அதில் சித்திரிக்கப்பெறும் சித்திர விசித்திரங்களுந்தான்!

பட்டு நெசவின் தொழில் திறமையினால், பட்டு நூலைச் சித்திரப் பட்டாடையாகத் தயாரிக்கிறார்கள். இதுவன்றி, பட்டாடைகள் மீது புட்டாக்களை விழவும் செய்கிறார்கள். புட்டாக்களை விழச் செய்ய, ஆடையின் பகுதிகளைக் கிரமமாகச் சேர்த்துக்கட்டி, சாயத்தில் தோய்த்து, கட்டுகளை நீக்கி விடுவார்கள். இதைச் செய்யும் லாவகத்தால், புட்டாக்கள் ஆடைகள் மீது விழும். இதை, நவீன முறையில் மெழுகைக்கொண்டு செய்கிறார்கள். மேலும் கட்டைகளின் மூலமாக அச்சுவடிவத்திலும் ஆடைகளுக்கு வர்ணம் பூசுகிறார்கள்.

நவீன வசதிகளினால் இப்போது "ஸ்டென்சிலீங்" என்னும் முறையில் ஆடைகளுக்கு வர்ணப் பூச்சு செய்வதுண்டு. இதைக் கைத்தறியாளர்கள் கட்டையில் அச்சுச் செதுக்குவதைப்போல், தகடுகளில் வேண்டும் வடிவத்தை வரைந்து, வேண்டாத பாகத்தைக் கத்தரித்தெடுத்துவிட்டு, இதை ஆடைகளின்மேல் வைத்து, தூரிகைகளைக்கொண்டு வர்ணம் பூசுவார்கள். இச் சாயங்களை அரக்கிலிருந்தும், பலா, மா, புளியமரங்களின் பட்டைகளைக்கொண்டும் தயாரித்து வந்தனர். இத்தொழில்கள், பரம்பரையாகத் தொடர்ந்து நடைபெறாததால், இம் முறையை யறிந்தவர்கள் இருக்கிறார்களோ, இல்லையோ எனக்குத் தெரியாது; ஆனால், ஒரு சிலராவது இருப்பாரென நம்பலாம்; இப்படித் தயாரிக்கப் பெறுவது, விஞ்ஞான மூலமாகத் தயாராவதைக் காட்டிலும் வெகு நேர்த்தியாயிருக்கிறது.

இப்படிப் பட்ட நேர்த்தியான சாய வகைகளுக்கு அரசாங்கம் ஆதரவளிக்காமல், ஜப்பான், ஜர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து சாயங்களை வாங்க "லைசென்ஸ்" தருவது வருந்தத்தக்கதாகும். இனியாவது அரசாங்கம் இதில் சிரத்தை காட்டவேண்டுமென்பது நம் அவாவாகும்.

மைசூரில் ஸ்பன்சில்க் தயாரிக்கும் ஆலைகளுள்ளன. இங்கு, பட்டை (~ilk) ரீலிங்கில் சுற்றும் போது ஏறக்குறையப் பாதி, தாழ்ந்த ரகப்பட்டாகத் தள்ளப்படுகிறது. இவைகளை உபயோகிக்கத் தெரியாமல் மேல் நாடுகளுக்கு, பவுண்டு 1—4—0 வீதம் ஏற்றுமதி செய்துவிடுகிறார்கள். இதைச் சீர்படுத்தினால் குறைந்தது பாதியாவது நல்ல பட்டாகக் கிடைக்கும்; இதற்கு வழிசெய்யாமல் அனாவசியமாக இதைக் குறைந்த விலைக்கு விற்றுவிடுகிறார்கள். இதைச் சீர்படுத்திவிற்றால், பட்டின் சராசரி விலை இப்போதிருப்பதைக் காட்டிலும் குறைவாக விற்கமுடியும்.

இன்னொன்றையும் நாம் கவனிக்கவேண்டியிருக்கிறது. கச்சாப்பட்டு நூல்களைச் சலவைசெய்யும் போது கிட்டத்தட்ட 20 முதல் 25 சதம் வரையில் எடை குறைந்துவிடுகிறது. இதை ஈடு செய்ய மேல் நாட்டார் சில ரசாயனச் சேர்க்கைகளை உபயோகித்துச் சமப்படுத்துகிறார்கள். நம் நாட்டில், பெரும்பாலும் தனிப்பட்ட முறையில் கிராமவாசிகள் பட்டு தயாரிப்பதால், இவர்களுக்கு இம்முறை தெரியாமல், பட்டு எடையை இழந்துவிடுகிறார்கள்.

இப்போது பட்டு யுத்தகாலத்தைவிட அதிகமாக விலையுயர்ந்திருக்கிறது. அக்டோபர் 25ஆந் தேதி பெங்களூர் பட்டு மார்க்கெட்டின் விலை கீழே தரப்படுகிறது.

ஏ ஏ ஏ	ரகம் ரூ.	32	முதல்	34
ஏ ஏ	,,	30	,,	32
ஏ	,,	28	,,	30
பி	,,	26	,,	28
ஸி	,,	24	,,	26
ஸி ஸி	,,	20	,,	23
ஷாங்காய்	,,	48	,,	50
ப்ரோச்சர்	,,	40	,,	42

ஜப்பானியப் பட்டு விலையை எடுத்துக்கொண்டால் குறைந்த பக்ஷம் இந்தியப் பட்டு விலையைவிட 5-ல் ஒரு பாகமும், அதிகப் பக்ஷம் இந்திய பட்டு விலையில் இரண்டில் ஒரு பாகமுமாகத்தானிருக்கும்.

ஜப்பானில் நம் நாட்டைப்போல் கழிவுகளை அனாவசியமாக வீணாக்குவதில்லை; இதனால்தான் இதன் அடக்கவிலை குறைவாயிருக்கிறது. உதாரணமாக, முசுக்கட்டைச் செடிகளினிலைகளைப் புழுக்களுக்கு உணவாகக் கொடுக்கிறார்கள்; அதன் தண்டுகளைக் காகிதம் தயாரிக்கப் பயன்படுத்துகிறார்கள்; இந்தியாவில் இது வீணாக்கப்படுகிறது. இறந்துபோன பட்டுப் பூச்சிகளைக்கூட விடாமல், அவைகளைக் கொண்டு "கார்பன்" தயாரிக்கப் பயன்படுத்துகிறார்கள்; பட்டுப் பூச்சிகளின் உடலிலிருந்து, "பூபே" யென்ற எண்ணெய் தயாரிக்கிறார்கள்; இதைச் சுத்தப்படுத்தி, "சோப்பு" தயாரிக்க உபப் பொருளாக வைத்துக்கொள்கிறார்கள். இன்னும், அமோனியா கிலிசரிக் ஆசிடும் பெற வழி செய்திருக்கிறார்கள். இம்மாதிரி, பட்டு உற்பத்தி செய்யும்பொழுதே அநேக உபப்

பொருள்களைத் தயாரிப்பதால், பட்டின் விலையைக் குறைக்க வழிசெய்து, அதன்மூலம் உலகச் சந்தையைப் பிடித்துக் கொள்கிறார்கள்.

அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு முன், உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்ய வழி செய்ய வேண்டும். இப்போது, மக்கள் நாகரிக வளர்ச்சிக்கேற்ப, தங்களையும் நாகரிகப்படுத்திக் கொள்ள, பட்டாடைகளை உடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள்! இச் சந்தர்ப்பத்தைப் பட்டு தயாரிப்பவர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். கூடிய வரை, குறைந்த விலையில் விற்பதுதான், பட்டுத் தொழில் வளர இருக்கும் சுலபமான, சுருக்கு வழி.

சுதந்திர அரசாங்கம் வந்த பிறகு டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜி முயற்சியால், பட்டு உற்பத்தியை 20 லக்ஷத்திலிருந்து 40 லக்ஷம் பவுண்டாக உயர்த்த யோசனை கூறும்படி ஒரு கமிட்டியை நியமித்தார். அக்கமிட்டி யோசனைப்படி, கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மாகாண, சமஸ்தானங்கள் இவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டுமென வரையறுத்திருந்தனர். அதன் விபரம்

சென்னை	...	5,00,000
காஷ்மீர்	...	5,00,000
பிற மாகாணங்கள்	...	2,00 000
வங்கம்	...	12,00 000
மைசூர்	...	16,00,000
ஆக மொத்தம்		40 லக்ஷம் பவுண்டு.

இதன் நிலை தற்போது எப்படியிருக்கிறதோ ஒன்றுந் தெரியவில்லை.

சமீப காலத்தில் எல்லாவற்றிலும் உற்பத்தியதிகரிக்க வேண்டுமென்று எண்ணுவதின் காரணமாக, 1950 ஜூன் மாதத்தில் கூடிய மத்திய பட்டு நிர்வாகக் கூட்டத்தில் தற்போதைய கைத்தொழில் மந்திரி மஹ்தாப். அதிகப் பட்டை உற்பத்தி செய்ய வேண்டுமென்று வற்புறுத்திவிட்டு, பட்டுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் அதிகமிருந்தும், பட்டு உற்பத்தி அதற்கேற்ற அளவில் இல்லையென்று குறைபட்டார். குறைபட்டு வருந்தினாரே தவிர, பட்டுத் தொழில் முன்னேற்றத்திற்கு அரசாங்கம் எம்மாதிரி உதவும், எப்படி உதவி வருகிறதென்று மட்டும் வாயைத் திறக்கவேயில்லை! உற்பத்தி யதிகரிக்க வேண்டுமென்று வாயால் கத்துகிறார்கள் அனைவரும்; ஆனால், அதற்கான வழிகளை வகுப்பவர்தான் எவருமில்லை!

இயற்கைப் பட்டிற்கு அரசாங்க ஆதரவு அதிகமில்லை யென்றே கூறலாம். முன்பு குறிப்பிட்டபடி, இந்தியாவில் இது ஒரு குடிசைத் தொழிலாகவே இருக்கிறதே தவிர, அதிக மூலதனத்தோடு கூடிய பட்டு ஆலை குறிப்பிடுமாதிரி எதுவுமில்லை. -மற்ற நாடுகளில், அதற்கேற்ற மாதிரி கருவிகளையமைத்துக்கொண்டு, விஞ்ஞான ஆதரவோடு, ஆராய்ச்சியாளர்களின் ஒத்துழைப்பால், யந்திர மூலம் தயாராக, இந்தியாவில் இதற்கு எதிர் மாறாக இருக்கிறது பட்டுத்தொழிலின் நிலை.

மாகாண சர்க்கார்தான் இதில் சிறிதளவு தலையிட்டு, உதவுகிறார்களென்று கூறலாம்; சமீபத்தில்தான் மத்திய சர்க்கார் சற்றே கவனம் செலுத்தினர். 1945ல் 1, 12, 632 ஏகராக்களில் முசுக்கட்டைச் செடி பயிரிடப்பட்டிருக்கிறது. 1945ம் வருடத்திய திட்டப்படி, 15 வருடங்களுள் அதாவது 1960ம் ஆண்டிற்குள் 15 மில்லியன் பவுண்டு அல்லது 150 லக்ஷம் பவுண்டு பட்டு உற்பத்தியாகவேண்டுமென ஏட்டிலே தீட்டிவிட்டனரே தவிர, அதைப் பூர்த்தி செய்வதற்கான வழிகளை வகுத்து நடத்தவில்லை. இக்கணக்கின்படி பார்த்தால் 1960ம் ஆண்டிற்குள் 1, 12, 632 ஏகராவிலிருந்து 7,50,000 ஏகராக்களில் முசுக்கட்டைச் செடிகளைப் பயிரிட வேண்டும். உணவுப் பற்றாக்குறையில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கையில் இத்திட்டத்தைப் பூர்த்தி செய்ய முடியுமா? எனவே முடிக்க முடியாத இத்திட்டத்தை விட்டுவிட்டு, சியாம் பிரசாத் முகர்ஜி நியமித்த கமிட்டியின் திட்டப்படி 40 லக்ஷம் பவுண்டு பட்டு உற்பத்தி செய்து, சுய தேவையைப் பூர்த்தி செய்துகொண்டு அதற்குப் பிறகு, ஏற்றுமதி செய்வதைப்பற்றி ஆகாசக் கோட்டைகளையும் கற்பனைக் கோட்டைகளையும் கட்டலாம்.

இப்போது, இயற்கைப்பட்டிற்குப் பதிலாகச் செயற்கைப் பட்டு வேறு வந்திருக்கிறது. ஆனாலும், இயற்கைப்பட்டிற்குள்ள மதிப்பு இன்னும் மங்கவில்லை. உலகமுழுவதிலும் 200,000,00 00 பவுண்டு செயற்கைப் பட்டு உற்பத்தியாகிறது. முதல் உலக யுத்தத்திற்கு முன்பு, இந்தியாவிற்கு 2 52 00,00 பவுண்டும் 1937-38ல் 2 55 5000 பவுண்டும் இறக்குமதியாயின. வருடா வருடம் சராசரி 25 லக்ஷம் பவுண்டும் இறக்குமதியாகிறது. 1940ல் மாத்திரம் 6 கோடி ரூபாய் மதிப்புள்ள பட்டு இறக்குமதி செய்தனர்.

இந்தியாவில், திருவாங்கூர், பம்பாய், ஹைதராபாத் இம்மூன்று ராஜ்யங்களிலும் செயற்கைப் பட்டு தயாரிக்கும் ஆலைகளை நிர்மாணித்து வருகின்றனர். 1948ல் 20 லக்ஷம் பவுண்டு செயற்கைப் பட்டு நூலை வரவழைத்து நெசவாளர்களுக்கு விற்றது. அரசாங்கம்; இதன் நோக்கம், இந்தியாவிலும் செயற்கைப் பட்டை உற்பத்தி செய்ய வேண்டுமென்பதேயாகும். இதற்கான ஆராய்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.

மரச்சக்கை, கந்தல், பருத்தி, மூங்கில், சணல், புல் முதலியவைகளை மூலப்பொருள்களாகக் கொண்டு, செயற்கைப் பட்டைத் தயாரிக்க முடியும். இதுவுந்தவிர, திருவாங்கூருக்கருகில் கிடைக்கும் ஒருவித நாணலிலிருந்தும், ஹைதராபாத்தின் பக்கத்திலுள்ள மைசூர் சமஸ்தான காடுகளிலிருந்தும் மரச்சக்கைகளைக் கொண்டு வந்து ரஸாயன முறையால் செயற்கைப் பட்டைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார்களாம். இம்மூன்றிடங்களிலும் சேர்ந்து சராசரி 10 முதல் 20 டன் வரை தயாராகுமென மதிப்பிட்டிருக்கிறார்கள். இதற்கான வேலை நடைபெற்று வருகிறது. ●

சிதைந்த உள்ளம்

ஜி. எஸ். மணி

ஒன்பது வருடங்கள்—

ஒன்பது வருடங்களில் ஒரு பொருளுக்கு உபயோகமே நேரவில்லையென்றால் அப்புறம் அதைக் குப்பையில் எறிந்துவிடலாமென்பது ஆன்றோர் வாக்கு. அதனால் பிரயோஜனமேயில்லை என்றிருந்தபோதிலும் ஒன்பது வருஷங்கள் வரை அதை வைத்திருக்கவேண்டியது நியாயமாம்; பயனற்றதாகக் கருதப்படும் எந்தப் பொருளுக்குமே அந்தக் காலவரையறைக்குள் கட்டாயமாகத் தேவையேற்படுமென்பது கருத்து.

கடந்த ஒன்பது வருஷங்களாகப் பலனற்றே நின்றுவிட்டாள் குஞ்சு. பதினெட்டாவது வயதிலே அவள் புக்ககம் வந்தாள்; இருபத்தேழாவது வயது நடந்துகொண்டிருந்தது—அந்த ஒன்பது வருஷங்களில் ஒரு முறைகூட அவள் புகுந்த வம்சம் பெயர் சொல்லப் பிஞ்சு வைக்கவில்லை—பூத்து அப்புறம் கருகிவிழக்கூட இடமில்லாதபடி மலட்டு மரமாகவே நின்றுவிட்டாள்.

அது அவள் குற்றமில்லைதான்; ஊரார், உறவினர் அனைவருமே அவளையே குற்றம் சாட்டுவதுபோல் பேசி ஏசினர்; மாமியார் மூச்சுக்கு மூச்சு முணுமுணுத்தாள்; கணவனும்கூடக் கசந்துகொண்டான்.

குஞ்சு பெருமூச்செறிந்தாள்—அவளால் முடிந்தது அவ்வளவுதான்—

"என் வம்சமே ஏகபுத்ர வம்சம்தான்; மூன்று தலைமுறைகளாகவே ஒரே பிள்ளையால்தான் இந்த வம்சம் விளங்கிவருகிறது; என் மாமியாருக்கும் ஒரே பிள்ளை; எனக்கும் ராஜு ஒரே குழந்தை; எனக்கு வந்து வாய்த்திருக்கும் மாட்டுப்பெண்ணோ அந்த ஒரு குழந்தைக்கும் வழியின்றி மலடுமுட்ட நிற்கிறாள்; இத்துடன் இந்த வம்சம் மறைந்துவிடுமோவென்று மனசு மாய்கிறது; என்ன செய்வது?" என்று மாமியார் அடிக்கடி முட்டிக்கொண்டாள்.

கணவனும் ஒத்துப்பாடினான்: "இதற்கு ஒரே வழிதானம்மா உண்டு: ஒன்று—என்னுடனே வம்சம் நின்றாலும் நிற்கட்டுமென்று பேசாமலிருந்துவிடுவது; அல்லது—இவளைத் தள்ளிவைத்துவிடவேண்டியதுதான்—'ஒன்றுக்கும் உதவாமலிருந்தாலும் ஒன்பது வருஷம் பார்'—என்று சாஸ்திரமே சொல்கிறது."

"என் வம்சம் அழிந்துபோவதைப் பேசாமல் பார்த்துக்கொண்டிருக்க என்னால் முடியாதுடா ராஜு; என் வம்சம் தழைக்கத்தான் வேண்டும்."

"ரொம்ப சரி; அதற்கு என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்?"

"ஏன்? இன்னொரு கல்யாணம்......?......"

"இவளை—? இவளை என்ன செய்ய?"

"ஜீவனாம்சம்——?"

அந்தமாதிரி பேச்சிலே பகிர்ந்துகொள்ள அவர்களுக்கே மனசு அவ்வளவாக இடந்தரவில்லை போலிருந்தது; அதனால்தானோ என்னவோ—பூராவாக—வாய்விட்டுப் பேசாமல்—அங்குமிங்குமாய், அறுந்து தொங்கிய மாதிரி தாயும், பிள்ளையும் பேசிக்கொண்டார்கள். அவள் காது கேட்கவே அதுமாதிரி பேசினார்கள்.

குஞ்சு பெருமூச்செறிந்துகொண்டு நின்றாள்; வேறென்ன செய்வது?

அவள் பிறந்த இடத்திலும் பிள்ளைகுட்டிகளுக்குப் பஞ்சமில்லை; அவளுக்கு உடன் பிறந்தவர்களே மூவர்; ஒரு தமக்கை; இரண்டு தம்பிகள். தமக்கை ஈன்றெடுத்துக்கொண்டேயிருந்தாள்—அவள் மட்டும் ஏன் மொட்டையாக நின்று மக்கி மடிய வேண்டும்?

குஞ்சு நெடுமூச்சு விட்டாள்—

"குஞ்சு! வீணில் உன் மனசைப் பிழிந்தெடுத்துக்கொள்வதில் பயனில்லை; கொடுத்துவைத்தது இவ்வளவுதான்; நானும் இத்தனை வருஷங்களாகப் பொறுமையாகவே வாழ்ந்துவிட்டேன் உன்னுடன்; இனிமேல் முடியாது; நீயும் வாழ வேண்டும்; என்னையும் வாழவைக்கவேண்டும்; நீ நல்ல விவேகி என்பதை நான் பூரணமாய் உணருகிறேன்; இருந்தாலும், குழந்தை-குட்டி பிறக்காத ஒரே காரணத்துக்காக உன்னிடம் இப்படிக் கடுமையாக நடந்துகொள்ளவேண்டியிருக்கிறதே என்று எனக்கே மிகவும் வருத்தமாகத்தானிருக்கிறது; இருந்தாலும் வேறு வழியில்லை—இதோ, முரண்டிக்கொள்ளாமல்-பிடிவாதம் காட்டாமல்-இதில் கையெழுத்துப் போட்டுவிடு" என்று சொல்லி ராஜு அதை அவள் எதிரில் வைத்தான்.

அது ஜீவனாம்சத்தை ஊர்ஜிதமாக்கும் பத்திரம்!

வெகு தந்திரத்துடன் அவன் பேசிய பாவனையும், நடந்துகொண்ட விதமும் அவளுக்கு அருவருப்பையே கொடுத்தன. வாழ்வை—அவளைப் பொறுத்தமட்டில்—அத்துடன் நிறுத்திவைத்துக் கொள்ளும்படி வற்புறுத்தி, வாழைப்பழத்தில் ஊசியேற்றுவதுபோல் தெரிவித்தான்; மனமறிந்து 'விஷத்தை விழுங்கு' என்று சொல்வதுபோலே வாழ்த்தினான்-அதுதானே அர்த்தம்?

கண் கலங்க அவள் அவனை ஏறிட்டு நோக்கினாள்: "நீங்கள் பிள்ளைப் பேற்றுக்காக மறுமணம் புரிந்துகொள்வதில் எனக்கும் பூரண சம்மதமே; ஆனால் பணம் கொடுத்து என்னை விலக்காமலிருக்கமுடியாதா? உங்கள் காலடியிலேயே என்னை விட்டுவைத்திருக்கக்கூடாதா?" என்று மனம் துடிக்க— அவள் மன்றாடினாள்.

ராஜு சிரித்தான்: "எந்த விதத்திலும் அது சாத்தியமேயில்லை குஞ்சு; அதனால் எனக்கும் பயனேற்படாது; உனக்கும் லாபமில்லை—நடக்க முடியாததைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பதில் என்ன நன்மை ஏற்பட்டுவிடும்? கையெழுத்துப்

இடுப்பொடியும் வேலையைத் தவிர்க்கின்றது.

நூதனம் — சிக்கனம் — திறமை

உங்கள் வீட்டு சம்பந்தமான எல்லா சுத்தமாக்கும் அலுவல்களுக்கும் கோத்ரெஜ் சவுக்காரத் தூள்களை உபயோகியுங்கள். துணிமணிகள், தளங்கள், ஜலதாரைகள், தட்டுமுட்டுச் சாமான்கள் · எல்லாம் ஒரு துடைப்பிலேயே சுத்தப்படுத்தப் படுகின்றன.

இதுதான் சகல வேலைகளுக்கும் பொருத்தமான சலவை சோப். புதிது, கெட்டியானது, பொருத்தமான அளவு. குறைந்த உழைப்பில் மிகுந்த சுத்தத்தைத் தரவல்லது.

கோத்ரெஜ் சோப்ஸ், லிட்.

மதருஸ் : 164, பிராட்வே; கொச்சின்: 6/36, கல்வத்தி.

ஏன் உங்கள் குழந்தை நோயுற்றிருந்தது?

உங்கள் குழந்தை நோயுற்றிருப்பதின் மூலகாரணத்தைப் பற்றி நிச்சயமாக புரிந்துக் கொள்ளுங்கள். சிகிச்சைக்கு பிறகும் மறுபடி மறுபடி வருவதும், அல்லது அதற்கு கட்டுப்படாமல் நிலைத்திருப்பதுமான உபத்திரவத்தின் சிறிய அறிகுறிகள் ஈரல், குலை நோயைக் குறிப்பதாயிருக்கலாம். இவைகளை ஒரு டாக்டரால் தடுக்க முடியும்.

பசியின்மை — சோம்பல் — சிடுசிடுப்பு — மலச்சிக்கல் அல்லது வயிற்றுப்போக்கு — வாந்தி — பருத்த அல்லது உஷ்ணமான வயிறு — இலேசான ஜ்வரம் — சரீர இளைப்பு.

ஜம்மியின் லிவர்க்யூர்

ஈரல், குலை நோய்களுக்கும் அவைகள் பரவாமல் தடுப்பதற்கும் உதவுகின்றது. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

பெரிய கடை தெரு, தெப்பக்குளம். திருச்சிராப்பள்ளி. பெரிய தெரு, கும்பகோணம். ஆர்காட் ஸ்ரீனிவாஸ் சார் தெரு, பெங்களூர் ஸிடி. மற்ற கிளை ஸ்தாபனங்கள்:— பம்பாய் - நாகபூர் - லக்னோ - கல்கத்தா - விஜயவாடா - விஜயநகரம்.

ஜம்மி வெங்கடரமணய்யா & ஸன்ஸ்

[illegible] ரோடு, மைலாப்பூர், மதறாஸ்.



(MADRAS), LTD.

Retail Branches 285, China Bazaar. 71, Pondy Bazaar T. Nagar,
Agencies: Luz, Mylapore. No. 2, Neeli Veerasami Chetty Street, Triplicane,
MADRAS.

போட்டுவிடு—" என்று ரத்தினச் சுருக்கமாக அவன் விஷயத்தை முடித்துவிட்டான்; அவன் குரலில் கண்டிப்பு இருந்தது; கடுமை இருந்தது; எச்சரிக்கை ஒலித்தது; அதட்டல் தொனித்தது.

தட்டிப் பேச அவளுக்குத் தைர்யமில்லை; எதிர்த்து வாதாட அவளுக்குப் பக்க பலமில்லை; துணிவுமில்லை; அவ்வளவுக்குக் குஞ்சு கோழை மனது படைத்தவள்.

தவிர—அவ்வளவுக்குப் பின்னரும்—அந்த வீட்டிலே—அவர்கள் எதிரிலே—வளைய வந்துகொண்டிருப்பதில் அவளுக்கும்தான் என்ன சுகம்? மாமியார் கொட்டுவாள்; கணவன் கசந்து முகருவான்—அவர்களுக்கும் சங்கடம்; அவளுக்கும் வேதனை.—

வீணிற்கு வம்பை இழுத்துக்கொண்டு வேண்டாத வீட்டிலே—விரோதிகளிடையே சுற்றி வருவதில் சுகமென்ன என்றெண்ணிக்கொண்டாள் குஞ்சு.

அதே நினைப்பிலிருக்கும்போதே பிரிவினைப் பத்திரத்திலே மனமறிந்து கையெழுத்தை நாட்டிவிட்டாள். அதில் எழுதப்பட்டிருந்ததைப்பற்றி அக்கறையே எடுத்துக்கொள்ளவில்லை; அந்தக் காகிதத்தைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை; கையெழுத்துப் போட்டுவிட்டாள்—தலைக்கு மேல் வெள்ளம்—சாண் போனால் என்ன—முழம் ஓடினால் என்ன? மனசு மாறுவதற்குள் தன் கையெழுத்தின் மூலமே தலையெழுத்தையும் தீர்மானித்துக்கொண்டு விட்டாள்.

ராஜு குதூஹலத்துடன் குதி போட்டுக்கொண்டு ஓடினான்.

அதே வீட்டிலே கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துகொள்ளும் நோக்கத்துடனே குஞ்சு கொல்லைப்புறம் போனாள்.

கிணற்றுக்குள்ளே எட்டிப் பார்த்தாள்: தண்ணீர் சலனமற்று இருந்தது; தெளிவுடன் காணப்பட்டது. அடியிலே தெரிந்த தன் பிரதி பிம்பத்தையே சிறிது நேரம் கவனித்துக்கொண்டு நின்றாள்; குழம்பிக்கிடந்த அவளுடைய அப்போதைய மன நிலைக்கும், தெள்ளத் தெளிந்த அந்தக் கிணற்று நீருக்கும் எத்தனை வித்தியாஸம்! உள்ளே குதித்துவிட்டால் அதுவும் குழம்பிவிடும்! அவள் மனது படபடவென்று அடித்துக்கொள்ளத் தொடங்கியதுபோல் அதன் நீரும் மோதியடித்துக்கொள்ளும்; சீக்கிரத்தில் உயிர் போக வகையில்லாமல் தத்தளிப்பதுபோல் — அவளை ஆழத்தில் அமுக்க மனமின்றி அந்தக் கிணற்று நீரும் தவிக்கும்—இப்படியெல்லாம் குஞ்சுவின் எண்ணங்கள் ஓடின.

தன்னை யாராவது கவனிக்கிறார்களோ என்றறிந்துகொள்ள முயற்சிப்பதுபோல் குஞ்சு—நாலு புறங்களிலும்—சுற்றுமுற்றும் கண்களைச் சுழற்றினாள். கண்ணுக்கெட்டியவரையில் யாருமில்லை.

எதிரில் ஓங்கி நின்ற மாமரம்தான், கண்கொட்டாமல் அவளையே வியப்புடன் விழித்துப் பார்த்துக்கொண்டு நிற்பதுபோல் அவள் மனசிலே பட்டது.

சந்தேகமேயில்லாமல் அந்த மரம் அவளையே கவனித்துக்கொண்டுதான் நின்றது; அதற்கும் அவளுக்கும் வெகு வருஷங்களாகவே தொடர்பு உண்டு.

குஞ்சுவைப்போலவே அந்த மரமும் அநேக வருஷங்களாகவே மலடாகவே நின்றுகொண்டிருந்தது; சும்மா தழைப்பதை யார் விரும்புவார்கள்? வேண்டியது பூவும்—பிஞ்சுமன்றோ?

அந்த மரமும் பூக்கவேயில்லை. தழைத்தது; உதிர்த்தது; மீண்டும் தளிர்விட்டது.—அவ்வளவே; பூ இல்லை; பிஞ்சுமில்லை; அதுவும் மலடாகத்தான் நின்றது.

பதினெட்டாவது வயதிலே குஞ்சு புக்ககத்தில் முதல் முதலாக அடியெடுத்து வைத்தபோதே அவளுடைய மாமியார் அந்த மரத்தோடு அவளையும் பிணைத்தே பேசி வரவேற்றாள்—

"வாடீம்மா! நீ வந்த முகூர்த்தம் என் ஏக புத்ர வம்சம் விருத்திபெறவேண்டும்; நிறைய நிறையத் தழைக்கவேண்டும்; ரொம்ப காலமாகவே தழைத்திருக்கும் இந்த மாமரமும் நீ வந்த நல்ல வேளையால்—பூவும் பிஞ்சுமாய்க் குலுங்கவேண்டும்!" என்று அவள் தன் ஆசையைத் தெரிவித்துக்கொண்டாள்; ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களைப் பெற வேண்டினாள்; அதாவது: மாட்டுப் பெண்ணும் ஈன்றெடுக்க வேண்டும்; மாமரமும் காய்க்கவேண்டும்!

அந்த ஆசீர்வாதத்தைக் கேட்டு, குஞ்சுவும் தான் அப்போது பெருமை தாங்காமல் பூரித்து நின்றாள்; அவளும் பூத்துக் குலுங்குவாள். அந்த மரமும் பூத்துக் குலுங்குமென்றே அப்போது மனப்பூர்வமாக நம்பினாள். இப்படி யாகுமென்று கண்டாளா?

எத்தனை வருஷங்கள் வந்தென்ன-போயென்ன? அவளும்—அந்த மரமும் மலடாகவே நின்றுவிட்டார்கள். அவள் வந்தவேளை—அந்த மரமும் பூத்துக் குலுங்கவில்லை; அவள் அந்த மலட்டு மரத்தைப் பார்த்தவேளை தானும் மலடாகி நின்று விட்டாள்.

அந்த மாமரத்துக்குப் பக்கத்திலே நின்ற வாழையொன்று குலை தள்ளியிருந்தது; அந்த மரத்தைக் கண்டு குஞ்சு பொறுமைப்பட்டாள்; அதன் குலையைக் கண்டு ஏங்கி நின்றாள்.

மேலே அதைப்பற்றி அவள் ஏதும் யோசிக்கு முன்னர்—தாயாரும், பிள்ளையுமாய், எதற்காகவோ, கொல்லைப்புறம் வந்தார்கள்.

கிணற்றின் கரையிலே குஞ்சு தனிமையில் நிற்பதைக் கண்டு ஒரு கணம் பிரமித்து நின்றுவிட்டார்கள்.

"இங்கே நின்றுகொண்டு நீ என்ன செய்கிறாய்?" என்று கேட்டான் ராஜு.

"ஒன்றுமில்லை—"

"டே ராஜு! வாழை குலை தள்ளிவிட்டது பாருடா!" என்று மனமகிழ்வுடன் சுட்டிக்காட்டினாள் தாயார்.

இதோ—இந்த மாமரம்தான் ஒன்றுக்கும் உபயோகமில்லாமல், இடத்தை அடைத்துக்கொண்டு, வெறும் மரமாகவே நிற்கிறது: நாளைக்கே இதை வெட்டிச் சாய்த்துவிட வேண்டியதுதான்; விறகுக்காவது வரும்" என்றான் ராஜு.

"குலை முற்றிய பிறகு இந்த வாழையையும் வீசிவிட வேண்டியதுதான்" என்றாள் தாயார்.

"பாவம்—அதுவும் ஒரு தாய்க்கு ஒரு பிள்ளைதானே? பெற்றுச் சாகிறார்கள் சிலர்; பெறாமலே சாகிறார்கள் சிலர்" என்றெண்ணிய குஞ்சுவின் மனம் வேதனையில் ஆழ்ந்தது.

மேலும் அந்த மகாபாவிகள் முகங்களில் விழித்துக்கொண்டு அங்கிருக்கவே அவளுக்கு அருவருப்பாக இருந்தது; தவிர—அவள் காரியமும்தான் தீர்ந்துவிட்டதே ஒருவழியாக? அந்த மரமும் வெட்டிவீழ்த்தப்படுமுன்னர் அவளே புறப்பட்டுப் பிறந்தகம் போய்ச் சேர்ந்துவிட்டாள்.

புறப்பட்ட இடத்துக்கே போயடைவது யாருக்குமே விதிவிலக்கல்லவே? இதில் ஆச்சர்யத்துக்கு இடமேது?

ஆயினும் குஞ்சுவின் பிறந்தகத்துக் கிராமம் பூராவுமே அவள் வரவைக்கண்டு வியந்தது; வம்பளந்தது—

"புருஷனோடு சண்டைபோட்டுக்கொண்டு பிரிந்து வந்துவிட்டாளாம்' என்றது. 'அவன்தான் இரண்டாவது கல்யாணம் செய்துகொள்ளப்போகிறானாம்; மூத்த தாரம் இருந்தால் வீண் வம்பும் வழக்கும்தானே மிஞ்சும்? அதனால்தான் அவனே ஜீவனாம்சம் கொடுத்துத் தள்ளிவைத்துவிட்டானாம்' என்றது; நடத்தையில் தவறிவிட்டாளோ என்னவோ, என்று சிலர் சந்தேகித்தனர்; இத்தனை வருஷங்களாகக்கூடி வாழ்ந்தவளுக்கு இப்போது மட்டும் திடீரென்று விலக்க என்ன அவசியம் வந்துவிட்டது' என்று கேட்டு, தங்கள் சம்சயத்துக்கு ஆதாரமும் தேடித்தந்தனர்; குழந்தையே பிறக்கவில்லை என்று தள்ளிவிட்டானாம்' என்றனர் சிலர்; இந்தப் பெண்ணுக்குக் கர்ப்பப் பையே இல்லையாமே' என்று திரித்தவர் சிலர்.

"ஏண்டீ அசட்டுப் பெண்ணே? உன் உரிமையையும், அதிகாரத்தையும் இப்படி அநியாயமாக இன்னொருத்திக்கு விட்டுக்கொடுத்துவிட்டு வருவாயோ? பெண் பிறவியே இல்லையடீ நீ!" என்று அவளிடமே சொல்லியும் சிலர் நையாண்டி செய்தனர்.

"உன் புக்ககத்துக்காரர்களுக்குச் சொத்தும், பணமும் கொட்டிக்கிடக்கிறதாமே? வந்ததுதான் வந்துவிட்டாய்; அந்தச் சொத்தில் பாதியையாவது பிரித்துத் தரச்சொல்லி வாங்கி வந்திருக்கக்கூடாதோ? நியாயமாக எல்லாமே உன்னைச் சேரவேண்டியதுதானே! இப்படியும் உண்டோடீ? உன்னைப்போல் ஒரு அதிசயப் பிறவியை நான் பார்த்ததேயில்லை போ!" என்று அவளுக்குப் பரிவதுபோல் பேசிக் கிண்டிவிட முயற்சித்தவர்களும் உண்டு.

"நீ முரண்டிக்கொண்டு நின்றிருந்தால் அவர்களால் ஒன்றுமே செய்திருக்க முடியாது; உன் காலில் விழுந்து கெஞ்சக்கூட அவர்கள் தயாராக இருந்திருப்பார்கள்; நீதான் ஏமாந்துவிட்டாய்—பாவம்!" இப்படிச் சிலர்.

குஞ்சு எல்லாவற்றையும் கேட்டுச் சகித்துக்கொண்டுதானிருந்தாள். ஏற்கனவே கோழை மனது அவளுக்கு; இத்தகைய பேச்சுக்கள் அவளை மேலும் கலங்க அடித்தன,

'புக்ககத்துப் பிடுங்கல் விட்டால் போதுமென்ற நினைப்பிலே அப்போதைக்கு, உதறிக்கொண்டு வந்துவிட்டாள். அவளுக்கே 'குழந்தை பிறக்கவில்லையே' என்ற ஏக்கம் சதாசர்வதா உள்ளத்தைக் குடைந்துகொண்டேயிருந்தது; இனி ஒருகாலும் பிறக்கவும் போவதில்லையென்ற ஏமாற்றத்திலே அவர்களாவது சந்தோஷமாயிருக்கட்டுமென்று விட்டுக்கொடுத்து வந்துவிட்டாள். இப்போது கிராமத்தின் கிண்டலைக் கேட்டபின்னர்—'நிஜமாகவே ஏமாந்துதான் வந்துவிட்டோமோ' என்ற வேதனை உள்ளத்தைக் கவ்விக்கொண்டுவிட்டது.

பைத்தியம் பிடித்துவிட்டதுபோலவே குஞ்சுவின் உள்ளத்திலே ஒரு உணர்ச்சி ஊடுருவி வெட்டியது.

அவளுடைய தகப்பனார் அவருடைய கடைசி காலத்திலே பைத்தியம் பிடித்துப் பாயைச் சுரண்டிக்கொண்டுதான் பிராணனை விட்டார்; அவர் உத்தியோகம் பார்த்த காலத்திலே—ஏதோ நெருக்கடி காரணமாக ஆபீஸ் பணத்தைக் கொஞ்சம் கையாடிவிட்டாராம். அந்தக் காரணத்தால் அவரை வேலையைவிட்டு நீக்கிவிட்டார்கள், பின்னர் அதே ஏக்கத்திலே அவருக்கு மூளை கலங்கிவிட்டதாம்—

அந்த மூளைக் கலக்கம் தன்னையும் பற்றிக்கொண்டுவிடுமோ என்று அடிக்கடி நினைத்துக்கொண்டு குஞ்சு பயந்தாள்.

எல்லாரிடமும் சிடுசிடுக்கத் தொடங்கினாள்; மனம் போனபடி பேசத் தொடங்கினாள்; காரணமில்லாமல் எரிந்து விழுந்தாள்; அர்த்தமின்றி ஏதாவது சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

அவளுக்கு அரைக்கலக்கம் என்றே அநேகமாக அனைவரும் தீர்மானம் செய்துவிட்டார்கள். 'அவளால் தாங்க முடியாத அளவுக்கு மன வேதனைக்கு ஆளானவள்' என்று கருதி அவளிடம் பரிவுகொண்டு அவளைச் சேர்ந்தவர்கள் அவளுக்குக் குறுக்கே பேசுவதேயில்லை; எப்படியோ—நிம்மதியாக இருந்தால் போதும் என்ற எண்ணத்திலே அவளை எதற்கும் கடிந்துகொள்வதேயில்லை.

முதல் முதலாக அவளுக்குச் சேரவேண்டிய ஜீவனாம்சத் தொகையென்று ஏதோ அவள் பெயருக்கு மணியார்டர் வந்தபோது சில நிமிஷங்கள் வரையில் செய்வதறியாமல் திகைப்பவள்போலே அவள் மலைத்து நின்றாள்.

"உம்! என்ன முழித்துக்கொண்டு நிற்கிறாய் குஞ்சு? கையெழுத்துப் போட்டுவிட்டு உன் பணத்தைப் பெற்றுக்கொள்; இனிமேல் அநேகமாக, மாதம் தவறாமல், இதேபோல் உனக்கு மணியார்டர் வரும்" என்று சிரித்தான் பிராஞ்சு போஸ்டுமாஸ்டராக வேலை பார்த்துவந்த அம்பி; அவன் குஞ்சுவைவிட நான்கைந்து வருஷங்களுக்குப் பெரியவன்.

"இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு நான் என்ன செய்வது அம்பி?" என்று திருப்பிக்கேட்டாள் குஞ்சு.

"பணத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்றா கேட்கிறாய்? உன் இஷ்டப்படி செலவிடுவது!" என்று சிரித்துக்கொண்டே அம்பி சொன்னான்.

"இது நான் செலவு செய்யத் தகுந்த பணமில்லை அம்பி; பண உருவத்திலே என்னைப் பீடிக்க வந்த பிசாசு இது; என்னுடைய இப்போதைய நிலையைக் கண்டு எள்ளி நகையாட வந்துள்ள பேராசையின் புது உருவம்; நான் மனைவியாக இருக்கத்தகுந்த யோக்யதை உடையவளல்ல என்று சொல்லப்படுவதை ஊர்ஜிதமாக்க வந்திருக்கும் சதியின் பேய்ச் சக்தி; அம்பி! என் பெண்மைக்கே இது ஒரு சூட்டுக்கோல் அம்பி; நன்றாகத் தெரிந்துகொள்!" என்று வெறி பிடித்தவளைப் போலே குஞ்சு பேசினாள்.

அவள் பேச்சின் போக்கைக் கண்டு அம்பி அயர்ந்துபோனான்; "இப்போது என்ன செய்ய வேண்டுமென்கிறாய் குஞ்சு?" என்று சொல்லவொண்ணாத அதிசயப்பட்டுக்கொண்டு அவன் வினவினான்.

"திருப்பி அனுப்பிவிடு அம்பி; இந்த மகா பாவத்தை நான் விரலாலும் தொடமாட்டேன்" என்று 'பளிச்'சென்று பதில் சொல்லிவிட்டாள்.

"நிஜமாகவா?" என்றான் நம்பமுடியாமல்.

"தீர்மானமாக! நானே இதைப்பற்றி நாலு வரிகள் எழுதித்தருகிறேன்; அவர் விலாஸத்தை எழுதி நீயே அனுப்பிவிடு!"

"அவருக்கு நீ எழுதுவதைக் கவரில் போட்டு ஒட்டி நீயே விலாஸத்தையும் எழுதிக்கொண்டு வந்துவிடேன்?" என்றான் அம்பி.

"இனிமேல் அந்த மனிதரின் பெயரை என் கையாலும் எழுதமாட்டேன்; என் மனத்தாலும் நினைக்கமாட்டேன்—இது சத்யம்; எனக்கும், அவருக்கும் இருந்த தொடர்பு நான் இங்கு வந்துவிட்ட அன்றே அறுந்துவிட்டது."

அப்புறம் அவள் எழுதிக்கொண்டுவந்த நான்கு வரிகள் தெரிவித்தது: "உங்கள் நிழலில்—உங்கள் ஆதரவில்—நான் இருந்தவரையில்தான் உங்களையும்—உங்கள் சோற்றையும் நம்பிக்கொண்டு காலம் கழிக்கவேண்டியிருந்தது; என்று என்னை விலக்கிவிட்டீர்களோ, அன்று முதலே நமக்குள் இருந்த உறவும் தீர்ந்துவிட்டது; இனி உங்களுக்கும் எனக்குமே தொடர்பு இல்லையென்றால் உங்கள் பணத்திற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? கைகள் இருக்கின்றன. உடம்பும் உறுதியாகத்தான் உள்ளது; அவற்றைக்கொண்டே இனி என் வயிற்றைக் கழுவிக்கொள்ளும் தைர்யம் எனக்கு உண்டு." என்று மொட்டையாக எழுதி முடித்து, "குஞ்சு" என்று கையொப்பம் வைத்திருந்தாள்.

அவள் புருஷனின் விலாஸத்தை எழுதி, அம்பிதான் அதைத் தபாலில் சேர்த்தான்.

நான்கு நாட்களுக்கெல்லாம் குஞ்சுவின் கணவனிடமிருந்து அவளுக்குக் கடிதம் வந்தது.

"என்னவாம்? நீயே அதையும் உடைத்துப் படி" என்று வெகு அலட்சியமாகச் சொன்னாள்.

"உன் புருஷனிடமிருந்து உனக்கு வந்துள்ள கடிதத்தை நான் பிரித்துப் பார்ப்பது முறையா குஞ்சு?" என்று அம்பி மறுத்தான்.

"அம்பி! 'என் புருஷன்' 'என் புருஷன்' என்று பன்னிப் பன்னிப் பேசுகிறாயே? யார் இனி எனக்குப் புருஷன்? என் கணவன் என்றோ இறந்துவிட்டான்!—அம்பி! அந்தக் காலத்திலே என்னை உனக்குத்தான் கொடுப்பதாக ஒரு பேச்சு நடந்து வந்தது; உனக்கு நினைவிருக்கிறதோ? நான் மறக்கவில்லை; அந்தப் பேச்சு அப்புறம் எப்படியோ முறிந்துபோய்விட்டது. இப்போது நினைத்துக்கொள்கிறேன், அம்பி! உன்னைக் கல்யாணம் பண்ணிக்கொண்டிருந்தாலாவது நான் குழந்தை குட்டிகளைப் பெற்று இன்பமாக இருந்திருப்பேனே என்று!—அம்பி! அப்போதும் எனக்குக் குழந்தை பிறக்காமலே போயிருந்தால்-நீகூட என்னைத் தள்ளித்தான் வைத்துவிடுவாயோ?'

என்று கேட்டுக் குஞ்சு சிரித்தாள்; அர்த்தம் தெரிந்தோ—தெரியாமலோ—அதன் ஆழத்தை அறிந்தோ அறியாமலோ—சம்பந்தமில்லாமல் அவள் பேசிக்கொண்டேயிருந்தாள்.

ரத்தம் அம்பியின் முகத்திற்கேறிவிட்டது; ஒரு நிமிஷம் அவள் முகத்தை உற்றுக் கவனித்துவிட்டுத் தன் கையில் பிடித்திருந்த கடிதத்தின் உறையைக் கிழித்துவிட்டுப் படிக்கலானான்:

“உன் கடிதம் கண்டேன்; யாருடைய துர்ப்போதனையினாலோ நீ மனக் கலக்கம்கொண்டிருக்கிறாயென்றே கருத இடங்கொடுக்கிறது; எவ்விதத்திலோ—என்னை மடக்கிவிடலாமென்று மனப்பால் குடிக்காதே என்று உன்னை எச்சரிக்கவிரும்புகிறேன். நீ ஏற்கனவே கையெழுத்துப் போட்டுக்கொடுத்திருக்கும் ஒப்பந்தம் என்னிடம்தான் இக்கிறது என்பதை மறந்துவிடவேண்டாம்; ஜீவனாம்சத் தொகையை நீ ஏற்க மறுத்து, அதைத் திருப்பி அனுப்பிவிட்டதால் உன்கட்சியைப் பலப்படுத்திக்கொண்டுவிட்டதாக கனவு காண வேண்டாம்; ஒப்பந்தப்படி உனக்குச் சேரவேண்டியதை அவ்வப்போது கோர்ட்டில் கட்டிவிடுவேன்; நீ விரும்பும்போது பெற்றுக்கொள்ளலாம்-ராஜு” என்று அந்தக் கடிதம் பயமுறுத்தியது.

“அந்தக் கடிதத்தை நீயே நெருப்பில் போட்டுக் கொளுத்திக் கருக்கிவிடு அம்பி” என்று சொல்லிவிட்டாள் குஞ்சு; மேலும் தொடர்ந்து—“ஜீவனாம்சம் என்று குறிக்கப்படுவதைக் குழிதோண்டிப் புதைத்துவிடவேண்டும், அம்பி! கல்யாணம் என்பது முதலில் பிறக்கும் குழந்தை; முதற் குழந்தையிடம் அப்பா—அம்மா இருவருக்குமே பாசம் இருக்குமல்லவா? அப்புறம் ‘வைதவ்யம்’ என்பது கடைக்குட்டி; அதற்குப் பிறகு குழந்தை பிறக்க நியாயமில்லை என்ற கருத்தில் கடைசிக் குழந்தையிடம் பாசம் தங்குவதும் நியாயமே; இந்த ‘ஜீவனாம்சம்’ இருக்கிறதே? இதுதான் கேட்பாரற்று வளரும் இரண்டுங்கெட்டான் வகையைச் சேர்ந்தது; புருஷனுக்கும் இதனிடம் பிரியம் இருக்காது; மனைவிக்கும் இதனிடம் ‘அன்பு’ இருக்காது—நடுவில் பிறந்துவிட்டு—அனாதையைப் போலே—நானும் வளர்கிறேன் பாரு! இந்தமாதிரி!—ஆகவே நான் சொல்வது என்ன தெரியுமோ? எனக்கும்தான் இதுவரையில் ‘கல்யாணம்—ஜீவனாம்சம்’ என்று இரண்டு குழந்தைகள் பிறந்துவிட்டன; இனிமேல் கடைசிக்குழந்தையைத்தான் ஆசையோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்—என்றுதான் சொல்லவந்தேன். அம்பி! பேச்சோடு பேச்சாக இன்னுமொரு அந்தரங்கத்தையும் உன்னைக் கேட்க ஆசை: நான் விதவையாகிவிட்டால் என்னை மறுமணம் செய்துகொள்ள நீ தயார்தானா?” என்று சிரித்தாள்.

அம்பி என்ன பேசுவான்? என்ன செய்வான்?

குஞ்சுவின் மனநிலையைப் புரிந்துகொள்ளச் சக்தியற்ற நிலையிலே அவன் தன் மனநிலையே தடுமாறி விழுந்துவிட்டான்.

அந்தச் சமயம் அக்கம்பக்கத்திலே அவ்விருவரையும் கவனிப்பவர் யாருமில்லை; “குஞ்சு” என்று குழறிக்கொண்டே தாவிச்சென்ற அம்பி அவள் கரத்தை ஆசையோடு பற்றிக்கொண்டான்.

அவ்வளவுதான்; பதறிப்போன குஞ்சு தன் கையை ‘வெடுக்’கென்று பின்னுக்கு இழுத்துக் கொண்டாள்:

“அம்பி உன்னை என்னவோ என்று நினைத்துக் கொண்டுவிட்டேன்—அக்னி சாட்சியாக எனக்குத் தாலி கட்டியவன்தான் என் பெண்மையைப் பணத்திற்குப் பேரம்பேசத் துணிந்துவிட்டானென்றால்—நீ அவனையும் மீறிப்போய் என் மானத்தையே அவமானப்படுத்தத்துணிந்துவிட்டாயே? இனிமேல் யாரை நம்பித்தான் நான் இந்த உலகத்தில் உயிர் வாழ்வேன்?” என்று வெடித்துக்கொண்டு சொல்லியவளாய் விம்மி விம்மி அழுதாள்.

அம்பி நின்ற இடத்திலேயே கல்லாய்ச் சமைந்துவிட்டான்.

நாயொன்று குப்பை மேட்டிலே கிடந்து புரண்டுகொண்டிருந்தது. ●

மணல் மேடு

மாரார்

குருதாஸ் நாயுடு : ஒவ்வொரு வருஷமும், எஸ். எஸ். எல். ஸீ. யிலோ, இண்டர் மீடியேட்டிலோ, பீ. ஏ.யிலோ, கேள்விப் பேப்பர்கள் முந்தியே பையன்களுக்கு வெளியாகிவிட்டன, பையன்கள் பணம் சேமித்துக் கொடுத்தோ, வேறு எப்படியோ மோசடியாகப் பேப்பர்களைப் பரீட்சைக்கு முன்பே தெரிந்துகொண்டனர் என்று ஒரு அமளி கிளம்புகிறதே. இது ஒரு ரஸாபாஸம் அல்லவா? பரீட்சைக்கும் அதில் பையன்களுக்குக் கிடைக்கும் மார்க்குக்கும் எதற்காக இவ்வளவு மதிப்பு வைக்கவேண்டும்? மார்க்குக்குத் தக்கபடி இவன் கெட்டிக்காரன், இவன் மந்தன்; அதனால் மார்க்கு அதிகம் கிடைத்தவனுக்கு உத்தியோகம், கிடைக்காதவனுக்கு உத்தியோகம் கிடையாது என்று ஒரு முறை வைத்துக்கொள்வது எதற்காக? அதனால்தானே இப்படிப் பேப்பர் வெளியாக்குவதில் சிலர் முயற்சி செய்கிறார்கள். பொதுப் பரீட்சைக்கு இவ்வளவு கௌரவம் ஏன் கொடுக்கவேண்டும்? உயர் தரப் பள்ளிக்கூடங்களிலோ, காலேஜிலோ உள்ள வாத்திமார் இவன் கெட்டிக்காரன், இவனுக்குப் படிப்பு கம்மி, என்று சொல்லி ஒரு அத்தாட்சிப் பத்திரம் கொடுத்தால் போதாதோ?

வியாஸாசார் : நாயுடு சொல்வது ரொம்பசரி. பண்டைக்காலத்தில் சிஷ்யர் குருவிடம் வித்தை கற்றபின், பொதுப் பரீட்சை ஒன்றுக்கும் உட்காருவது கிடையாது. சிஷ்யனின் யோக்யதை அவனிடம் பல வருஷம் நன்றாகப் பழகின குருவுக்குத் தானே தெரியும். யாரோ ஒருவர் கேள்விப் பேப்பர் கொடுப்பது, யாரோ ஒருவர்—பையனை யறியாதவர்—அவன் எழுதிக் கொடுக்கும் விடைத் தாள்களைப் பார்த்து மார்க்குக் கொடுப்பது, அதன் மூலம் பையன் பாஸானான், தோற்றான் என்று நிச்சயம் பண்ணுகிறது. இந்தப் புது வழக்கம் முழுத் தப்பு என்று தோன்றுகிறது. என் பையன் பீ. ஏ. பரீட்சைக்கு இரண்டு வருஷமாகப் போகிறான். இரண்டு வருஷமும் தவறிவிட்டான். அவன் நல்ல கெட்டிக்காரன். வீட்டில் எப்பொழுதும் புஸ்தகமும் கையுமாகத்தான் இருக்கிறான். எனக்கு நன்றாகத் தெரியும்—பள்ளிக்கூடப் படிப்பு முடிந்தவுடன் அந்தந்த உபாத்தியாயரே ஒரு ஸர்டிபிகேட் ஒவ்வொரு பையனுக்கும் கொடுத்தனுப்பிவிடுவதே தருமமாகும்; அதுவே நியாயமுமாகும்.

ஜாபாலிரத்னம் ஐயர் : வியாஸாசார்வாள்! நான் இப்படிச்சொல்லுகிறேன் என்று கோபித்துக்கொள்ளக்கூடாது, உங்கள் பிள்ளை கெட்டிக்காரனா, இல்லையா, என்கிற விஷயத்தில் உங்கள் அபிப்பிராயம் மாத்திரம் போதுமா? எந்தத் தகப்பனார்தான் தன் பிள்ளை மக்கு, அவனுக்குப் படிப்பு வருவதில்லை என்று ஒப்புக்கொள்வார்? அப்படி ஒப்புக்கொண்டால் தாமும் மக்கு என்று ஒப்புக்கொண்டதாகுமல்லவா? பொதுப் பரீட்சை வைத்து, பாரபட்சமில்லாத பரீட்சகர்களை நியமித்துக் கேள்விகளுக்குச் சரியாகப் பதில் எழுதுகிறானா என்று பார்ப்பதே சரியான முறையாகும்.

சுதரிசனம் ஐயங்கார் : நீங்கள் சொல்லுவது சரி என்று தோன்றுகிறது. ஆனால் ஒரு யூனிவர்ஸிட்டி வைஸ்-சான்ஸலர், கல்வி இலாகாவிலும் கல்வித்துறைகளிலும் மிகுந்த அனுபவம் படைத்தவர், சமீபத்தில் ஒரு பிரசங்கத்தில் என்ன சொன்னார் தெரியுமா? இந்தப் பரீட்சை மார்க்குகள் பையன்களின் உண்மைத்திறனைக் காண்பிப்பதில்லை என்றார். கல்விச்சாலை நிபுணர் சொல்வதைச் சரி என்கிறதா, நீங்கள் சொல்வதைச் சரி என்கிறதா?

ஜாபாலி : அப்படி ஒரு வைஸ்-சான்ஸலர் சொல்லியிருந்தால் அது ஒரு வேடிக்கை என்றே கொள்ளவேண்டும். பரீட்சை மார்க்குகளால் பிரயோஜனமில்லையென்

றால், ஏன் அவர் தலைமையில் நடந்துவரும் யூனிவர்ஸிட்டியில் ஏராளமான பணச் செலவு செய்து பரீட்சைகள் நடத்தப்படுகின்றன? இரண்டு வருஷமோ, மூன்று வருஷமோ, படிப்பு முடிந்ததும் தாமே யூனிவர்ஸிட்டி ஆசிரியர்களின் உதவியைக் கொண்டு மாணவர்களுக்கு யோக்யதைப் பத்திரங்கள் கொடுத்துவிடலாமே.

சுதரிசனம்: நாற்பது வருஷங்களுக்கு முன் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் மாணவர்க்கு மார்க்கு ஒவ்வொரு பாடத்திலும் எழுதிக்கொடுப்போம். ஆனால் காலேஜ் பிரின்ஸிபல் அந்த மார்க்குகளை வேதவாக்கென்று கொள்ளவேண்டாம். அவனவன் பள்ளிக்கூடத்தில் அவனவன் ஆசிரியர் வருஷ முடிவில் கொடுத்திருக்கும் மார்க்குகளையும் கவனித்துத் தம் இஷ்டப்படி மாணவனை இண்டர்மீடியேட் வகுப்பில் சேர்த்துக்கொள்ளலாம் என்று ஒரு நியமம் விதித்தார்கள். அந்த வருஷம் என்ன ஆயிற்று, தெரியுமோ? உயர்தரப்பள்ளி ஆசிரியர்கள் தங்கள் இஷ்டப்படி பட்சபாதத்துடன் தங்களிடம் படித்த பையன்கள், தாங்கள் 'பிரைவேட் டியூஷன்' சொல்லிக் கொடுத்த பையன்கள்—இவர்களுக்கெல்லாம் ஒவ்வொரு பாடத்திலும் அதிக மார்க்குகள் கொடுத்தனர். தங்கள் பள்ளிக்கூடத்துக்கு நல்லபெயர் வரவேண்டும் என்ற விருப்பமும் இதற்குக் காரணம். ஆனால் எஸ். எஸ். எல். ஸி. பொதுப் பரீட்சை நடந்தபின் பார்த்தால் 50 மார்க்கு தன் பள்ளிக்கூடத்தில் கிடைத்த மாணவனுக்குப் பொதுப் பரீட்சையில் 10—12 மார்க்குகள் தான் கிடைத்தன. பையன்களின் சொந்த உபாத்தியாயருக்கு இந்தப் பொறுப்புக் கொடுத்தது விபரீதமாக முடிந்தது. அதுமாத்திரமல்ல, பணத் தட்டுள்ள சில காலேஜ்களின் பிரின்ஸ்பல்கள் தம் இஷ்டப்படி மார்க்கு வாங்கினவன், வாங்காதவன், பெரிய மனுஷ்யர் பிள்ளைகள், பந்துக்களின் பிள்ளைகள், இப்படி எல்லாரையும் சேர்த்துக்கொண்டனர். இரண்டு வருஷமானதும் இண்டர்மீடியட் பரீட்சையில் இந்தச் சோடையான மாணவர் எல்லாரும் கோட்டடித்தார்கள், உடனே யூனிவர்ஸிட்டி அதிகாரிகள் "போதும் பிரின்ஸிபல்களுக்குப் பையன்களைக் காலேஜில் சேர்த்துக் கொள்ளும் பொறுப்பைக் கொடுத்தது. அவர்களுக்குப் பையன்கள் கட்டும் சம்பளப் பணத்திலேதான் கண் இருக்கிறது. இனி நாமே எஸ். எஸ். எல். ஸி. ஸர்டிபிகேட்டில் எந்தெந்தப் பையன் காலேஜிற்கு லாயக்கு, எவனெவன் லாயக்கில்லை என்று எழுதிவிடுவோம்." என்று தீர்மானம் செய்தார்கள். அதுவே இப்பொழுதும் அனுஷ்டானத்தில் இருந்து வருகிறது.

வியாஸாசார்: பரீட்சை எழுதும்போது சில மாணவருக்கு உடம்பு அசௌகரியமாய் இருக்கலாம்; மயக்கம் வரலாம்; தலைநோவு ஜ்வரம் வரலாம். அதனால் சரியாகப் பதில் எழுத முடியாமல் இருக்கலாம். இவர்களைப் பரீட்சையில் தோற்றவர்கள் என்று தள்ளிவிடுவது என்ன நியாயம்?

ஜாபாலி: எந்தவிதமான பரீட்சை முறையிலும் ஏதாவது குறை ஒன்று இருந்தே தீரும். பள்ளிக்கூடத்திலோ, காலேஜிலோ உபாத்தியாயர்கள் சொல்லிக் கொடுத்ததைப் பையன் தெரிந்துகொண்டானா, வீண் பொழுதுபோக்கினானா என்று தீர்மானிக்கவேறு வழி நீர்தான் ஒன்று காட்டுமே, பார்ப்போம். ஆயிரம் பேருக்கு ஒருவன்தான் பரீட்சைக் காலத்தில் மயக்கம் தலைநோவு, ஜ்வரம் முதலிய கஷ்டத்துக்குள்ளாவான்.

வியாஸாசார்: பையன்களை இரண்டு மூன்று பரீட்சகர் நேரில் சந்தித்து, சம்பாஷணை செய்து, அவனுக்கு யோக்கியதை இருக்கிறதா இல்லையா என்று பார்க்கட்டுமே.

ஜாபாலி: கேள்வித்தாளைக் கையில் வைத்துக்கொண்டு அமைதியாக இரண்டு மூன்று மணி நேரம் உட்கார்ந்து ஆலோசித்துக் கேள்விக்குப் பதில் எழுதுவது கஷ்டமாம், திடீரென்று முன்பின் தெரியாத மூவர் முன் ஆஜராகி, அவர் திடீரென்று கேட்கும் கேள்விகளுக்கு உடனே பதில் சொல்வது சுலபமாம்—பலருக்குப் பிறர் முன் சட்டென்று பதில் சொல்ல முடிகிறதில்லை. சபைக் கோழையாயிருப்பது சகஜம். ஒருவன் வெகு கெட்டிக்காரனாக இருக்கலாம். ஆயினும் சரேல் என்று அயலார் முன் பதில் சொல்லும் திறன் இருப்பதில்லை. இவர்களைத் தோற்றவர் என்று நிச்சயிப்பது மாத்திரம் நியாயமாகுமோ? மேலும் நம் எஸ். எஸ். எல். ஸி., இண்டர்மீடியேட், பீ. ஏ. பரீட்சைகளுக்கு வருபவர் ஆயிரக்கணக்கானவர். இவர்களை ஒவ்வொருவராகச் சந்தித்துப், பத்து நிமிஷமாவது சம்பாஷணை செய்து யோக்யதையை அளவிடுவது அசாத்தியம். எழுதின பரீட்சையைவிட இந்தப் பேச்சுப்

பரீட்சையில் பல குறைகள் அதிகமாக ஏற்படும். ஆகவே இப்போது எழுதிவரும் பரீட்சை முறையே உள்ளவைகளுக்குள் மேலானது. பையன்களைப் பார்த்துப் பேசி மார்க்குக் கொடுப்பதானால், தம் ஜாதியினர், தம் பந்துக்கள், தமக்குச் சிபாரிசு கொண்டுவந்தவர் என்றெல்லாம் பட்சபாதம் வைத்துப் பரீட்சகர் மார்க்குகள் கொடுத்தார்கள் என்று அவர்களைத் தூற்றுவது வழக்கமாகும்.

குருதாஸ் : அது இருக்கட்டும் சர்க்கார் உத்தியோகத்துக்கும் இந்தப் பரீட்சைகளுக்கும் என்ன சம்பந்தம்? அல்ஜிப்ரா—ஜியாமெட்ரி—வேதாந்தம் இப்பேர்ப்பட்ட நூல்களில் ஒருவன் கெட்டிக்காரனாயிருந்து பரீட்சையில் நல்ல மார்க்கு வாங்கட்டும். அதனால் அவன் தாசில்தார் ஆகவோ, கலெக்டராகவோ வேலை பார்ப்பதில் மிகுந்த கெட்டிக்காரனாயிருப்பான் என்று ஏன் எண்ணவேண்டும்? ராபர்ட் க்ளைவ் என்ன பரீட்சை பாஸ் செய்தான்? ஹைதர் அலிக்கு எழுதப் படிக்கக்கூடத் தெரியாது. அப்படியிருந்தும் அவர்கள் தங்கள் ஆண்மையினாலும், சாமர்த்தியத்தினாலும் ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்துக்கொள்ளவில்லையா? அக்பருக்குக் கையெழுத்துக்கூடப் போடத் தெரியாதாம். ஆயினும் மொகலாய சக்கரவர்த்திகளுக்குள் அவரே மிகச்சிறந்த அரசர் என்று புகழ்பெறவில்லையா? பள்ளிக்கூடத்துப் படிப்பு வேறு—உலகத்தில் முன்னுக்கு வந்து கீர்த்தி பெறுவது வேறு என்று தோன்றுகிறதல்லவா?

சுதரிசனம் : நீர் சொல்வதைப் பார்த்தால் படிப்பு இல்லாதவர் எல்லாரும் சமர்த்தர். உலக வாழ்க்கையில் அவரே மேம்பட்டு நிற்பவர் என்று கருதுவதுபோலிருக்கிறது. பெரும்பாலும் பள்ளிக்கூடத்துப் படிப்பில் கெட்டிக்காரராயிருப்பவர், சர்க்கார் உத்தியோகம் முதலிய துறைகளிலும் சிறந்து நிற்பர் என்று கருத இடம் உண்டு. புத்திக் கூர்மையிருப்பதனால் அல்ஜிப்ரா, ஜியாமெட்ரியில் நிபுணராகிறார்கள். அதே புத்திக் கூர்மை உலகத்தில் இன்னல், இக்கட்டுகள் ஏற்படும் பொழுதும், அக்கஷ்டங்களை வென்று சமாளிப்பதற்கு உதவும். அதனால்தான் சுமார் நூறு வருஷகாலம் ஆங்கிலேயர் இந்தியாவை ஆளுங்கால் தங்கள் நாட்டில் ஐ. ஸி. எஸ். என்ற ஒரு போட்டிப் பரீட்சை வைத்து, அதில் தேறி முன் நின்றவரை மாத்திரம் நம் நாட்டுக்குக் கலெக்டராகவும் பொறுப்புள்ள மற்ற உத்தியோக நிர்வாகத்திற்கும் அனுப்பி

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

மதராஸ்

ஸர். A. ராமஸ்வாமி முதலியார்,
K. C. S. I., D. C. L. (Oxon)
சேர்மன்

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 18,75,000
ரிஸர்வ் நிதி ரூ. 10,75,000

சென்னையிலுள்ள ஆபீஸ்கள் :

நேதாஜி ஸுபாஷ் சந்திரபோஸ் ரோட், மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, தியாகராயநகர் & பெரியமெட்.

தென்னிந்தியாவிலுள்ள எல்லா முக்கிய நகரங்களிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன.

னர். அந்த ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர் நிர்வாகத்திலும் நடத்தையிலும் நுண்ணிய அறிவிலும் தீரத்தன்மையிலும் நிகரற்றவர் என்று பெயர் எடுத்தார்கள்.

ஜாபாலி: நம் நாட்டிலும் பெரிய உத்தியோகங்களுக்கு இப்பொழுதும் ஐ. ஏ. எஸ். முதலிய போட்டிப் பரீட்சைகள் நடத்துகிறார்கள். ஆனால் சிலர் நாயுடுகாரு சொன்ன யுக்தியைக் கூறி, இந்தப் பரீட்சைகள் பிரயோஜனம் இல்லை. வேறு முறையில் நேரில் பார்த்துச் சம்பாஷணை செய்து, எந்தக் குலம், எந்தப் பரம்பரை என்று விசாரித்து நியமிக்க வேண்டும் என்கிறார்கள். அப்படி சர்க்கார் செய்ய ஆரம்பித்தால் போதும் போதும் என்று சீக்கிரம் அதை மாற்றி, மறுபடியும் எழுதும் பரீட்சை வைப்பார்கள். என் உத்தியோக அனுபவத்தில் பார்த்ததைச் சொல்லுகிறேன். பெரிய மனுஷ்யாள் வீட்டுப் பையன் என்கிறவர்கள் பலர் அயோக்கியர்களாகி லஞ்சம் வாங்குகிறதையும் கண்டிருக்கிறேன். ஏழைகள் ஐ. ஸி. எஸ். பாஸ் பண்ணினவர் லஞ்சம் கொடுக்க வந்தவனைச் செவிட்டில் ஒரு அறை அறைந்து துறத்தினவரையும் கண்டிருக்கிறேன். நம் நாட்டுப் பாங்குகளில் ஏஜண்டாகப் பெரியமனுஷ்யர் பிள்ளையென்று நியமிக்கப்பட்டவர் பலர் மோசடி செய்து கைது செய்யப்பட்டிருப்பதைப் பேப்பரில்பார்த்திருக்கிறோம். பணக்காரன் பிள்ளை லஞ்சம் ஜாஸ்தி கேட்கிறான். ஏழை லஞ்சம் வாங்கினால் கொஞ்சமாகக் கேட்பான். அதுதான் வித்தியாசம். மேலும், தம் சினேகிதர், பந்து என்ற காரணத்தால் சர்க்கார் பாரபட்சம் செய்து பெரிய உத்யோகங்களைத் தங்களுக்கு தாட்சிண்யம் உள்ளவர்களுக்குக் கொடுக்கின்றனர் என்று எங்கும் மக்கள் முறையிடுவார்கள்.

சுதரிசனம்: ஒரு உத்யோகம் காலி என்று வைத்துக்கொள்வோம். இருநூறு பேர் தமக்கு அந்த வேலை வேண்டும் என்று மனுப்போடுகிறார்கள். கொடுக்கவேண்டிய உத்யோகம் ஒன்றேதான். எப்படி ஐயா நூற்றுத் தொண்ணூற்றென்பது பெயரை விலக்கி, ஒருவனுக்கு மாத்திரம் அதைக்கொடுப்பது? போட்டிப் பரீட்சை வைத்து அதில் இருநூறு பெயரையும் எழுதச்சொல்லி, யார்பேப்பர் இது என்று தெரியாதமுறையில் தக்க நிபுணரைக் கொண்டு அந்தப் பேப்பர்களைப் பார்த்து, மார்க்குகள் போட்டு, முதலில் யார் நிற்கிறானோ அவனுக்கு அந்த உத்தியோகத்தைக் கொடுப்பதே சரியான முறை என்று தோன்றுகிறது. வேறு எந்த முறையைக் கையாண்டாலும் அதைப் பற்றித் தூஷணங்களும், தோஷங்களும் மிகுதியாக ஏற்படும்.

வியாஸாசார்: உத்தியோக நிர்வாகத்துக்கு முக்கியமாக வேண்டியவை நன்னடத்தை, ஒழுக்கம், நெஞ்சில் இரக்கம், ஆண்மை, தைரியம் இவைதான். அல்ஜிப்ரா, ஜியாமெட்ரி—ஸயன்ஸ்—இங்கிலீஷ், இலக்கியம் இவைகளில் தேர்ச்சி பெற்றவருக்கு நல்லொழுக்கம் இருக்கிறதென்று எப்படிச் சொல்லமுடியும்?

ஜாபாலி: இந்தப் பாடங்களில் தேர்ச்சி பெறாதவர் ஒழுக்கத்தில் சிறந்தவர் என்று சொல்லுகிறீரா? மனுஷ்யன் நெற்றியில் இவன் நல்லவன் இவன் கெட்டவன் என்று எங்கே ஐயா எழுதியிருக்கிறது? நேரில் ஒரு வாலிபனிடம் கால் மணி, அரை மணி, ஒரு மணி பேசினாலும் அவனுடைய உண்மையான சுபாவத்தை எளிதில் அறிய முடியுமா? தேன் ஒழுக வேதாந்தம் பேசிக்கொண்டு லஞ்சம் வாங்குகிறதற்கு இரண்டு கை போதாது என்றிருந்த பெரியோர்களைப் பற்றிக் கேட்டிருக்கிறோம். ஏதோ உத்தியோகத்துக்கு வருகிறவன் தன் உபாத்தியாயர்களிடமிருந்தும் மற்றும் அந்தந்த ஊர்களில் பிரமுகர் என்று சொல்லப்பட்டவரிடமிருந்தும் நன்னடத்தைப் பத்திரம்வாங்கிவரவேண்டும். அதை நம்பத்தான் வேண்டியிருக்கிறது. சிலர் யோசிக்காமல் அத்தாட்சிப் பத்திரம் கொடுத்துவிடுகிறார்கள்; அது தப்புத்தான். ஆனால் வேறு வழி என்ன இருக்கிறது? உத்தியோகத்தில் அமர்ந்தபிறகு தப்புத்தண்டா, லஞ்சம் முதலியன செய்தான் என்று ருஜு ஏற்பட்டால், தயை தாட்சிண்யமில்லாமல் உடனே கடுந் தண்டனை கொடுத்து வேலையை விட்டு நீக்கி விடவேண்டும். இப்படிச் செய்தால் ஒரு அத்து இருக்கும். தர்மாமிடரைக்கொண்டு ஜ்வரப் பரீட்சை செய்வதுபோல் நல்லொழுக்கத்தைப் பரீட்சை செய்யக் கருவி வேறொன்றும் இருப்பதாகத்தெரியவில்லை.

சுதரிசனம்: நாம் ஏதோ பேசிப் பேசிக் குறுணியைப் பதக்காக்கிவிட்டோம். சர்க்கார் நம் ஆலோசனைகளை ஒப்புக்கொள்வதாக நமக்கு வாக்கு ஒன்றும் அளிக்கவில்லை. போகலாம், நேரமாகிவிட்டது. ●

துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

S. 151-50 TM

குணத்தில் உயர்ந்தவை! தரத்தில் சிறந்தவை!!

ஆனந்தா பன்னீர் தொழிற்சாலையில்

தயாரிக்கப்படும்

- உயரிய ஆனந்தா பன்னீர் நெ. 240
- " " அரைக்கீரைவிதைத் தைலம்
- " " சந்தனாதித் தைலம்
- " " வாசனைச் சுண்ணாம்பு
- " " ஓமம் வாட்டர்
- " " சோம்பு அரக்கு
- " " டிஸ்டில்டு வாட்டர்
- " " ஜெயின் பல்பொடி
- " " பாபுலர் பல்பொடி (பாக்கெட்)

இவைகளையே

எப்பொழுதும் வாங்கி உபயோகியுங்கள். எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

விபரங்களுக்கு எழுதுக:—

ஆனந்தா பன்னீர் தொழிற்சாலை

இராயப்பேட்டை, - மதராஸ்-14.

DON'T WORRY !!

Try "**KUMARI**" (Tablets) to remove your anxieties over difficult days and fear of periodical delays at any stage, under any circumstances and prevent future troubles! Speedy and harmless !! Thousands satisfied !!! Normal potency Rs. 3. Special Rs. 5. Extra Special Rs. 8. (V. P. Extra)

Mrs. P. DEVEE, F. D. S. (C. M.)

TOLLYGUNGE, CALCUTTA - 33.

கீழ்க் கண்டவர்களிடமும் கிடைக்கும் :—

(1) நாதம் & கோ.
மட்டஞ்சேரி
கொச்சின்

(2) இண்டோ மெடிகல் சப்ளைஸ்
205, தங்கசாலைத்தெரு,
(மிண்ட் ஸ்டிரீட்)
மதராஸ்-1

(3) நியூ டவுன் ஏஜன்ஸீஸ்
804-B. "ஹரிநிவாஸ்"
வின்ஸெண்ட் ரோடு
தாதர் - பம்பாய் - 14

(4) L. M. முகர்ஜி & ஸன்ஸ் லிமிடெட்
167, தாரம்தலா தெரு
கல்கத்தா

(5) ஆந்திரா எம்போரியம்
76-78, டூப்ளெக்ஸ்தெரு
புதுச்சேரி

(6) பயனீர் பார்மஸி
188, மெயின் ரோடு
பேட்டா - கொழும்பு
(இலங்கை)

(7) ஓவர்ஸீஸ் ஜெனரல் ஏஜன்ஸி
72, அம்பாங் தெரு
கோலாலம்பூர் (மலேயா)

Wanted Stockists in Unrepresented Areas on Favourable Terms

READ WHAT SATISFIED CUSTOMERS SAY !

K. P., Bombay-"More than four months' overdue was restored to its usual state after using only 2 phials of Special Tablets."

V. K. East Africa-"Tried many similar products. None ever worked but only one packet of your Extra-Spl. tabs. brought wonderful results."

K. L. R., Ceylon—"Remember. I bought two phs. of your medicine which relieved my patients wonderfully. Send 6 phs. more per return."

Mrs. David Bangalore—'Your KUMARI is a miraculous preparation. You have saved my life. I must introduce this to my friends,'

Almost daily, lot of unsolicited appreciations pouring in our files from differnt parts of the World.

லண்டன் கடிதம்

லீலா கோபாலன்

லண்டனில் சென்ற இரு தினங்களாக, சூரிய பகவான் நன்றாகப் பிரகாசிக்க ஆரம்பித்து இருக்கிறார். பூந்தோட்டங்களும், மைதானங்களும் சந்தோஷத்துடன் கூச்சல் போட்டு அமர்க்களப்படுத்தும் குழந்தைகள், ஆண், பெண், வயோதிகர்கள் யாவரும் நிறைந்து காணப்படுகின்றனர். ஏப்ரல்மாதம் 15 ஆம் தேதி நள்ளிரவு 2 மணிக்கு இங்கே கோடைக்கால மணிநேரம் ஆரம்பம் ஆயிற்று. அப்படி என்றால் என்ன? எப்பொழுதும் உள்ள கிரீன்விச் மெரிடியன் (Greenwich Meridian) மணி நேரத்திற்குச் சரியாக ஒரு மணி நேரம் கடிகாரங்கள் முன்கூட்டப்பட்டன. இதனால் என்ன உபயோகம் என்று நீங்கள் யோசிக்கலாம். சாதாரணமாக, குளிர் காலத்தில்எல்லாம் வெளிச்சமும் இருக்காது, குளிரில் மக்களுக்கு வெளியில் செல்லவும் பிடிக்காது. ஆனால் மார்ச் மாதக் கடைசியிலிருந்தே நல்ல சூரிய வெப்பம் இல்லாவிட்டாலும், வெளிச்சம் மட்டும் மாலை 7–30 மணிவரை நீடித்திருக்கும். கோடைக்காலம் மத்தியில் இரவு 9 அல்லது 10 மணிவரையில் கூட விளக்கு வெளிச்சமேதேவை இல்லை. காலையிலோ 5 மணிக்கு எல்லாம் சூரிய வெளிச்சம் ஆரம்பமாகிவிடும். 1 மணி நேரமும் கூட்டப்படுவதால் இந்தக் கோடைக்கால மணி (Summer Time) அளவு. ஜனங்களுக்கு வெளியில் சென்று சினிமா, நாடகம், பூந்தோட்டம் இவைகளைக்கண்டு ஆனந்தப்பட உதவி செய்கிறது. காலையில் 1 மணி நேரம் முன்பு காரியங்களுக்குச் சென்று, மாலையில் 1 மணி முன்பு கிளம்பி வர எவ்வளவோ சௌகரியமாக இருக்கிறது.

இந்த வருஷக் கோடைக்காலம் எந்தமாதிரி இருக்கப்போகிறதோ என்று இப்பொழுதே மக்கள் கவலைப்பட ஆரம்பித்துவிட்டனர். குளிர்காலம் என்றாலும்பயம், கோடைக்காலம் என்றாலும் பயமா? பயப்படாமல் எப்படி இருக்கமுடியும் சொல்லுங்களேன். இந்த வருஷம் சென்ற 5 மாதங்களாகப்பெய்த— சென்ற இரு தினங்களாகவே ஓய்ந்திருக்கும்— மழையால் எவ்வளவு கெடுதல்கள் விளைந்திருக்கின்றனவாம். எப்பொழுதுமே இந்நாட்டில் கிராமவாசிகள்தான் சீதோஷ்ண நிலையைப்பற்றிக் கவலைப்படுவார்களாம். எப்படி இருந்தாலும் குறை கூறிக்கொண்டே தான் இருப்பது இவர்கள் வழக்கமாம். இந்த 1951 ஆம் வருஷத்திலோ கிராமவாசிகள், பட்டண வாசிகள் இருவருமாகச் சேர்ந்து புலம்புகிறார்கள். புது வருஷப்பிறப்பு அன்று பனி மழையுடன் ஆரம்பித்த மழை, அப்பப்பா! நசநசவென்று தூறிக்கொண்டே பிராணனை வாங்கிவிட்டது. ஏப்ரல் மாத முதல் வாரத்திற்குள்ளேயே மரம், செடிகொடிகள் எல்லாம் தளதளவென்ற புது இலைகளுடன் இளவேனிற்காலத்தை அறிமுகப்படுத்தும். ஆனால் இந்த வருஷம் இன்னம் மரங்கள் மொட்டையாக நிற்கின்றன, நிலங்களும் சகதி நிறைந்து விதை போடமுடியாமல், நிலச் சொந்தக்காரர்களின் மனதைக் கலக்குகின்றனவாம்.

பயிர்களின் கதிதான் இப்படி என்றால் ஆடுமாடுகளோ இன்னும் அதிகமாக அவதிப் படுகின்றனவாம். மேல் நனையாத நாள் ஒன்றாவது இல்லை. சூரிய வெளிச்சமோ கிடையாது. இவைகளும் க்ஷீணிக்க ஆரம்பித்துவிட்டனவாம். சேமித்து வைக்கப்பட்ட வைக்கோல்போர்கள் எல்லாம்கரைந்து பச்சைப் புல்லும் இல்லாமல், என்ன கதிக்கு வரப்போகிறதோ என்று வேறு நடுக்கம் இருக்கிறதாம். 1919-ஆம் வருஷத்திற்குப் பின் இந்த வருஷம்தான் பயிர்களின் விளைவு மிகவும் குறைவாக இருக்கிறது. போன வருஷத்திற்கு 20சதவிகிதம் விளைவு குறைவு குறைவு என்று பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

போதிய தான்ய வகைகள் இல்லாதலால், அதிக உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதா அல்லது முன்பு இருந்தமாதிரி ரொட்டி, மாவு முதலியவற்றை ரேஷன் செய்து கொடுப்பதா என்று உணவு அதிகாரிகள் யோசிக்கின்றனராம். சரியான தீனி போடமுடியாததால் சென்ற 2, 3 மாதமாகவே மாடுகளும் குறைவாகவே பால் கொடுக்கின்றன என்றுவேறு சொல்லப்படுகிறது. இங்கே சில மாதங்கள் பால் தட்டுப்பட்டால், பாலும் ஒரு ஆளுக்கு ஒரு நாளைக்கு ஒரு பாட்டில் வீதம் பகிர்ந்து கொடுக்கப்

படும். இந்த வருஷம் மே (**May**) மாதம் 3ஆந் தேதியிலிருந்து இங்கு 1951ஆம் வருஷத்திய பெரிய கண்காட்சியும் ஆரம்பிக்கப்போவதால் ஜனக் கூட்டம் அதிகரிக்க அதிகரிக்க உணவுப் பொருள்களின் கதி என்ன ஆகும் என்று யாவரும் பேசிக்கொள்கிறார்கள்.

வெய்யில் தான் ஆரம்பித்துவிட்டதே. பெண்கள் எல்லாம் என்ன செய்கிறார்கள்? நாட்டு நிலைமையையும், இங்கிலாந்து பண வரவு செலவுத் திட்டத்தையும் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கமுடியுமா? ஒவ்வொருவரும் தங்களுக்குக் கிடைத்த ஓய்வு நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு கடை வீதியைப் படை எடுக்க ஆரம்பித்து இருக்கின்றனர். புதிய உடுப்பு, காலணிகள், விடுமுறைக்கு வெளியில் செல்ல எடுத்துப் போகவேண்டிய சாமான்கள் யாவும் சேகரிக்க வேண்டாமா?

தலைமுடியை வெவ்வேறு மாதிரி வாரி முடிந்துகொள்ளப் பல புதிய மோஸ்தர்கள். நான்தான் முன்பே, இந்த வருஷம் இங்குள்ள பெண்கள் தலைமுடியை ஒட்ட வெட்டாமல் வளரவிடவேண்டியது இந்த வருஷ நாகரிகம் என்று உங்களுக்கு எழுதியிருக்கிறேன் அல்லவா? இந்த நீளமும் குட்டையும் இல்லாத முடியை அப்படி இப்படி வளைத்துச் சுற்றி எப்படியோ ஊசிகளையும் சில்லறை ஆபரணங்களையும் போட்டு, கண்ணைக் கவரும்படி கட்டிவிடுகிறார்கள். இந்தப் புதிய மோஸ்தர்கள் போதா என்று முன் பக்க முடியைப் பிரித்து வாரி முடிப்பதை வேறுமாதிரி ஆரம்பித்து இருக்கின்றனர். நமக்கும், ஏன் இங்குள்ளவருக்கும் நேர் வகிடு அல்லது கோணல்வகிடுதான் தெரியும். புதிய நாகரிகம் (**zig zag parting**) என்பதுதான். நான் எழுத்தில் சொன்னால் உங்களுக்குப் புரியுமா? படம் காணவும் — இதுதான் நாகரிகம் செய்யும் புதுமை.

இன்னம் 5, 6 மாதங்கள் இங்குள்ள பெண்கள் செய்யும் அமர்க்களம் சொல்லிமுடியாது. கோடைக் காலத்துடன் குஷியும் பிறந்துவிடுகிறது. கடைகளில்தான் அழகழகான உடைகள் குவிக்கப்பட்டிருக்கின்றன. எல்லாம் நல்ல மெல்லிய பட்டு அல்லது துணியினால் செய்யப்பட்டவைகள், இந்த அழகிய உடைகளை அணிந்துகொள்ள. கடைந்தெடுக்கப்பட்ட தந்தப் பதுமை போன்ற உடல் வேண்டுமல்லவா? பெருமனுக உள்ளவர்கள் இளைக்கப்பார்க்கின்றனர். இளைத்தவர் கண்டதை எல்லாம் சாப்பிட்டு வயிற்றுக்கோளாறு வருகிறதே தவிர சதை கொஞ்சம்கூடப் போடக்காணோம். இங்குள்ள டெலிவிஷன் (**Television**) நிலையத்தார் இளைக்கும் முறைகளைச் சொல்லிக் கொடுக்கப்போய் ஆபத்து வந்தது. பத்திரிகைகள் எல்லாம் உடம்பைக் கெடுத்துக் கொள்ளாமல் எப்படி பருமனைக் குறைக்கலாம் என்று எழுத ஆரம்பித்து இருக்கின்றன. இதில் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது—பருமனை அதிகப்படுத்தும் மாமிசம் உருளைக்கிழங்கு, அரிசி, சர்க்கரை இவைகளை எல்லாம் மிகவும் குறைத்துவிட்டு, காய்கறி வகைகள் (அதுவும் பச்சையாகவே) பழங்கள் இவைகளை ஏராளமாகச் சாப்பிட வேண்டியதுதான். பகல் நேரம் முழுச் சாப்பாட்டிற்குப் பதில் 2, 3 ஆப்பிள்களோ, அல்லது கிடைக்கும் எந்தப் பழமோ சாப்பிட்டால் போதும், உடலுக்கு நலம்; நல்லதேக அமைப்பும் உண்டு என்று சொல்கிறார்கள்.

இங்கிலீஷ் பெண்கள் இரு வாழ்க்கை நடத்துவதைப்பற்றி மார்கரெட்லேன் (**Margaret Lane**) என்ற பெண்மணி ஒருகட்டுரை எழுதியிருந்தார். அதைப் படிப்பதற்கு உங்களுக்கும் ஆவல் இருக்கும் என்று நினைக்கிறேன். அதின் சாராம்சம் பின்வருவதுதான்: “பெண்களின் வாழ்க்கை இந்த நவீன காலத்திலும் மிகவும் கஷ்டமாகத் தான் இருக்கிறது. வீட்டில் உள்ள அலுவல்களைக் குறைக்க எவ்வளவு புதிய புதிய சாதனங்கள் இருந்துதான் என்ன பயன்? நம்முடைய முன்னோர்களுக்கும், தாய்மார், பாட்டிமாருக்கும் எவ்வளவு வித்யாசம் இருந்தது? இவ்வளவு சௌகரியங்கள் இருந்தும் புதுமைப் பெண்கள் எவ்வித நிம்மதியும் இல்லாமல் சதா ஒரு கவலையுடன் திரியவேண்டி இருக்கிறது. சிறு பெண்களுக்குத் தங்களுக்கு வேலையில் வெற்றி பெறவேண்டுமா அல்லது கல்யாணம் செய்துகொண்டு குடும்பம் நடத்த வேண்டுமா என்ற யோசனை வந்துவிடுகிறது. கல்யாணம் வேண்டாம் என்று வேலையில் சென்று சில வருஷங்கள் சென்றதும் மன அமைதி இல்லாமல் நான் மணம் முடித்து வாழ்க்கை நடத்தி இருக்கலாமோ என்று தோன்றுமாம். அடுத்தாற்போல் கல்யாணம் செய்துகொண்டு இல்வாழ்க்கை நடத்

தும் மனைவி என்னுடைய படிப்பு, புத்தி எல்லாம் இப்படி தரை சுத்தம் செய்வதிலும் சமையலறையில் பாத்திரம் தேய்ப்பதிலும் போய்விட்டதே. நான் வேலைக்குச் சென்றிருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்துஇருக்கும் என்று அலுத்துக்கொள்கிறாளாம். ஆனால் இரண்டும் இல்லாது கல்யாணமும் செய்துகொண்டு, குழந்தைகளை வீட்டில் விட்டு வேலைக்கும் செல்லும் பெண்கள் இருக்கிறார்களே அவர்கள்பாடு என்ன சுகம்? குழந்தைகளுக்கு அன்பும் ஆதரவும் இல்லை. இந்தப் பெண்மணியோ காரியாலயத்திலும், ஒழிந்த பொழுது வீட்டிலும் வேலை பார்த்து, தேக சுகக் குறைவும், வீண் சண்டை சச்சரவும் தான் மிஞ்சும். வீட்டில் மனைவிக்கு உதவி செய்யும் கணவன்மார்களின் கதி என்ன? சாதாரணமாக வீட்டில் கணவன் செய்யும் வேலை மனைவி செய்யும் வேலை என்பதே கிடையாது? அந்த வித்தியாசம் இருந்த காலம் மலை ஏறிவிட்டது. சரிபாதி வேலையைப் பங்கிட்டுச் செய்ய இஷ்டப்படும் கணவன்மாரைத் தடுக்காதீர்கள்'' என்று எழுதி முடித்து இருக்கிறார் உங்களுக்கும் இந்தச் சந்தேகம் இருந்தால் நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

அடுத்தாற்போல் "மனைவியை அடிப்பது ரொம்ப நல்லது" என்று ஒரு பெண்மணி அதுவும் ஒரு மனைவிதான் சொல்கிறார். கல்யாணத்தில் பெண்களை நல்வழிகாட்டிச் செல்லும் சங்கம் (**Marriage Guidance Council**). இதன் தலைவி, தாம் ஒரு பெண்கள் கூட்டத்தில் பேசும்பொழுது மேல் சொன்ன படி பிரசங்கம் செய்தாராம். இதைப் பத்திரிகைகாரர்கள் விட்டுவிடுவார்களா என்ன? ஒவ்வொன்றிலும் இருந்தது. மேலும் ஆண்களுக்குச் சரிசமானமாகக் கவனிக்கப்பட வேண்டுமென்றால் பஸ்களிலும் ரயில் வண்டிகளிலும் தன் இடத்தைவிட்டு எழுந்து உங்களுக்கு உட்கார வசதிசெய்து தரவேண்டும் என்று நினைக்கக்கூடக் கூடாது. ஏன் நீங்களும்தான் நின்று பிரயாணம் செய்யுங்களேன் என்று சொன்னாராம்.

போனமாதக் கடிதத்திலேயே புதியவிவாகரத்துச் சட்டத்தின் சீர்திருத்தங்களைப்பற்றி எழுத மறந்துவிட்டேன். இரின் ஒயிட் (**Eirene White**) பார்லிமெண்ட் அக்கத்தவர்தான் இந்தப் புதிய மசோதாவைக்கொண்டுவந்திருக்கிறார். அது என்ன? அதனால் என்ன அதிக உபகாரம்? மேலே பார்க்கலாமா? இதை விஸ்தரிப்பதற்காகத்தான் கிழ்க்கண்ட உதாரணம்:— ஒரு பெண் கல்யாணம் செய்துகொண்டு ஒரு வருஷம்தான் ஆகிறது. அவளுக்குக் குழந்தை பிறக்கப்போகிறது என்று தெரிந்ததும் கணவனுக்கு ஒரே வெறுப்பு. குழந்தை என்றால் அவனுக்கு ஒரே துவேஷமாம். குழந்தை பிறந்து 3, 4 வயது ஆகியும் மனைவி பொறுமையுடன் இருக்கிறாள். ஆனால் தகப்பனாரின் வெறுப்பைக் கண்ட குழந்தை வேறு நிம்மதி இல்லாமல் இருக்கிறதாம். மனைவி தன் தகப்பனார் வீட்டிற்குக் குழந்தையுடன் செல்கிறாள். இந்தத் தம்பதிகளின் கதியைப் பாருங்கள். கணவன், மனைவி வீட்டைவிட்டு ஓடிவிட்டாள் என்று வழக்குத் தொடுத்து அவளைக் குற்றம் சாட்டியதோடும் நில்லாது அவளுக்குப் பணம் கொடுக்கவும் முடியாது என்று தீர்ப்பு வாங்கிவிடுகிறான். இங்கிலாந்தில் தற்பொழுது சுமார் 10,000 தம்பதிகள் சேர்ந்தும் வாழாமல் விவாகரத்தும் பெறாமல் தவிக்கின்றனராம். விவாகரத்து இருந்தால்தான் ஆணோ, பெண்ணோ மறு விவாகம் செய்துகொள்ளலாம். இப்படி விவாக ரத்துச் செய்யப்படாமல் இருக்கும் மக்களுக்கு ஏன் அப்படிச்செய்யத் தைரியம் இல்லை? யாரோ ஒருவர் முன்வந்துதான் வழக்குப் பதியவேண்டும். இந்தப் புதிய மசோதாவினால்—7 வருஷத்திற்குள் உள்ள காலத்தில் பிரிந்து இருந்த எந்தத் தம்பதிகளும், யாரோ ஒருவர் முன்வந்து விவாக ரத்துக் கேட்கலாம் என்பதுதான். இதனால் இரு கட்சியினருக்கும் வேறு மணம் செய்து கொள்ள வசதி தருகிறது. இந்த மசோதாவைப் பார்லிமெண்ட் அங்கத்தவர் மேலும் மேலும் அலசிப் பார்க்கிறார்கள்.

இங்கிலாந்தில் இந்த மாதம் 8-ஆம் தேதி ஜனத்தொகை எடுத்தது உங்களுக்கு எல்லாம் தெரிந்து இருக்கும். ஜனத்தொகை எடுப்பதென்றால் வீட்டுக்குவீடு எவ்வளவு நபர்கள் இருக்கிறார்கள் என்றுதான் தெரிய வேண்டும். எதற்காக "நீ எப்பொழுது பள்ளிக்கூடம் விட்டாய், உன் வேலை என்ன?, உனக்கு எவ்வளவு கல்யாணம் ஆகி இருக்கிறது, எவ்வளவு குழந்தைகள், வீட்டில் குளிக்கும் அறை உண்டா, சமையலறையில் கையலம்பும் தொட்டி இருக்கிறதா, சமயலறையை எவ்வளவு பேர் உபயோகப்படுத்துகின்றனர்? என்றெல்லாம் கேட்கிறார்கள்'' என்று பொது ஜனங்களுக்கு ஒரே ஆத்திரம். அரசாங்கம் இவை எல்லாவற்றிற்கும் சரியான பதில் கொடுத்திருக்கிறது. முதல் கேள்வியின் பதிலில் சாதாரணமாகக் கூலி வேலை செய்பவர் எவ்வளவு வயதில் படிப்பைவிடுகிறார்கள், பணக்காரர்கள் எவ்வளவு நாள் படிக்க முடிகிறது என்று தெரியும். நடுத்தர

மக்களுக்கு இன்னம் அரசாங்கம் உபகாரம் செய்யமுடியும். மற்றக் கேள்விகள் எல்லாம் வயது, வீட்டு நிலைமை இவைகளை எல்லாம் அரசாங்கத்திற்குத் தெரிவிப்பனவாம்.

இந்த ஜனத் தொகை எடுக்கும் பொழுது பெண்களுக்குத்தான் ஒரே ஆத்திரமாம். வீட்டு அதிகாரி என்று கணவனுக்குத்தான் அந்த ஜனத்தொகைப் பத்திரிகை கொடுக்கப்பட்டது. வீட்டுக்குத் தலைவி மனைவி தானே? என்று சில பெண்கள் பெரிய சண்டை போட ஆரம்பித்துவிட்டனராம். "என் கணவன் நான்தான் வீட்டுக்குத் தலைவி என்று சொல்லும்பொழுது அரசாங்கத்திற்கு இதில் தலை இட என்ன உரிமை?" என்று கேட்கிருள் ஒரு பெண். ஒரு பத்திரிகைக் காரியாலயத்தில் வேலை பார்ப்பவர் "நான் இந்த ஜனதொகைப் பதிப்பில் பங்குபெற முடியாது. தேசமெங்கும் காகிதப் பஞ்சம், டாலர் பஞ்சம், உணவுப்பஞ்சம் என்று அலறுகிறது. எப்படி காகிதத்தை வீண் அடிக்கலாம்" என்று கண்டிக்கிருர். இதனால் என்ன உபயோகம் என்று சொல்லும்பொழுது ஒருவர் வேடிக்கையாக ஜனத்தொகை எவ்வளவு என்று தெரிந்தால் பால்காரர்களுக்கு இங்கிலாந்தில் மொத்தம் எவ்வளவு பாட்டில்கள் பால் வினியோகத்திற்குத் தேவை என்று தெரியுமாம் என்று கேலிசெய்கிருர். இந்த ஜனத்தொகை விபரங்களை ஜூன் மாதத்தில் வெளியிடப்போவதாகத் தெரிகிறது.

இந்த ஊர் மகாராஜாவின் சிம்மாதனத்திற்கு அடியில் இருந்த கல்லைப்பற்றியும் அது திருட்டுப் போனதைப் பற்றியும் உங்களுக்குச் சொன்னேன் அல்லவா? அந்தப் புகழ் பெற்ற பாராங்கல் கண்டுபிடிக்கப்பட்டுத் திரும்பவும் லண்டனுக்குக் கொண்டு வரப்பட்டது. இதைத் திருடிச்சென்றவர்கள் 5, 6 மாணவர்கள், ஸ்காட்லாந்தைச் சேர்ந்தவர்கள். இந்தக் கல் 300 வருஷங்களுக்கு முன் இங்கிலாந்தும், ஸ்காட்லாந்தும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டுமென்று சமரசம் செய்தபின் லண்டனுக்குக் கொண்டுவரப்பட்டது. இந்தக் கல் இல்லாது தங்கள் தேசம் சுபிட்சமற்றுவிட்டது. என்று ஸ்காட்லாந்தில் ஒரு அபிப்பிராயம். அதற்காகத்தான் இந்தப் பெரிய திருட்டும், அதைக் கண்டுபிடிக்கச் செலவு செய்த 1000 கணக்கான பவுன்களும். இந்தத் திருட்டு நடந்தவுடன் இந்த நாட்டு மன்னரும் கலக்கமடைந்தாராம். இந்தக் கல்லுக்கும் தங்கள் குடும்பத்திற்கும் ஏதோ சம்பந்தம் உண்டு என்று ஐதீகமாம். இந்தத் திருட்டில் புகுந்த 6 மாணவர்களுள் ஒரு பெண்ணும் இருக்கிருள். திருட்டுக் கண்டுபிடிக்கப்பட்டு வழக்கு நடக்க ஆரம்பித்த பிறகு, இதில் பங்கெடுத்தவர்களைத் தண்டிக்கப்போவதில்லை, வழக்கும் ரத்தாகிவிட்டது என்று அரசாங்கம் சொல்லிவிட்டது. இதுவும் ஸ்காட்லாந்தின் அதிர்ஷ்டம்தான்.

இந்தக் கடிதத்தின் கடைசி பக்கத்தில் இந்த வருஷத்திய இங்கிலாந்து வரவு செலவுத் திட்டத்தைப்பற்றிச் சற்றுச் சொல்லிவிட்டு முடிக்கிறேன். பொக்கிஷ மந்திரி (H. Gaits-kell) பொதுமக்களுக்குப் பேசும் பொழுது மூன்று விஷயங்களைப்பற்றி நன்கு கவனிக்கவேண்டும் என்ருர். முதலாவது தேசப் பாதுகாப்புக்காக சைன்யங்களை ஆதரித்துப் புதிய புதிய செலவுகளைச் செய்ய வேண்டும். (2) வெளி நாடுகளுக்கு அனுப்பும் சாமான்களை எல்லாம்விட நாம் இறக்குமதி செய்யும் பொருள்களின் விலை அதிகம். (3) உற்பத்தி தடைபட்டதால் ஏற்பட்டிருக்கும் மூலப் பொருள்களின் பஞ்சம். இப்படிப் பேசி முடித்துவிட்டு மஹானுபாவன் சென்ருரே என்ன புதிய மாறுதல்? கீழேகண்டவைதான்: வருமான வரி அதிகம். தந்தி, பணம் அனுப்பும் (Money order,) டெலிபோன் பணம் எல்லாம் வரிசையாக அதிகரிக்கப்பட்டன. உல்லாச வாழ்க்கை நடத்த உபயோகப்படும் மோட்டார் வண்டி, ரேடியோ, டெலிவிஷன் கருவி எல்லாம் விற்பனை வரி (Purchase Tax) அதிகரிக்கப்பட்டது. இதனால் பொது ஜனங்களின் மனது எப்படி இருக்கிறது. எல்லோருக்கும் ஒரே ஆங்காரம்தான. ஒவ்வொரு கடையிலும் சாமான்கள் விலை கூட்டப்பட்டு ஸாரி—நியூ பட்ஜட் பிரைஸ் (Sorry—New budget price) என்று அங்கலாய்க்கிறது. பெண்களுக்கு மனது எப்படி இருக்கும? சமையலறைச் சாமான்கள் கூட விலை அதிகம்தான். ஆனால் கடையில் உள்ள பழைய பொருள்களை முன் இருந்த விலையில்தான் விற்கவேண்டும். அதனால் சில கடைகளில் பிரி பட்ஜட் பிரைஸ் (Pre-budget price) என்று விளம்பரம் காண்கிறது. மற்றவை அடுத்த கடிதத்தில். ●

(ராகமாலிகை தொடர்ச்சி)

ஸ்ரீ ஸ்துதி

புதுச்சேரி தியாகப்ரும்ம மியூஸிக் அகாடமி பிரின்ஸிபால் ஸங்கீத வித்வான் (கல்கத்தா) A. K. ராகவாச்சாரியாரால் வர்ணமெட்டு அமைக்கப்பட்டது.

त्वामेवाहुः कतिचिदपरे त्वत्प्रियं लोकनाथं
किन्तैरन्तः कलहमलिनैः किञ्चिदुत्तीर्य मग्नैः ।
त्वत्संप्रीत्यै विहरति हरौ संमुखीनां श्रुतीनां
भावारूढौ भगवति युवां दैवतं दम्पती नः ॥

த்வாமேவாஹு: கதிசிதபரே த்வத்ப்ரியம் லோகநாதம்
கிம்தைரந்த: கலஹமலினை: கிஞ்சிதுத்தீர்ய மக்னை: |
த்வத்ஸம்ப்ரீத்யை விஹரதி ஹரௌ ஸம்முகீநாம் ச்ருதீநாம்
பாவாரூடௌ பகவதியுவாம் தைவதம் தம்பதீந :॥ [9]

ஆபேரி **ஆதி 2 களை**

லகு	த்ருதம்	த்ருதம்
ஸ்ா ; ; ; ஸ் ஙி நீ தா ; த ம பா ஸ் நீ, ஙி தா ப மா ;	கா கா கா ; மா கா மா பா	பா, ரி கா ரீ ஸா நீ ஸா ;
த்வா மே வா ஹு	க தி சி	த ப ரே
கா ; கா ஸா கா கா மா ; மா ப த பா, ம கஸ கம பா ;	மா பா ஸ் ஙி ஸ்ா ஙி த பா மா, க	க ரி ஸ ரி ப ம க ரி ஸா நீ ஸா ;
த்வ த் ப்ரி ய ம்	லோ க	நா தம்
ப நீத பா, ஸ் ஸ்ா நீ ஸ்ா ; நீ ஸ்ா ஸ்ா ம் க் க் ·ரி ·ரீ ஸ்ா ;	ஙி பா, ஙி ப நீ ஙி தா ப மா ;	ம த ப ம க மா க ஙி ஸ க ம பா ;
கி ந் தை ர ந்த	க ல ஹ ம	லி னை
ப ஙி பா நீ ஸ்ா ஸ் ஙி நீ தா பா மா பா ஙி ப நீ ஙி ஙி த ப ம் க ரீ	க ரி ஙி ஸ க ம ப ஙி ஸ்ா ; ஙி த ப ம க ரி ஙி ஸ ம கா ரி ஸா நீ ஸா ;	
கி ஞ்சி ' து த்தீ ர்ய	ம	க்னை

மத்யம கால நடை

பா ; ம த ப ம கா ரி ஸ ஙி ஸா நீ ஸா கா ஸா ; கா மா ;	கா மா பா பா நீ நீ தா பா	; பா ஸ்ா நீ ஸ்ா ; ; ;
த்வத் ஸம் ப்ரீ த்யை வி ஹ ர தி ஹரௌ	ஸ ம் மு கீ நா ம்	ச்ரு தீ நாம்
க்ா ; ஸ் ·ரீ ஸ் ஸ் ஙி நீ நீ ; நீ ஸ் ஙி ஙி த த ப, த பா ப ம மா	ரீ நீ ஸா கா மா பா கா மா	பா ; ஙி தா பா மா பா நீ
பா வா ரூ டௌ ப க வ தி யு வாம்	தை வ தம் தம்	ப தீ ந

ஸ்வர ஜதி

ஸ்ா ; ; ஸ்ா நீ தா பா த ப ப ம மா கா ரீ ; மா கா ரீ	ஸா நீ ஸா ; ரீ நீ ; ஸா	கா மா பா நீ ஸ்ா ; : பா
ஸா த த க தி ன தாம் கா ரீ த த ரி	கி ட தொம் ரீ நீ த	தி மி தி ன தாம் பா
; ·ரீ ; ·ரீ ஸ்ா நீ தா ப த ப ம மா ; பா ; நீ ; நீ	தா பா ம ப கா ரீ ; ; நீ	; ஸா ; ஸா கா மா பா நீ
ரீ த தி கி ண தொம் தாம் பா நீ த	தி கி ண தொம் தாம் நீ	ஸா த தி கி ண தொம்

आपन्नार्तिप्रशमनविधौ बद्धदीक्षस्य विष्णोः
आचख्युस्त्वां प्रियसहचरीं ऐकमत्योपपन्नाम् ।
प्रादुर्भावैरपि समतनुः प्राध्वमन्वीयसे त्वं
दूरोत्क्षिप्तैरिव मधुरता दुग्धराशेस्तरङ्गैः ॥

ஆபந்நார்த்தி ப்ரசமநவிதௌ பத்ததீக்ஷஸ்ய விஷ்ணோ :
ஆசக்யுஸ் த்வாம் ப்ரிய ஸஹசரீம் ஐகமத்யோபந்நாம் |
ப்ராதுர் பாவைரபி ஸமதநு: ப்ராத்வ மந்வீய ஸேத்வம்
தூரோத்க்ஷிப்தைரிவ மதுரதா துக்த ராசேஸ்தரங்கை:|| [10]

நாடகப்ரிய **ஆதி 2 களை**

லகு	த்ருதம்	த்ருதம்
ஸா ; ; தா, ஸ் நீ நி த தா ; ; த நி தா ப த பா மா, க	; கா ம பா ம க ரி ரீ ஸ ரீ நி	ஸா ; ஸா ரீ கா ; ; ;
ஆ ப ந்நா ர்த்தி	ப்ர ச ம ந	வி தௌ
கா, ம பா தா நீ ; நி த ப ம ப த நி த ப மா க கா ரீ ரீ ஸா	; ஸா க ரீ நி ஸா ; ஸா ரீ	கா மா பா கா மா பா ; ;
ப த்த தி க்ஷ ஸ்ய	வி	ஷ்ணோ
ஸ்ா நி நி த தா ; ; தா பா மா பா தா, நி ஸ்ா நீ ஸ்ா ;	; க்ா க் ரி ·ரீ ·ரீ, நி ·ரி நி ·ரீ	·ரீ, க்ம்ா ப்ம் க ரீ, ·ரி ஸ்ா நி ஸ்ா ;
ஆ ச க்யு ஸ்த்வாம்	ப்ரிய ஸ ஹ	ச ரீ
க்ரீ நி ஸ்ர் ரி நி ஸ்ா ; ; ; நி ஸர் த த ஸ் நீ நி த பா மா, க	கா ம க மர் ப க ரீ ஸா ரீ நீ	ஸா ரீ கா மா நி த ப த நீ ;
மை க ம த்யோ ப	ப	ந்நாம்

மத்யம கால நடை

தா நீ தா ; நி த பா ப ம மா பா தா நீ நீ தா மா பா ;	பா தா நீ மா பா தா கா ரீ	கா கா மா பா தா நீ பா தா
ப்ரா துர் பா வை ர பி ஸ ம த நு	ப்ரா த்வ ம ந் வீ	ய ஸே த்வம்
மா பா தா நீ ·ரீ ஸ்ா ஸ்ா ·ரீ க்ா க் ரி ·ரீ ஸ்ா ·ரீ நீ ஸ்ா ;	பா தா நீ ஸர் தா நீ நீ பா	தா தா மா பா மா பா தா நீ
தூ ரோ த்க்ஷி ப்தை ரி வ ம து ர தா	து க்த ரா சே	ஸ்த ரங்கை.

ஸ்வர ஜதி

ஸர் ; ; நீ தா பா மா கா ; கா ரீ ஸா ரீ ; கா ஸா	ரீ நீ ஸா ; ஸா ரீ கா மா	பா தா நீ தா ; நீ பா தா
ஸா நீ தா பா மா கா த க த ஜம் கா ஸா	ரீ நீ ஸா ஸா ரீ கா மா	த க த ஜம் நீ பா தா
மா பா ; தா ; நீ ஸர் ·ரீ ; க்ா ·ரீ ஸர் நீ தா ; நீ	; தா பா மா ; கா ரீ ஸா	ரீ கா ; மா ; பா தா நீ
மா தா தி கிண தோம் கா ரீ ஸ்ா நீ தா தி	கிண தோம் கா ரீ ஸா	ரீ தா தி கிணதோம்

(தொடரும்)

தி யுனைடெட்
கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

கல்கத்தா

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ. 8,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 4,00,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 2,00,00,000
ரிஸர்வ் நிதி	ரூ. 60,00,000

•

டைரக்டர்கள்

G. D. பிர்லா—சேர்மன்

ஈஸ்வரி ப்ரஸாத் கோயென்கா [வைஸ்-சேர்மன்]
ஆநந்த சரண் லா
பைஜநாத் ஜலான்
கோவிந்த்லால் பங்கூர்
மதன்மோகன் R. ரூயியா
மஹாதேவ் L. தஹானுகார்

ரமண்லால் ஜி. ஸரையா [வைஸ்-சேர்மன்]
மோகன்லால் L. ஷா
மோதிலால் தபூரியா
நவீன் சந்த்ர மபட்லால்
P. D. ஹிமத்சிங்கா
R. L. நோபனி

ஜெனரல் மானேஜர்

B. T. தாகூர்

•

இந்தியாவிலும் பர்மாவிலும் உள்ள முக்கிய நகரங்களில் 70 பிராஞ்சுகளுக்கு மேலும், உலகெங்கும் சேவை செய்யத் திறமை மிக்க ஏஜன்ஸி வசதிகளும் உள்ளன.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

Press, Kumbakonam